Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2011

சமூக அவலங்களை துணிச்சலுடன் வெளிக்கொணரும் ஒரேயொரு தமிழ் சஞ்சிகை



## கிறீஸ் மனிதன் வெறும் பொய்!

நேர்காணல்

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி


# இருக்கிறம்

வார இதழ்

ஒரு பொல்லாப்புமில்லை

காத்திருப்பு 01 இருக்கை 23 | 05 செப்டெம்பர் 2011 | விலை: ரூபா 30.00


நேரடி ரிப்போர்ட்

**சுகாதார சீர்கேட்டால் சீரழியும் சுன்னாகம் கண்ணகி குடியிருப்பு**

07

03

**வலிகளுடன் வாழும் உறவுகளின் கதை**

மிஸ்டர். க்றோ

05

**கலாசார சீர்கேடுகளும் ஒழுக்கம் என்பதன் அர்த்தமும்**

**பின்லேடனைப் பிடித்த உளவாளி!**

சர்வதேச புலனாய்வு

24

# அவசரகாலச் சட்டம்



# மக்களின் உணர்வலைகள்

**'அவசரகாலச்சட்டத்தை மட்டும் நீக்கினாப் போதாது. பயங்கரவாதச் சட்டத்தயும் நீக்கோணும். உது அடிக்கக்கூடாது ஆனா வெட்டலாம் எண்டுற மாதிரியல்லே கிடக்கு. அவசரகாலச்சட்டத்தை நீக்கினாப்போல அந்தச்சட்டத்தில புடிச்சு வச்சிருக்கிற ஆக்கள விட்டுடுவாங்களோ. அவங்கள் இனி உள்ளுக்குள்ள அலுவலுகள் பாத்து உவயள அந்தச் சட்டத்தில பிடிக்கேல்ல வேறசட்டத்தில பிடிச்சனாங்கள் எண்டு கதைவிடுவாங்கள். உதுகளப்பற்றிக் கதைச்சா வீண் பிரச்சினையள்தான் வரும்' என்கிறார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 58 வயதான கணபதிப்பிள்ளை தருமரட்ணம்.**

கடந்த 30 ஆண்டு காலமாக அமுலில் இருந்துவந்த அவசரகாலச் சட்டம் இனி அமுல்படுத்தப்படமாட்டாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

அவசரகாலச் சட்டம் நீடிப்பு தொடர்பான பிரேரணை எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாது என்றும், நாட்டில் முழுமையாக ஜனநாயகம் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவசரகாலச் சட்டம் அவசியமற்றது என்றும் அவர் கூறியிருந்தார். இதற்கு முழு காரணமாக இருந்து மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்ட படையினர், அர்ப்பணிப்பை மேற்கொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மக்களுடைய நினைவலைகள் எப்படியிருக்கின்றன என்று அறிவதற்காக இருக்கிறமின் நிருபர்கள் யாழ்ப்பாணம், வன்னி, திருமலை பிரதேசங்களிலுள்ள பொது மக்களைச் சந்தித்து பலத்த சிரமங்களுக்கு மத்தியில் கருத்துக்களைக் கேட்டறிந்தனர். அதிகமானோர் பயத்தில் ஒதுங்கிச் சென்றனர், சிலரோ வாய்க்கு வந்தபடி ஏசிக் கலைத்தனர், இதுபற்றிக் கருத்துக்களைக்கூற மறுத்துவிட்டனர். ஒரு சிலர் மட்டும் தமது மனதிலுள்ள நினைவலைகளை எமது நிருபர்களுடன் பயந்தபடியே பகிர்ந்துகொண்டனர். அவர்களுடைய நினைவலைகளின் உணர்வுகளை அப்படியே இங்கு தருகின்றோம்.

12ஆம் பக்கம் பார்க்க...

இருக்கிறம் வார இதழ்

**தொடர்புகளுக்கு...**

ஆசிரியர் பீடம்:
தொ.பேசி : 011 3150836
தொ.நகல் : 011 2585190

கட்டுரை/ஆக்கங்கள்:
weeklyirukkiram@gmail.com

செய்திகள்/படங்கள்:
newsirukkiram@gmail.com

விமர்சனங்கள்/ஆலோசனைகள்:
irukiram@gmail.com

விளம்பரப்பிரிவு:
011 5322730

விநியோகப்பிரிவு:
011 5322781

இணையத்தளம்:
www.irukkiram.tk

தபால் முகவரி:
03, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு-07.

# இப்படிச் சொல்லுகினம் பாருங்கோ!



'வடபகுதி மக்கள் எமது அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கினால் மட்டுமே உங்களுக்கு சலுகைகள் கிடைக்கும். தமிழர்கள் வழங்கும் ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே, அரசாங்கத்தினால் அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும் அமையும்'

★ அமைச்சர் பசில் ராஜபக்ஷ
★ 26.08.2011
(யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில்...)



'அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்த போதும், சாதாரண சட்டத்தின் கீழ் பாரதூரமான குற்றச்சாட்டுக்களைப் பதிவுசெய்து இந்த அப்பாவிகளான பொதுமக்களை தொடர்ந்தும் சிறையில் அடைத்து வைக்க வேண்டும் என்பதாலேயே பொலிஸார் திட்டமிட்டு இந்த வழக்கை சோடித்துள்ளனர். இவர்கள் அரசுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர். பொலிஸார் இவர்களைத் தாக்கவில்லையாம். இராணுவத்தினர் ஒரு துப்பாக்கி ரவையைக் கூடப் பயன்படுத்தவில்லையாம். அப்படியானால் இவர்களுக்கு எப்படி இந்தக் காயங்கள் ஏற்பட்டன. மரண தண்டனை அல்லது 20 வருட ஆயுள் தண்டனை வழங்கப்பட வேண்டிய வகையில் குற்றச்சாட்டுக்களைச் சோடித்துள்ளனர். பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் அனைவருமே பாதுகாப்புப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டவர்கள்'

★ சட்டத்தரணி சிறீகாந்தா
★ 28.08.2011
(நாவாந்துறை அசம்பாவிதங்கள் தொடர்பான விசாரணையின்போது...)



'அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதை வரவேற்கின்ற அதே வேளை இச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 860 தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும். இவர்களில் 50 பெண்களும் 5 கைக் குழந்தைகளும் அடங்குகின்றனர். யுத்தம் முடிவடைந்து சுமார் 26 மாதங்களின் பின் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது, காலம் கடந்த ஒன்று. எமது கட்சி இந்த சட்டத்துக்கு எதிராக பாராளுமன்றத்தில் வாக்களித்ததுடன் குரல் கொடுத்தும் வந்தது'

★ ப.அரியநேத்திரன் எம்.பி.
★ 27.08.2011
(இணையத்தளமொன்றிற்கு வழங்கிய பேட்டியில்...)



'அண்மையில் காஞ்சிரங்குடாவில் நடந்த கலவரத்தின்போது காவல்துறையினருக்கு உதவப்போய் எனக்கு கிடைத்த நேர்மையான பரிசுதான் பிடிவிறாந்து தான். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கசப்பான அனுபவங்களைக்கொண்டு எதிர்காலத்தில் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இந்த நிலையில் நாங்கள் ஒருபோதும் சட்டத்தைக் கையில் எடுக்கக்கூடாது. நாங்கள் இன்று அரசியல் அநாதைகளாக இருக்கின்றோம். ஆகவே கட்சி பேதமின்றி ஒற்றுமையுடன் செயலாற்றவேண்டும். எத்தனையோ துன்பங்களைத் துணிவுடன் கடந்து வந்த எம் மக்கள், இந்த கிறீஸ் பூதத்தைப் பார்த்து பயப்படுவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை'

★ முன்னாள் எம்.பி. சந்திரநேரு சந்திரகாந்தன்
★ 28.08.2011
(திருக்கோவில் பிரதேசசபை பதவியேற்பு நிகழ்வின்போது...)



'அவசரகாலச் சட்ட நீக்கம் தொடர்பான யோசனை கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்படும். ஆணைக் குழுவிற்கு கிடைத்த சாட்சியங்களின் முக்கியமானவை மட்டும் இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படும். அத்துடன் எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி அளவில் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும்'

★ நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர்.டி சில்வா
★ 28.08.2011
(அறிக்கையொன்றில்...)



'நடந்து முடிந்த யுத்தத்தை விட சர்வதேச சமூகத்துடனானயுத்தம்இலங்கைக்கு பெரும் சவாலானது. மில்லியன் கணக்கான மக்கள், பில்லியன் கணக்கான வளங்கள், பெரிய அரசுகள், பாரிய சர்வதேச ஊடக நிறுவனங்கள் ஆகியனவற்றை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு இது பெரும் சவால். யுத்தக் குற்றச்சாட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் புகழை நிலைநிறுத்துவதற்காக இணையம், அச்சு வெளியீடுகள், கலைகள் மற்றும் ஏனைய சாதனங்களைப் பயன்படுத்தி சர்வதேச சமூகத்திற்கு தகவல்களைப் பரப்பவேண்டும்'

★ வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம
★ 28.08.2011
(அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்...)



'நாவாந்துறை மக்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை இராணுவத் தளபதி பயங்கரவாதிகள் என்று சொல்லியிருக்கின்றார். ஆனால் இராணுவம்தான் பயங்கரவாதிகள் போன்று நடந்துகொண்டுளது. இராணுவம் முதலில் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டும். சந்தேக நபர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டு அப்பாவி மக்கள்மீது மிலேச்சத்தனமாகத் தாக்குதல்களை நடத்துவதில் என்ன நியாயம் இருக்கிறது? இதற்காக அடிப்படை மனிதஉரிமை மீறல் மனுத்தாக்கல் செய்யவுள்ளோம்'

★ சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி.
★ 27.08.2011
(ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது...)



'அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமையை அடுத்து, அவசரகால சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அல்லது சரணடைந்தவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள். சந்தேகநபர்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளமையால் அவர்களை சாதாரண சட்டத்தின்கீழ் விடுவிக்க முடியாது.

★ அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த
★ 28.08.2011
(அறிக்கையொன்றில்...)



'உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்றே நாட்டில் அமுல்படுத்தப்பட வேண்டும். இலங்கை மக்களின் தேவைகளை அரசாங்கம் நன்கு அறிந்து வைத்துள்ளது. இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் தலையீடு செய்வதற்கு உசிதமான காலம் இதுவல்ல. இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுவரும் அனேகமான குற்றச்சாட்டுக்கள் தொலைக்காட்சி விவரணங்களாகவும் வெறும் அறிக்கைகளாகவுமே அமைந்துள்ளன. வடக்கு மக்களின் நல்வாழ்விற்காக பெரும்பான்மையான புலம்பெயர் மக்கள் உதவிகளை வழங்கி வருவதாகவும் மேற்குலக நாடுகளிலும், தமிழகத்திலும் வாழும் ஒரு சில புலம்பெயர் தமிழர்கள் ஒத்துழைப்பு வழங்குவதில்லை'

★ இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம்
★ 28.08.2011
(பெங்களூரில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில்...)

## இருப்பு




'சட்டங்களுக்குள் அடக்கிய உங்கள் சட்டங்கள்'

உறவின் கதை

# 'செத்தால் எல்லோரும் சாவமென்று சொல்லி வாய் மூடுவதற்குள் ஷெல் வந்து விழுந்தது'

யாழ்ப்பாணம் குருநகரில் ஒரு சிறிய வீடு. அதற்குள் சிறியோரும் பெரியோருமாய் பதினொன்றுக்கும் மேற்பட்ட ஜீவன்கள். வன்னி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு அவ்வீடு ஆதரவும் அடைக்கலமுமாயிருக்கிறது.

அங்கிருந்த பெண்களில் ஒருவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவருக்கு நாற்பத்து நான்கு வயது ஆகிறது. குருநகர்தான் அவரது சொந்த இடம். 17வயதில் திருமணமாகி கணவனுடன் கிளிநொச்சியிலுள்ள கணேசபுரம் கிராமத்தில் குடியேறியிருக்கிறார். யுத்தம் மூண்டதால் 1990களில் குடும்பமாக இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து திண்டிவனம் குத்துப்பாட்டு முகாமில் பத்து வருடங்கள் வசித்திருக்கிறார்கள். அங்கு அவரது கணவர் மேசன் வேலை பூச்சு வேலை செய்து குடும்பத்தை பராமரித்துக் கொண்டிருந்திருக்கிறார்.

2002 இன் பின்னர் யுத்தம் ஓய்ந்திருந்ததால் சமாதானம் வந்துவிட்டதாக நம்பி 2004இல் அவரது குடும்பத்தினர் மீளவும் இலங்கை திரும்பி அதேகிளிநொச்சிகணேசபுரம்காணியில் குடியேறியிருக்கின்றனர். சிறிது காலம் வாழ்க்கை நிம்மதியாக கழிந்திருக்கிறது. வறுமை நிறைந்திருந்தாலும் வாழ்வு நிறைவாக இருந்திருக்கிறது.

அவருக்கு ஆறு பிள்ளைகள் ஐந்து பெண்பிள்ளைகளும் ஒரு ஆண்பிள்ளையும். மூத்தமகள் திருமணம் செய்து தனது கணவர், இரு பிள்ளைகளுடன் தனிக்குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கிறார். 2008இல் யுத்தம் ஆரம்பித்ததும் கிளிநொச்சியிலிருந்து புதுக்குடியிருப்புக்குச் சென்றிருக்கின்றார்கள். இராணுவம் முன்னேறி வரவர ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து இறுதியில் வட்டுவானில் இருந்திருக்கிறார்கள்.

'இடப்பெயர்வினால் மூத்தமகள் குடும்பத்துடனான தொடர்பு விடுபட்டுப் போனது. மகளும் ஷெல் காயத்துக்கு உள்ளானதாக அறிந்தோம். பின்னர் எந்தத் தொடர்பும் இல்லை. அவர்கள் அனைவரும் இறந்துவிட்டதாக எண்ணியிருந்தோம். இரண்டு மாதத்துக்கு முன்னர் தான் மகள் குடும்பம் வவுனியா முகாமில் இருப்பதாக அறிந்து கொண்டோம்' என்றார்.

தொடர்ச்சியாக இடம் பெயர்ந்து கொண்டிருந்தாலும் அவர் ஓய்ந்திருக்கவில்லை. குடும்பத்தைக் காப்பாற்ற 'வாய்ப்பன்' போன்ற பலகாரங்களைச் செய்து விற்று வந்திரு க்கிறார். இந்தசிறு வரு மானம் குடும்பப் பசியை ஆற்றி வந்திருக்கிறது.

வலைஞர் மடத்தில் இருந்த போது மகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்டாள். இரண்டு மாதம் தான் மகள் இயக்கத்தில் இருந்தாள். எல்லோரும் வெளியேறத் தொடங்கியதும் பிள்ளை கடிதம் எழுதியிருந்தாள். 'அம்மா எங்களைவிட்டுட்டு போகாதீங்க. நாங்க தனிச்சுப் போயிடுவம்' என்று பிள்ளைய விட்டுப்போக மனம் கேட்காததால் அத்தனை ஷெல்லடிகளுக்குள்ளும் மகளின் வரவை எதிர்பார்த்து காத்திருந்தோம்.

'கடைசியாக நாங்கள் இருந்தது வெட்டைவெளி. ஒருமரநிழல் கூட கிடையாது. பகலில் வெயிலில் துடித்துக் கொண்டிருப்போம். அங்கு கைவிட்டு கிடந்த இயக்கத்தின் வாகனங்களின் நிழலில் பிள்ளைகளை வைத்திருப்போம். மாலை ஐந்து மணிக்கு பின்னர் வெயில் தணியும் போது எங்களுக்கு சந்தோசமாக இருக்கும். நிலம் சதுப்பு தன்மையாக இருந்ததால் பங்கர் வெட்ட முடியாது ஆனாலும் எனது கணவர் மூன்றடி ஆழத்துக்கு பங்கர் ஒன்றை வெட்டினார். துவக்குச் சன்னம் படாதிருப்பதற்காக சீலைகளை எடுத்து நீள உறைகளாகத் தைத்து மணல் நிரப்பி சுற்றிவர அரண்போல் வைத்து விட்டு படுப்போம். மணல் அடைத்திருப்பதால் சன்னங்கள் மணல் உறையை ஊடுருவாது அதற்குள் புதைந்துவிடும்.

'ஒரு நாளில் இரண்டு மூன்று மணித்தியாலம் தான் லீவு கிடைக்கும். (இங்கு லீவு எனக் குறிப்பிட்டது ஷெல்லடி ஓய்ந்திருக்கும் நேரத்தை) அந்த நேரத்துக்குள் தான் ஆட்கள் பங்கரில் இருந்து வெளியில் வந்து ஏதாவது வேலை பார்ப்பார்கள். சில நாட்கள் முழு நாளும் வெளியில் வராது பங்கருக்குள் இருக்க நேரிடும். தலையை வெளியில் காட்டினால் ஷெல் துண்டும் சன்னமும் படும். நிறையப் பேர் தலையில் காயப்பட்டுத்தான் இறந்தார்கள்.



'உணவு கிடையாது. அத்துடன் பொருட்களும் பயங்கர விலை. அரிசி ஒரு கிலோ 1500ரூபாக்கு விற்கப்பட்டது.

பிள்ளைகளை இயக்கம் போக விட்டபோது மகளும் எங்களிடம் திரும்பி வந்துவிட்டாள். எனது இரண்டாவது மகளுக்கு 21வயது. அவளது கணவன் போன இடத்தில் காணாமல் போய்விட்டார். மகளும் அவளது ஒன்பது மாத மகன் ஸ்ரீகாந்தும் எங்களுடன்தான் இருந்தார்கள். அடுத்து 16வயது மகள் மரினா. இவள்தான் இயக்கத்துக்கு போய் வந்தவள். அடுத்தது 15 வயது மகன் இவருக்கு இளையவள் 14 வயது மகள். கடைசி மகளுக்கு ஒன்பது வயது.

மகள் திரும்பி வந்தபின் பிள்ளைகளுக்கு ஒரு நேரமாவது ஒரு நல்ல உணவு தர வேண்டுமென்ற அவாவில் வாய்ப்பன் விற்று சேர்த்து வைத்திருந்த காசில் 1000 ரூபாவிற்கு ஒரு சமன் ரின் வாங்கி வந்து சமைத்தேன். மத்தியானம் எல்லோரும் சாப்பிட ஆயத்தமானோம். பிள்ளைகளைச் சாப்பிடத் தொடங்குமாறு சொல்லிவிட்டு நான் அடுப்பைக் கவனிக்கப்போனேன். ஷெல்லடி தொடங்கியது. முழங்கை அளவு நீளமுள்ள ஷெல் மற்றவற்றைப் போல் கூவிக் கொண்டு வராது. சத்தமில்லாமல் வரும். வந்து விழுந்த பின்னர் தான் ஷெல் விழுந்தது தெரிய வரும். பிள்ளைகளை ஒரே இடத்தில் இருக்காது சற்று விலகிப் போகுமாறு சொன்னேன். மகள் மரினா சொன்னாள் உங்களைவிட்டுப் போக மாட்டோம். இனிப் போறத்துக்கு இடமும் இல்லை. செத்தால் எல்லோரும் சாவமென்று சொல்லி வாய் மூடுவதற்குள் ஷெல் வந்து விழுந்தது. புகை மூட்டம் தான் எனக்குத் தெரிந்தது. அந்நேரம் உறவினர் வீட்டுக்குப் போயிருந்த 15 வயது மகன் ஓடிவந்து என்னை இழுத்துக் கொண்டு நிறுத்தி வைத்திருந்த வாகனம் ஒன்றின் கீழ் பாதுகாப்பாக வைத்தார். எனது கை காயப்பட்டு முறிந்தது. எனக்கு அந்த நேரம் தெரியாது. வட்டுவானில் இயக்கம் நடத்தி வந்த ஆஸ்பத்திரியில் நானும் கணவரும் அனுமதிக்கப்பட்டோம். அவருக்கும் தலையிலும் காலிலும் காயம். பின்னர் அங்கும் ஷெல் விழத்தொடங்க அங்கிருந்து வெளியேறநேர்ந்தது. அக்காமாரும் தங்கைமாரும் குழந்தைகளுடன் வேறு இடத்துக்குப் போய் விட்டதாக மகன் சொன்னான்.

காயப்பட்ட மூன்றாம் நாள் மகன் எங்களைக் கூட்டிக் கொண்டு ஆமிக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் போகும் போதுதான் தெரிந்து கொண்டேன். எனது நான்கு மகள்மாரும் பேரக்குழந்தைகளும் அதே இடத்தில் இறந்து விட்டதை. எனது பிள்ளைகள் தலைவேறு கைவேறு கால்வேறாக சிதறிக் கிடந்திருக்கிறார்கள். கணவர் வெட்டி வைத்திருந்த பங்கரில் மகனும் தெரிந்த ஒரு இளைஞனும் அவர்களைப் புதைத்திருக்கின்றார்கள்.

◄ என்.குருபரன் ►

'நான் முகாமில்' யோசித்துக் கொண்டிருப்பதால் உறவினர் வீட்டுக்குப் போய் மனதைத் தேற்றுமாறு கூறி முகாமுக்கு பொறுப்பான இராணுவ அதிகாரி எங்களை அனுப்பி வை த்தார். மகன் முகாமில் இருக்கிறார். என்றுதான் எதிர்கொண்ட சம்பவங்களை தனது நிலையையும் விபரித்தார். அவரால் காயப்பட்ட கையைக் கொண்டு எதுவும் செய்ய முடியாது. கைக்குள் ஷெல் துண்டு இருப்பதால் சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது. கணவரும் காயப்பட்டவர். எதுவித வருமானமும் இல்லாமல் இன்று இக்குடும்பம் திண்டாடிக் கொண்டிருக்கிறது. இருப்பினும் வாழவேண்டும் என்ற அவர்களின் நம்பிக்கையே இன்று அவர்களை வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

> "வாழவேண்டும் என்ற அவர்களின் நம்பிக்கையே இன்று அவர்களை வாழவைத்துக் கொண்டிருக்கிறது"

05.09.2011
காத்திருப்பு 01 | இருக்கை 23

# காத்திருப்பு

வணக்கம் என் தோழர்களே!

சுட்டெரிக்கும் செந்தணல் நாக்குகளின் வெம்மையில் தன்னை ஆகுதியாக்கிய தொப்புள் கொடி உறவு தோழர் செங்கொடி மற்றும் செந்தீயில் சிதையாகிய ஏனைய தோழர்களின் நினைவுகளுடன் இத்தலையங்கத்தை எழுத ஆரம்பிக்கின்றேன்.

உணர்ச்சியின் விளிம்பில் உணர்வுகளின் ஒன்றிணைந்த போராட்டத்தில் இணைந்திருக்கும் என் தமிழகத் தோழர்களே. ஒற்றைத் தீக்குச்சியில் உங்களை அழித்துக் கொள்வதுதான் போராட்டம் அல்ல. எங்கள் உரிமைகளுக்காய், எங்களிடமிருந்து பறித்துச் செல்லப்பட்ட உறவுகளுக்காய், நாங்கள் வாழ்ந்த நிலங்களில் மீண்டும் வாழ்வதற்காய் மூன்று தசாப்தங்களாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

சுயநலமுள்ள சந்தர்ப்பவாத அரசுகளுக்கு எங்கள் விலைமதிப்பற்ற உயிர் சில நிமிடங்களில் ஒரு தீக்குச்சியில் அழிக்கப்படுவது எப்போதுமே உறைக்கப் போவதில்லை. உணர்வெனும் ஒற்றுமைத்தீயை மனதில் பொருத்துங்கள். உடலில் வேண்டாம். உணர்வுள்ள உங்களின் எழுச்சி புதிய சகாப்தத்துக்கான வழியைத் திறக்கட்டும். ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் ஒவ்வொரு தீப்பந்தமாய் எழவேண்டும். இன்னமும் எங்களின் வாழ்க்கை ஓட்டமாய் ஓடிக்கொண்டுதானிருக்கின்றது. குற்றங்களரால் வேயப்பட்ட சட்டங்களால் எங்கள் உறவுகள் தினம் தினம் மரச்சட்டங்களுக்குள் அடக்கப்படுகிறார்கள்.

சட்டசபைத் தீர்மானம், தூக்குதண்டனையை ஆயுள் தண்டனையாக்க கோருகின்றது. நீதிமன்றத்தின் தலையீடு இந்தத் தூக்குதண்டனைக்கு பின்னாலான நடைமுறைகள் பற்றிய கேள்விகளுக்காக இதை இடைநிறுத்தியிருக்கிறது. நாளை ஆயுள் தண்டனை தீர்ப்பாக எதிர்பார்க்கலாம் அல்லது காலவரையற்ற வகையில் தூக்குத் தண்டனையை ஒத்திப்போட்டு தொடர்ந்து தண்டிப்பதாக அமையலாம்.

காத்திருப்பு என்பது கனதியானது. எங்களுடைய விடிவுக்காய் சுற்றி அடைக்கப்பட்ட சுண்ணாம்புச் சுவர்களின் நடுவே முகம் புதைத்துக் காத்திருக்கின்றோம் என்றாவது ஒரு நாள் வெளிச்சம் எங்கள் வாசலில் வருமென்று. எம் இலக்கை நாம் அடையும் வரையும் எம் மக்கள் தளர்வடையாதவரைக்கும் காத்திருப்பதில் எந்தக் குற்றமுமில்லை. இத்தனைநாள் மனங்களில் சுமந்துகொண்டிருந்த சுமைகளை அதற்குரிய முதல் மரியாதையுடன் இறக்கி வைப்பது மகிழ்ச்சிதான். வதை சூழ்ந்தும் வலிதாங்கி முடிவு காணப் புறப்பட்ட பயணம் வழியில் நிறுத்தப்பட்டாலும் எங்கள் ஒற்றுமையும் வீச்சும் என்றும் மழுங்கடிக்காது பயணப்பட வேண்டும்.

மனச்சாட்சியில்லாதவர்களிடம் நீதி கேட்டு உயிரை மாய்த்துக்கொள்வதில் பயனில்லை தோழர்களே. அவர்கள் இதையெல்லாம் கண்டு கொள்ளப் போவதில்லை. தயவு செய்து மரணத்துக்காக மரணத்தைப் பின்பற்றாதீர்கள். சட்டம் பலமானவர்களைப் பாதுகாக்கிறது. நீதி குற்றவாளியின் பலம், பலவீனம் பார்த்தே சொல்லப்பட்ட நீதியை வழங்குகிறது.

காலில் எந்தத் தளர்வுமின்றி மீண்டும் நடக்கும் பலம் பெறுவதற்கு நெஞ்சில் நம்பிக்கைத் துளிர்ப்புடன் இடத்தை இலக்கு வைத்தபடி காத்திருப்போம். எமது பயணம் தொடரும் பக்குவமும் பலமும் இளைப்பாறும் ஒவ்வொரு நொடியும் மீண்டும் மீண்டும் உறுதிசெய்யப்படட்டும்.

மூன்று தோழர்களின் உயிர்கள் மீட்கப்படுவதற்காய் திரண்டெழும் உங்களுடைய போராட்டம் வெற்றிபெற மயான தேசத்தில் மறுக்கப்பட்ட உரிமைகளுடன் வாய்கள் பொத்தப்பட்டு கண்கள் மூடப்பட்டு காத்திருக்கிறேன் என் உறவுகளுடன்.......

ஆசிரியர்




# மேயர் உருத்திராவின் வாரிசு மனோ

கொழும்பு நகரின் துணிச்சலான மேயர் என்று 1950களில் பெயர் பெற்றிருந்தவர் தமிழரான உருத்திரா. அந்தப் பெயரையும் அந்த இடத்தையும் இதுவரை வேறொரு தமிழர் எடுத்ததில்லை. இன்னும் சில வாரங்களில் நடைபெற இருக்கும் 23 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் கொழும்பு நகரின் புதிய மேயரும் தெரிவு செய்யப்பட வேண்டும். 1954ஆம் ஆண்டில் உருத்திரா கொழும்பு நகர மேயராக பதவி வகித்தார். இந்த ஆண்டில் தான் 2ஆவது எலிசபெத் மகாராணியார் தனது கணவர் எடின்பரோ கோமகனுடன் இலங்கைக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்தார். இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்த சேர். ஜோன் கொத்தலாவையின் அழைப்பை ஏற்று மகாராணியார் கப்பலில் கொழும்புக்கு வந்தார். கொழும்பு துறைமுகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட எலிசபெத் இறங்குதுறையில் மகாராணியாரையும் பரிவாரத்தையும் வரவேற்பதற்கு பிரமாண்டமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

கொழும்பில் காலையில் தினசரிப் பத்திரிகையில் தவிர பிற்பகலிலும் இரண்டு ஆங்கிலத் தினசரிகள் வெளிவந்தன. டைம்ஸ் ஒப் சிலோன் என்று ஆங்கிலேயரால் தொடங்கப்பட்ட ஒரு தினசரியும் டி.ஆர். விஜயவர்த்தனாவால் நடத்தப்பட்ட லேக் கவுஸ் என வழங்கப்படும் ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்திலிருந்து சிலோன் ஒப்சேவர் என்ற பத்திரிகையும் மாலையில் வெளிவந்து கொண்டிருந்தன. 1954 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் திகதி மகாராணியார் கொழும்புத் துறைமுகத்தில் வந்து இறங்கும் போது கொழும்பு நகர மேயரான கௌரவ உருத்திரா மகாராணியாரை வரவேற்கச் செல்ல மாட்டார் என்று ஒரு செய்தி மாகாராணியார் வந்திறங்குவதற்கு சில தினங்களுக்கு முன்பாக இப்பத்திரிகைகளில் வெளிவந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. துறைமுகத்தில் வந்திறங்கும் மகாராணியாரை வரவேற்கும் பிரமுகர்கள் வரிசையில் கொழும்பு நகரமேயருக்குக் கொடுக்கப்பட வேண்டிய இடம் வழங்காமல் பின்தள்ளப்பட்டிருந்தார். இந்நிகழ்ச்சி நிரல் கிடைத்ததும் மேயர் உருத்திரா ஆட்சேபம் தெரிவித்து வரிசை ஒழுங்கை மாற்றியமைத்து மேயருக்கு கொடுக்க வேண்டிய இடத்தை ஒதுக்கி அறிவிக்கும்படி கேட்டார்.

இதற்கு அரசின் ஏற்பாட்டுக்குழு மறுப்புத் தெரிவித்தது. 'நான் மகாராணியாரை வரவேற்கத் துறைமுகத்துக்குப் போக மாட்டேன்' என்று மேயர் அறிவித்து விட்டார். பத்திரிகைகளிலும் இலங்கை வானொலியிலும் இச்செய்திகள் பரபரப்பாக வெளிவந்தன. அரசாங்கத்தின் சார்பில் சேர். ஒலிவர் குணதிலக மேயர் உருத்திராவைச் சந்தித்துப் பேசினார். மேலும் பலர் தூது சென்றனர். மேயர் உருத்திரா விட்டுக் கொடுக்கவில்லை.

'மகாராணியாரை வரவேற்பதற்கு மேயர் என்ற முறையில் எனக்குக் கொடுக்கவேண்டிய மரியாதை கொடுக்காததால் நான் துறைமுகத்துக்குச் சென்று வரவேற்க மாட்டேன். ஆனால் மகாராணியாரை கொழும்பு மாநகரசபை வரவேற்று நகரமண்டபத்தில் நான்தான் முன்னிற்பேன்' என்று மேயர் உருத்திரா அறிவித்து ஆச்சரியப்படவைத்தார்.

இதேபோல் எலிசபெத் மகாராணியாரையும் கோமகனையும் தாரை, தப்பட்டங்கள், மேளதாளங்கள், நடனங்கள் என மாநகரசபை பகுதியே விழாக்கோலம் பூண்டு நிற்க மேயர் உருத்திரா மாநகரசபை அளிக்கும் வாசலில் நின்று வரவேற்பில் நகரமண்டபத்துக்கு அழைத்துச் சென்று வரவேற்பளித்தார்.

இந்தச் சம்பவம் மேயர் உருத்திராவின் பெயர் இலங்கையில் மட்டுமல்ல இங்கிலாந்திலும் உலக நாடுகளிலும் பரவுவதற்கும் பெருமைப்படவும் வைத்தது. இப்பொழுது அதாவது சிலவாரங்களில் நடைபெறவிருக்கும் கொழும்பு மாநகர மேயர் தெரிவிலும் பல வருடங்களுக்குப் பின் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கலாம். உருத்திராவைப் போலவே நேர்மையும் நெஞ்சுறுதியும் கொண்ட ஒருவர் மனோகணேசன் என்ற பெயரில் ஜனநாயக முன்னணியின் தலைவராக இருந்து மேயர் தேர்தலில் போட்டியிடுகிறார். அவரே புதிய மேயராகும் வாய்ப்புண்டு. கொழும்பில் தமிழரும் முஸ்லிம்களுமே பெரும்பான்மை என்று ஜனாதிபதியே சொல் லியிருக்கிறார்.

**- எஸ்.எம்.ஜி.**


இருக்கிறம்
ஒரு பொல்லாப்புமில்லை
வார இதழ்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் வெளியிடப்படுகிறது.

3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07.
தொலைபேசி : +94 11 3150836
தொலைநகல் : +94 11 2585190
மின்னஞ்சல் : irukiram@gmail.com
இணையம் : www.irukkiram.tk

| | |
|---|---|
| ஆசிரியர் | : அருளானந்தம் சஞ்சீத் |
| நிர்வாக ஆசிரியர் | : சாந்தி சச்சிதானந்தம் |
| செய்தி ஆசிரியர்கள் | : கலாவர்ஷனி கனகரட்ணம் |
| | தவநாதன் இரவிவர்மன் |
| நிருபர் குழு | : தர்மராசா சிந்துஜா |
| | கந்தலிங்கம் மாலா |
| | அருமைத்துரை ஜசீகரன் |
| | ரா.அர்விந்த் |
| கார்ட்டூன் | : சஞ்சீத் |
| புகைப்படம் | : யாத்ரா |
| | தமிழியன் |
| பக்க வடிவமைப்பு | : முஹம்மட் பிறவ்ஸ் |
| | ஷிரோமி பீற்றர் |


கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.




# கலாசார சீர்கேடுகளும் ஒழுக்கம் என்பதன் அர்த்தமும் என்ன?

யாழ்ப்பாணத்தைக் குறித்த சமீபத்து செய்திகளில் பலவும் 'கலாசார சீர்கேடுகள்' பற்றி இருப்பதைப் பார்க்கலாம். அப்பிரச்சினையைப் பற்றி விளக்கம் கேட்டால், மொபைல் போனில் ஆபாசக் காட்சிகள், களவுக் காதல்கள், 'முறையற்ற கர்ப்பங்கள்' என ஒன்றொன்றாக விளக்கம் கொடுக்கப்படும். இளவயதில் பெண் பிள்ளைகள் கர்ப்பம் தரிப்பது தடுக்கப்பட வேண்டியது என்பதில் வேறு கேள்வி கிடையாது. ஆனால் இவற்றையெல்லாம் கலாசாரச் சீர்கேடாக விபரிப்பதுதான் சங்கடமான விசயமாக இருக்கிறது.

எங்கும் யாராவது கலாசார சீர்கேட்டினைப் பற்றிப் பேசினால் அது பாலியல் நடத்தையைப் பற்றியதான, குறிப்பாக பெண்களின் நடத்தையைப் பற்றியதான விமர்சனமாக இருக்கும் என்பதைக் கண்ணை மூடிக்கொண்டு சொல்லி விடலாம். சங்க காலத்துக்கு முன்னும் கூட, கற்பு என்னும் சொல் பொதுவாக ஒழுக்கத்தைத் தான் குறித்தது. பிறகுதான் அது குறிப்பாக பெண்களின் பாலியல் ஒழுக்கத்திற்கான சொல்லாகியது. பெண்கள்மீது சமூகம் பிரயோகிக்கும் கட்டுப்பாட்டின் அளவினை இதிலிருந்து கண்டு கொள்ளலாம். மனித வாழ்க்கையில் எத்தனையோ தவற முடியாத ஒழுக்க விதிகள் இருக்கின்றன.

சொன்ன சொல்லைக் காப்பாற்றுதல், கொடுக்கல் வாங்கலில் நாணயத்தோடு நடத்தல், நேர்மையான ஆட்சி முறை, விருந்தோம்பல், வயதான பெற்றோரை ஆதரித்தல் என இவை பலபல. எது போனாலும் போகாவிட்டாலும் பரவாயில்லை, இந்த ஒழுக்கங்களெல்லாம் இருக்கின்றனவா இல்லையா என்றுகூடக் கண்டுகொள்ள மாட்டோம். ஆனால் பெண்கள் யாருக்குப் படுக்கை விரிக்கிறார்கள் என்பதை முழுச் சமூகமுமே கண்காணிக்கும் என்பதுதான் ஒழுக்கத்தின் 'ரேஞ்ச்' இவ்வளவு சுருங்கிக் கொண்டதற்கு அர்த்தமாகும்.

இப்படி மானிட சமூகத்தின் விழுமியங்கள் பிறழ்ந்து போனதால்தான் இன்று எங்கள் உலகம் யுத்தமும் வன்முறையும் அநீதியும் மிக்க உலகமாக ஆகிவிட்டது. பெண்களின் பாலியல் நடத்தைகள் அவர்களையும் அவர்களைச் சேர்ந்த ஆண்களையும் பொறுத்த தனிப்பட்ட விசயமாகும். மேலே குறிப்பிட்ட பிற ஒழுக்கங்களோ ஒரு ஒட்டு மொத்தச் சமூகத்தையும் ஒரு நாட்டையும் பாதிக்கும் விசயங்களாகும். ஆனால் நாங்கள் அப்படிப் பார்ப்பதில்லையே. இப்பொழுதெல்லாம் எங்கள் அரசியல்வாதிகள் தாம் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவது கிடையாது, சரியான கலாசார சீரழிவுக்கு எங்கள் சமூகம் ஆட்பட்டுவிட்டது என்று யாராவது சொல்லுவார்களா?

எங்கள் சமூகத்தில் வயதான பெற்றோரைப் பிள்ளைகள் மடங்களில் விடும் அளவுக்கு கலாசார சீரழிவு ஏற்பட்டு விட்டது என்று யாரும் சொல்லக் கேட்டிருக்கிறீர்களா? எடுக்கும் சம்பளத்துக்கு மனச்சாட்சியுடன் வேலை செய்யாத அரச உத்தியோகத்தர் குழாம் ஒன்று எங்கள் நாட்டில் உருவாகி ஒரு கலாசார சீரழிவுக்கு இட்டுச் செல்லுகிறது என்று சொல்லியிருக்கிறார்களா?

வரவர, கடன் எடுத்தால் அதனைப் பொறுப்புடன் திருப்பிக் கொடுக்காத அடாவடித்தனம் அதிகரித்து தமிழ் மக்களின் பண்பாடு ஏமாற்றும் பண்பாடாக சீரழிந்து போகிறது என்று யாராவது ஒப்பாரி வைத்துக் கேட்டதுண்டா? ஒரு குழு மக்கள் பரஸ்பர உதவிகளை நல்கி ஒற்றுமையாகத் தமது வாழ்க்கையை ஒழுங்கமைப்பதற்குத் தேவையான நடத்தைக் கோவையை ஒழுக்கம் என்று நாம் வரைவிலக்கணம் கொடுப் போமாயின், நாங்கள் இன்னும் பலகாத தூரங்கள் போக வேண்டும் போல இருக்கின்றது. காசுள்ளவன் பெரியவனாகவும் வென்றவன் வல்லவனாகவும் கணிக்கும் இழிந்த நாகரீகந்தானே எம்முடையது?

சரி, இனி யாழ் மாவட்டத்தின் குறித்த பிரச்சினைக்கு வருவோம். யுத்தம் முடிவடைந்த பின்னர், இலங்கையின் ஏனைய பாகங்களுடனும் சர்வதேசத்துடனும் யாழ் மாவட்டம் பல வழிகளாலும் இணைக்கப்பட்டதன் விளைவுகள் இவை. இதுவரைகாலமும் மூடிக்கிடந்த ஒரு சமூகம் இப்பொழுது சர்வதேச சந்தையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இணையத்தளங்களென்றும் 'ஸ்கைப்' என்றும் தொடர்பாடல் தொழில் நுட்பங்கள் படுக்கையறை வரையும், ஏன் கையில் வைத்திருக்கும் செல்லிடத் தொலைபேசி வரைக் கும் வந்துவிட்டன.



விசேடமாக, இளஞ் சமுதாயத்தினரின் நடையுடைபாவனைகள் மாற்றமடையத்தான் செய்யும். மிகுந்த கட்டுப்பாட்டினுள் வளர்ந்தவர்கள், திடீரென்று வெளியுலகத்தின் செல்வாக்குகள் புகுந்து கொண்ட நிலையில் 'அவிழ்த்து விட்ட மாடுகள்' என்று சொல்வது போல தறி கெட்டுத் திரிய வாய்ப்புண்டு. ஆனால் பிரச்சினை அங்கில்லை, எங்கள் பெற்றோர்களிடமும் சமூகத்திடமுமே உண்டு என்று நாம் கூறுகிறோம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இரு வகைப் பசி இருக்கின்றது என்பார்கள். ஒன்று வயிற்றுப்பசி, மற்றது உடற்பசி. இவையிரண்டையும் பூர்த்தி செய்யாமல் மனிதகுலம் வாழ்வதோ நீடித்து நிலைப்பதோ நடவாத காரியம். வயிற்றுப் பசியை ஆற்றுவதற்கு நாம் உள்ளெடுக்கும் உணவை சமைப்பது பற்றியும் சாப்பிடுவது பற்றியும் எத்தனை அறிவுறுத்தல்கள், அதற்காக எத்தனை சமையல் புத்தகங்கள். இத்தகைய முறையில் தமக்கு முக்கியமானதொரு நடவடிக்கையைப் பற்றி சமூகத்தின் அறிவினை மேம்படுத்துவது அவசியந்தான்.

ஆனால், அதே முறையில் நாம் எங்கள் பாலியல் நடத்தைகளைப் பற்றியும் ஆராய்கின்றோமா என்றால் இல்லை. அதனை மட்டும் சுற்றி வெட்கமும் சங்கடமும் மௌனமும்தான் நிறைந்திருக்கின்றது. அது சரியா தவறா என்பது பற்றியே இன்னமும் எங்களுக்குள் தெளிவில்லை. இதனால் பாலியல் நடத்தைகளின் வெவ்வேறு தன்மைகள் யாவை, அவை ஒரு மனிதனின் வாழ்க்கையின் ஒவ்வொரு கால கட்டத்திலும் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பது பற்றிய ஒரு விளக்கமும் எங்களுக்குக் கிடையாது. எங்களுக்குத் தெரிந்தால்தானே எங்கள் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்க முடியும்? தெரிந்த கொஞ்ச விடயங்களையும்கூட மனம் விட்டுப் பேசுவதற்கே சங்கடம். பாடசாலைக் கல்வியிலாவது பாலியல் கல்வியைப் புகுத்துவோமென்றால் அதற்கும் எதிர்ப்பு.

இந்தளவு பாரிய மௌனத்தின் பின்னணியில்தான் இளம் பிள்ளைகள் தவறான வழியில் போவதற்கான காரணிகள் உருவாகின்றன. பருவமடையும் வயதில் பாலியல் உறவுகள் பற்றி அறிவதற்கு பிள்ளைகள் மிகவும் ஆர்வப்படுகின்றனர். இது முற்றிலும் ஹோர்மோன்கள் தொழிற்பாட்டால் ஏற்படும் இயற்கையான நடத்தையாகும். இந்த நடத்தை இல்லாவிடில் தான் பெற்றோர்கள் பிள்ளைகள் உண்மையில் ஆரோக்கியமாக இருக்கிறார்களா என்பது பற்றி கவலைப்படவேண்டும்.

இந்த துறுதுறுப்பு ஏற்படும்வேளையில் சமூகத்தின் பெரியோர்கள் அதனைச் சொல்லிக் கொடுக்காவிடில் பிள்ளைகள் இன்டர் நெற் மூலந்தானே அறியலாம்? ஆனால், அதனையும் நாம் ஒழுங்காகப் பெற விடுவதில்லை. கள்ளம் களவாகத் தான் அவர்களால் பார்க்க முடிகிறது. இதனால் பாலியல் பற்றிய திறந்த ஆரோக்கியமான மனோபாவத்தையே எங்கள் பிள்ளைகள் இழக்கின்றனர். ஆபாசப் படங்களிலிருந்து தகாத நடத்தைகளைப் படித்துக் கொள்ளுகின்றனர்.

அனேகமாக அரைகுறை அறிவுடன் உறவை நாடிப் போகின்ற வேளைகளிலேயே இளம் பிள்ளைகள் பாலுறவு மூலமான நோய்களால் பாதிக்கப்படவும், கர்ப்பமடையவும் ஏதுவாகின்றன. இளம் பெண்பிள்ளைகள் கர்ப்பமடையக்



காரணகர்த்தாவாக இருந்த சமூகமே அவர்கள் கர்ப்பமடைந்த பின்பு 'முறையற்ற கர்ப்பம்' என முத்திரை குத்தி அவர்களை பாகுபாடாகவும் ஈவிரக்கமற்ற முறையிலும் நடத்த ஆரம்பிக்கின்றது. எந்தக் குழந்தையும் இயற்கை தந்த வரமாகும். ஒன்றுமே முறையற்றதல்ல. ஆனால் சமூகந்தான் இறைவனின் வரத்தைக்கூட முறையானது முறையற்றது எனத் தரம் பிரித்துப் பார்க்கின்றது.

நவீன உலகின் பண்பாட்டு மாற்றங்களை உணர்ந்து அதற்கேற்றாற்போல எங்கள் பிள்ளை வளர்ப்பும் மாற வேண்டியது அவசியம். கட்டுப்பெட்டித் தனத்திலிருந்து நாம் விடுபட்டு எங்கள் பிள்ளைகளுடன் திறந்த கலந்துரையாடல்களை மேற்கொள்ளப் பழக வேண்டும். அவர்களின் உற்ற சிநேகிதர்களாகப் பெற்றோர்கள் மாறவேண்டும். பிள்ளைகளுடன் பாலியல் விடயங்களைப் பேசுவதற்கு மிகுந்த கூச்சப்பட்டாலும் பரவாயில்லை, அதை விளக்கும் நல்ல புத்தகங்களை பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுத்து வாசிக்க ஊக்குவிக்க வேண்டும்.

தொலைக்காட்சியில் டிஸ்கவரி சனலில் இது பற்றிய நல்ல விஞ்ஞான விளக்கங்களோடு நிகழ்ச்சிகள் உண்டு. அவற்றைத் தேடிப் பெற்று பிள்ளைகளைப் பார்க்கச் செய்யவேண்டும். பாடசாலைகளிலும் கீழ்நிலைப்பள்ளிக்கூடம் முதல் பாலியல் கல்வி புகுத்தப்படவேண்டும். இதற்காகப் பெற்றோர் அழுத்தம் கொடுக்க வேண்டும். முக்கியமாக, ஒழுக்கம் என்கின்ற பதத்துக்கு சரியான அர்த்தத்தினை எமது சமூகம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

# நாடும் நடப்பும்

## நடுத்தெருவில் நிற்கிறம் பாருங்கோ!!

பேப்பர்காறங்கள் வந்து கேட்டா நீங்கள் கிறீஸ் வந்ததெண்டு சொல்லக்கூடாது. ஆர் கேட்டாலும் 'ஆர் வந்து தாக்கினதெண்டு தெரியேல்ல ஆரோ வந்து தாக்கினவ. நாங்கள் காணேல்ல. எண்டுதான் சொல்லோணும் எண்டு ஆமிக்காறர் கிறீஸ்காரர் தாக்குற வீட்டுக்கு விசாரணைக்குப் போய்ச் சொல்லீனமாம் எண்டு சனம் கதைக்குதுங்கோ. அண்டைக்கு மட்டக்களப்பில பெண்கள் விடுதிப்பக்கம் வந்த மர்மமனிதன மீட்க பவள்வண்டியிலயும், பிக்கப்பிலயும் வந்தவையுங்கோ. பிறகு மர்மமா வந்து தாக்கினா கிறீஸ் எண்டு சொல்லக்கூடாது. கிறீஸ் எண்டு ஒண்டும் நாட்டில இல்ல எண்டு சொல்லீனமாமுங்கோ. மட்டக்களப்பில எங்கண்ட தமிழ்பேசுற மக்கள் எல்லோரும் ஒண்டுசேந்து எதிர்க்கிறதால கடும்கோபத்தில இருக்கினமாமுங்கோ.

அண்டைக்கு மட்டக்களப்பில நிண்டுட்டு யாழ்ப்பாணம் வரேக்க எங்கண்ட பஸ்சமறிச்சு முஸ்லிம் சகோதரர்கள் சிலபேரத்தானுங்கோ கனக்க விசாரிச்சவங்கள். யாழ்ப்பாணம் வந்த நான் பின்னேரமா ஆசுப்பத்திரிக்கு போனன். அங்க ஒரே சனக்கூட்டம். பின்ன என்னங்கோ நூற்றிரண்டுபேர வோட்டில மறிச்சு வச்சிருந்தா அவ்வளவு பேரையும் பாக்கவே எவ்வளவு சனம் வருமுங்கோ. அதுவும் அடிகாயங்களோட கிடக்கிறதுகள பாக்க என்னால வாட்டுக்குள்ளயே போகேலாமப்போச்சுங்கோ. முழங்கால், முழங்கை, கைமூட்டு, பிடரி எண்டு பாத்துப்பாத்துத்தான் அடிச்சிருக்கிறாங்களுங்கோ. பிளான் பண்ணின மாதிரித்தான் கிடக்குங்கோ. முந்தி ஊரடங்குச்சட்ட நேரம் இனந்தெரியாத ஆயுததாரிகள் தெருத்தெருவா சுட்டவயுங்கோ. இப்ப பட்டப்பகலில இனந்தெரியாத மர்ம மனிதர்கள் வெருட்டீனம்.

உதுகளப்பற்றி நெடுகக் கதைக்கக்கூடாது பாருங்கோ. அதுதானுங்கோ கோயிலுக்குப் போய்வந்தா மனம் கொஞ்சம் நிம்மதியடையும் எண்டுட்டு நல்லூர் திருவிழாவுக்கு போனனான். பூசை முடிஞ்சாப்பிறகு கொஞ்சநேரம் வேப்பமரத்துக்குக்கீழ இருந்தனானுங்கோ. பக்கத்தில எங்கண்ட பேராசிரியர் ஒருவர் சமயப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தாருங்கோ. பல திக்காலயும் பல சத்தம் எண்டுட்டு கிட்டபோய் கேப்பம் எண்டு போனனுங்கோ. ஒரு இருபது சனமில்லயுங்கோ. அவற்ற சொற்பொழிவக் கேக்கிறதுக்கு. ஊர்வழிய நிலமையள் சரியில்ல அதுதான் சனம் வீட்டபோட்டுதுகளாக்கும். எடுத்தவுடன சனத்தில தப்புச்சொல்லக்கூடாது எண்டுட்டு பிரசங்கம் முடிய நடையக் கட்டினனுங்கோ. தெற்குப்பக்கத்தால வரேக்க தெற்கு கோபுரத்துக்கு பக்கத்தில திரையில படம்போய்க்கொண்டிருந்ததுங்கோ. ஆற்றா உவங்கள் கோயில் வீதியில சினிமாப்படம் போடுறது எண்டு போய்ப்பாத்தா ஒரு ஐந்நூறு அறுநூறு சனத்துக்குக் குறைவில்லயுங்கோ சிவாஜியின்ர தில்லானா மோகனாம்பாள் படம் பாத்துக்கொண்டிருந்ததுகள். சிவாஜி கணேசன் நாதசுரம் வாசிக்க பத்மினி ஆட சனம் பாத்து விசிலடிப்பு வேற. ஓராள் உணர்ச்சிவசப்பட்டு சபாஸ் சரியான போட்டி எண்டு ரசிச்சுக் கொண்டிருந்தாருங்கோ. பிரசங்கம் கேக்க ஆளில்ல, ஆனாப்பாருங்கோ கோயில் வீதியில சினிமாப் படம்போடவும் அதப்பாக்கவும் ஒரு கூட்டம் இருக்குத்தானயுங்கோ.

இன்னொரு விசயம் சொல்ல மறந்துட்டனுங்கோ. செருப்போட போற ஆக்கள வீதித்தடையில மறிச்சு செருப்ப கழட்டிட்டுப்போகச் சொன்னவயுங்கோ. ஆனா சிங்களச் சனத்தை செருப்போடதானுங்கோ விட்டவை. அதுவும் சரிதானுங்கோ. அதுகள் சாமிக்கும்பிட வரேல்லதானே. நல்லூரில விடுப்புப்பார்க்கத்தான் வந்ததுகளுங்கோ. விடுப்புப் பாக்கிறவ செருப்புப்போட்டாத் தப்பில்ல பாருங்கோ.


அவங்கள் எல்லாத்திலயும் கெட்டிக்காறங்களுங்கோ. நல்லூரில ஐஸ்கிறீம் கடையத் தவிர கச்சான் கடையில இருந்து எல்லாக்கடையும் அவங்கள் நடத்துறாங்கள். அதவிட 'அக்கா வாங்கோ அம்மா வாங்கோ மலிவு மலிவு' எண்டு கத்திக்கத்தி விக்கிறாங்கள். எங்கண்ட வியாபாரியளுக்கு வாய்க்குள்ள கொழுக்கட்ட பாருங்கோ. பேசாம கடையள வாடகைக்கு போட்டுட்டு பேசாம இருக்கீனமுங்கோ.

எங்கண்ட வியாபாரியள் உப்பிடித்தானுங்கோ. பேக்கறியில பாணப்போட்டு கடையில கொண்டுவந்து குடுத்துட்டுபோடுவினமுங்கோ. சனம் கடையில போய்த்தான் வாங்கோணும். அவங்கள் சின்ன வண்டில்ல காலம பின்னேரம் வீடுவீடாக் கொண்டுபோய் பாண் பணிஸ் எண்டு விக்கிறாங்கள். எங்கண்ட ஆக்களின்ர சோம்பல் தானுங்கோ எங்கள நடுத்தெருவில நிக்கவிட்டிருக்கு.

வண்டில்கார வைரவி அப்பு

# எப்போது தீரும் கள்ளச் சாராயத் தொல்லை?

நாட்டின் போதைப் பொருள் மற்றும் கள்ளச்சாராய ஒழிப்பு நடவடிக்கைகள் தற்போது அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் மலையகத்தில் பல பெருந்தோட்டப்புறங்களில் இவை இன்னமும் ஒழிக்கப்படாமல் இருப்பதன் மர்மம் மட்டும் புரியாத புதிராகவே உள்ளது. எவ்வளவுதான் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும் விற்பனையில் ஈடுபடுபவர்கள் பல இடங்களில் இலகுவாக தமது வேலைகளை நடத்திக் கொண்டேதான் இருக்கின்றனர்.



சப்ரகமுவ மாகாணத்தின் உடவலை நகரப்பகுதியில் அமைந்திருக்கும் அக்கரவலை தோட்டப்பிரிவுக்குட்பட்ட 7 ஏக்கர் எனும் தோட்டப்பிரிவில் தற்போது 35க்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இத்தோட்ட மக்கள் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் வேலைசெய்து வருகின்றனர். இத்தோட்டத்தில் கடந்த பத்து வருடங்களாக கள்ளச்சாராயம் மற்றும் எமரேஜன் என்ற போதைப் பொருளும் விற்கப்பட்டு வருகின்றன. இதனால் பல தொழிலாளர்கள் வேலை முடிந்ததும் தமது உடல் அலுப்பைப் போக்க தினமும் இதனை உட்கொள்வதில் ஆர்வம் செலுத்துகின்றனர். இதனால் தமது உடல் நிலையிலும், குடும்பப் பொருளாதார நிலையிலும் பாரிய பின்னடைவைச் சந்தித்து வருகின்றனர்.

◄ எம். சந்திரசேகரன் ►

தொழிலாளர்களின் ஊதியத்திற்குத் தகுந்தாற்போல சிறு சிறு அளவுகளில் குறைந்த விலையில் இப்போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. எல்லாவற்றிலும் முக்கியமான விடயம் வயது போன பெண்களும் தேயிலைத் தோட்டத்தில் கஷ்டப்பட்டு உழைக்கும் சில பெண்களும்கூட இதனை அருந்துவதாகத் தெரிகின்றது. ஒரு சில வீடுகளில் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து இவற்றை அருந்திவிட்டு சண்டையிட்டுக் கொள்வதும் அதனைப் பிள்ளைகள் பார்த்துப் படிக்கமுடியாமல் இருப்பதாகவும் தெரியவருகின்றது. இவர்களின் இச்செயல்களைப் பார்த்து படிக்கும் பிள்ளைகளும் நாளடைவில் போதைப்பொருளுக்கு அடிமையாவதைத் தவிர்க்கமுடியாது போகும். அவ்வளவு ஏன் தன் பிள்ளைகளையே அனுப்பி இவற்றை வாங்கிவரும்படி கூறும் பெற்றோர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

அண்மையில் புசல்லாவைப் பகுதியில் தாய் குடித்துவிட்டு பிள்ளையை துன்புறுத்தியதால் அப்பிள்ளை தற்கொலை செய்துகொண்டமை யாவரும் அறிந்ததே. நிலைமை இன்று அந்தளவு மோசமாகிவிட்டது. இந்தக் கள்ளச் சாராய விற்பனையைத் தடுக்க காவல்துறையினர் பல தடவைகள் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனாலும் இவை இன்னமும் ஒழிக்கப்படாமலேயே உள்ளது. இந்நிலைமை இப்படியே நீடித்துச் செல்லுமானால் எதிர்காலத்தில் இப்பகுதி சீரழிந்து சின்னாபின்னமாகிவிடும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் முக்கிய கடமையாகும். அதுமட்டுமன்றி தோட்டப்புறங்களில் உள்ள படித்த இளைஞர் யுவதிகள், இளைஞர் குழுக்களை அமைத்து விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடலாம். அன்றேல் நாளைய மலையக சமுதாயமும் அடிமை வாழ்க்கை வாழவேண்டி ஏற்படும்.


சேர் நான் கம்ப்யூடர் வாங்க கம்பனிக்கு போன் போட்டேன் (போன போட்டா உடைஞ்சிராது???) அவங்களும் கம்ப்யூடர் அனுப்பி வைச்சாங்க. சரின்னு ஓப்பின் பன்னினா என்னங்க என்ன என்னமோ குடுத்திருக்கிறாங்க இதெல்லாம் என்னன்டு கேட்டேன் அதுக்கு அவரு பட்டனா இருக்கிறது 'கீ' போர்டு, சின்னதா வாலோட இருக்கிறது 'மௌஸ்',அப்புறம் கண்ணாடிமாதிரி இருக்கிறது 'மொனிட்டர்',பொக்ஸ் மாதிரி இருக்கிறது சி.பி.யு' ன்னாரு ..... அப்படியா சரின்னு நானும் கீ போர்டுல வரிசையா ஆணிகள சொருகி எங்க வீட்டு 'கீஸ்' எல்லாத்தையும் மாட்டி வச்சேங்க. (ஆணி சொருகுறதுக்கு வசதியாத்தான் பட்டனா குடுத்திருக்காங்க ) அப்புறம் ஒரு எலி கூண்டு வாங்கி கூண்டுக்குள்ள 'மௌஸ்' புடிச்சு உள்ள போட்டேன்.

சி.பி.யு. அது என்னன்டு எனக்கு தெரியலை ......அப்புறம் ஒரு டி.வி. ............ ஆனா பாருங்க நான் கம்ப்யூடர் தான் கேட்டேன் இந்த நாதாரிப்பசங்க அனுப்பாம என்னென்னமோ அனுப்பி இருக்கானுக . நானும் செம டென்சன் சேர் நீங்களே சொல்லுங்க....



# ‘சுகாதார சீர்கேட்டால் சீரழியும் சுன்னாகம் தெற்கு கண்ணகி குடியிருப்பு



‘வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்திவிட்டார்கள். எங்களை இன்னும்ஏன்மீள்குடியமர்த்தவில்லை.நாங்கள்இடம்பெயர்ந்து 21 வருடங்கள் ஆகிவிட்டன. எங்களின் மீள்குடியமர்வுபற்றி எவ ரும் சிந்திக்கவுமில்லை. எங்களை மீள் குடியமர்த்துமாறு எவரும் அழுத்தம் கொடுக்கவும் இல்லை. நாங்களும் மனிதர்கள்தானே. நாங்கள் எங்கள் சொந்த முகவரியைத் தொலைத்து 21 வருடங்கள் ஆகிவிட்டன’

இது இடம்பெயர்ந்து இன்னமும் மீளக்குடியமராமல் 21 வருடங்களாக அகதி முத்திரையோடு ‘முகாமில்’ வாழும் ஒருவரின் வலிமிகு ஆதங்கம். இடப்பெயர்வின் வலிகளைச் சுமந்து வாழும் மக்களின் மீள்குடியமர்வு தொடர்பான விடயங்களை அறிந்துவர அண்மையில் சுன்னாகம் தெற்கு கண்ணகி குடியிருப்பு முகாமுக்குச் சென்றிருந்தோம். மருதனார்மடம் சந்திக்கும் சுன்னாகம் சந்திக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் காங்கேசன் துறை வீதியின் கிழக்குப் பக்கமாக கண்ணகி குடியிருப்பு அமைந்துள்ளது. இதில் 148 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 36 குடும்பங்கள் இறுதி யுத்தம்வரை வன் னியில் இருந்துவிட்டு வந்தவர்கள். கண்ணகி குடியிருப்பில் வாழும் மக்கள் பலாலியை அண்மித்த கிராமங்களான மயிலிட்டி, தையிட்டி முகாம்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள். கடற்தொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டு தமது சொந்த நிலத்தில் வாழ்ந்து வந்த இவர்களில் பெரும்பாலானோர் தற்போது கடல் உணவுகளை பிறரிடம் வாங்கி உள்ளூர் சந்தைகளில் விற்கிறார்கள். சிலர் கூலிவேலை போன்ற சிற்சிறு தொழில்களில் ஈடுபடுகிறார்கள்.

தங்கள் இடப்பெயர்வு, தற்போது தாம் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கண்ணகி குடியிருப்பு முகாமின் தலைவர் கணேசன் சதீஸ் குறிப்பிடும்போது, ‘எமக்கு அருகில் இன்னொரு முகாம் இருக்கிறது. அது சபாபதி குடியிருப்பு. இரண்டு முகாம்களை யும் ஒரு வீதிதான் பிரிக்கிறது. பெருமளவு எண்ணிக்கையான மக்கள் வசிப்பதால் நிர்வாகச் சிக்கல்கள் கருதி இரு முகாமாக பிரித்துள்ளனர். மற்றைய முகாமிலும் சுமாராக 160 குடும்பங்கள் இருக்கிறார்கள். நாங்கள் எமது சொந்த இடத்தில் கடற்தொழில் செய்தோம். இப்போது தொழில் செய்ய முடியாத நிலை. நாம் தொழில் செய்வதற்கான கடற்பகுதி உயர்பாதுகாப்பு வலயத்துள் இருக்கிறது. மாற்றுப்பிரதேசங்களில் தொழில் செய்வதற்கு சாத்தியமில்லை. அப்பிரதேச மீனவர்களே அப்பகுதிகளில் தொழில் செய்யும் நிலமை உள்ளது. எனவே எம்மில் பலர் யாழ்ப்பாணம் வடமராட்சி போன்ற இடங்களில் மீன்களைக் கொள்வனவுசெய்து சந்தைக ளில் விற்பனை செய்கிறார்கள்’ என்றார்.


கலியுகன்

‘ஐந்தாறு குடும்பத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் மலசலகூடம் கட்டித் தந்துள்ளார்கள். ஒரு பத்திற்கு 7 அறை, மற்றையது பத்திற்கு 9 அறை எனும் வீதத்தில் அமைத்துத் தந்துள்ளார்கள். வன்னியிலிருந்தும் பலர் வந்துள்ளதால் நாங்கள் காலை வேளைகளில் வரிசையில் நிற்கவேண்டிய நிலை காணப்படுகிறது. மக்கள் தொகை அதிகம் என்பதால் அடிக் கடி நிரம்பிவிடுகிறது. அறிவித்தாலும் பிரதேசசபை சுத்திகரிப்பாளர்கள் உடன் வருவதில்லை. சிலவேளைகளில் அறிவித் தால் இரண்டு வாரத்தின் பின்போ அல்லது ஒரு மாதத்தின் பின்போ வருகிறார்கள். எமது நிலைமை அவர்களுக்குப் புரிவதில்லை. தற்போதுகூட ஒரு தொகுதியில் மூன்று அறைகள் அடைத்து அப்பிரதேசம் எங்கும் துர்நாற்றம் வீசுகிறது. அவ் வாறான வேளைகளில் எம்மால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அதற்கு அருகிலும் சிலர் வாழ்கிறார்கள். மழை காலங்களில் இன்னும் மோசமாக இருக்கும்’ என்று தன் நிலையை எடுத்துரைத்தார் அக்குடியிருப்புவாசி ஒருவர். இந்நிலைமையால் அங்கு அடிக் கடி தொற்று நோய் ஏற்படுவதாகவும் கூறுகிறார்.

மக்கள் நெருக்கமாக வாழ்வதால் பெருமளவு குப்பைகளும் சேர்கின்றன. அவற்றை அப்புறப்படுத்துவதிலும் சிரமங்கள் இருப்பதாகக் கூறும் முகாம் மக்கள் யாழ். குடாநாட்டில் டெங்கு தீவிரமாகி வருவதால் தமது பிரசேத்தில் இலகுவாக தொற்று ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளதாக பயத்திலுள்ளனர். தங்களது சொந்த இடங்களாயின் பிரதேச சபையிடமோ சுகாதாரத் திணைக்களங்களிடமோ அதிகாரமாகக் கேட்டு தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். தாங்கள் இடம்பெயர்ந்தவர்கள் என்பதால் தமது கோரிக்கைகள் அலட்சி யப்படுத்தப்படுவதாக இம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஜெகன் நந்தினி என்ற ஒரு இளம் தாய் ‘எனக்கு மூன்று பிள்ளைகள். மூன்றுபேரும் சிறுவர்கள். உந்த மலசலகூடத்தால என்ர பிள் ளையளுக்கு நெடுக வருத்தம். நீங்களே பாருங்கோ என்ர வீட்டுக்கும் அதுக்கும் உள்ள தூரத்த. இதில உத கட்டவரேக்க நாங்கள் வேண்டாம் வேண்டாம் எண்டனாங்கள். கட்டித்தந்தவ கேக்கேல்ல. ஏதோ நவீன முறை, ஒரு பிரச்சினையும் வராது எண்டவ. இப்ப உதால பெரிய பிரச்சின. வீட்டில இருந்து சாப்பிடக் கூட முடியேல்ல’ என்றார்.

‘ஐம்பது குடும்பம் பாவிக்கிறத இப்ப நூறு குடும்பம் பாவிக்கிறம். அப்ப நெடுக உது நிரம்பும். ஆனா உத சுத்தம் செய்யிறவங்களுக்கு அறிவிச்சா உடன வரமாட்டாங்கள். உதால கிருமியள் பரவி வருத்தம் வந்தாப்பிறகுதான் வருவாங்கள். நீங்கள் ஒருக்கா வந்து பாருங்கோ’ என்ற மினிக்கா என்ற தாய் எம்மை அதற்கருகில் அழைத்துச் சென்றார். அதன் துர்நாற்றம் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு இருந்தது. ஒரு சில நிமிடங்கள் எம்மால் ஜீரணிக்க முடியவில்லை. இலையான்களும் நுளம்புகளும் கூட்டம் கூட்டமாக அலைமோதின. அதற்கு அருகில் சிறு தொட்டியொன்று சிதைந்த நிலையில் சாக்கடையாக காணப்பட்டது. அது என்ன என்று கேட்டேன்.

‘இதுதான் தம்பியவ வெள்ளக் காறன்ர முறையாம். அங்க ஊத்துற தண்ணி இஞ்சதான் வருமாம். உதுக்குள்ள புழுக்கூட கெந்துது. நிலமட்டத்தில இருக்குது. மழை வந்தா உந்தத் தண்ணிமுழுக்க எங்கண்ட வீட்டுக்க வந்திடும். மழைகாலத்தில முழங்கால் அளவிற்கு தண்ணி வந்திடும். இஞ்ச எங்கள குடியேற்றின புதிதில் நாங்கள் என்ன கேட்டாலும் உதவுவார்கள். இப்போது எங்களைக் கண்டால் எரிந்துவிழுகிறார்கள். ஏன் எனப் புரியவில்லை. நாங்கள் இன்னமும் அகதி முத்திரை குத்தப்பட்டவர்கள் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். எங்கள் சுகாதார மருத்துவ அடிப்படைத் தேவைகளை நாங்களே பார்க்கவேண்டும் என நினைக்கிறார்கள் போலும். எங்களை எங்கள் சொந்த நிலத்தில் குடியேற்றிவிட்டு இவர்கள் எங்களைத் திரும்பிப்பார்க்காது விட்டாலும் நாங்கள் கவலைப்பட மாட்டோம். நாங்கள் பிழை த்துக்கொள்வோம்’ என்று அந்தத் தாய் வேதனைப்பட்டார்.

கண்ணகி குடியிருப்பில் வாழ்பவர்களுள் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களின் நிலை மிக மோசமானது. இவர்களுக்கு தொழில் வாய்ப்பில்லை. சீரான நிவார ணமில்லை. இது தொடர்பாகக் கூறும் யோ கராசா மனோன்மணி என்ற பெண்மணி, ‘நாங்கள் முல்லைத்தீவு அளம்பிலில் இருந்து வந்தனாங்கள். நாங்கள் செட்டிக் குளம் முகாமில இருந்தனாங்கள். எண்ட அவர் இல்ல. நான் கூலி வேலைக்கு போய்த்தான் குடும்பத்தைப் பாக்கிறன். எனக்கு கையில செல் பீஸ் பட்டது. எனக்கு ஏலாத ஒரு பிள்ள இருக்கு. (மாற்று வலுவுடையோர்) அவவக் கவனிக்கவே ஒரு ஆள் வேணும். நான் தனிய விட்டுட்டு வெளியில போனா ஆரோடையும் சண்டபிடிச் சுட்டு நிப்பா. என்ன செய்யிறது. என்ர ஆம்பிளப்பிள்ளையும் வன்னியில காணாமல் போயிட்டான். அவன் இருந்திருந்தா எங்கள பாத்திருப்பான். எங்களுக்கு ஊரில காணி இருக்கு. அங்க விட்டா ஆக்களப் பிடிச்செண்டாலும் தோட்டம் ஏதும் செய்து பிழைக் கலாம். இஞ்ச இருந்து என்னத்தச் செய்யிறது’ என்றார்.



தங்களை விரைவில் மீள்குடிய மர்த்தப்போவதாக அறிவித்ததாகக் கூறும் அருணாசலம் சிவநாதன் என்பவர் அவ்வாறு தம்மை குடியமர்த்துவதாகக் கூறியே ஆறுமாதங்களுக்குமேல் கடந்து விட்டது என்றும் தாங்கள் பலாலிக்கு அண்மித்த பிரதேசங்களில் வசிப்பதால் தங்கள் மீள் குடியேற்றம் குறித்த கதைகள் நம்பிக்கை அற்றவை எனவும் சலிப்புடன் குறிப்பிடுகின்றார்.

இந்த முகாமில் வாழும் தேவராசா ராசாத்தி என்பவர் யுத்தத்தின்போது ஹெலியிலிருந்து சுட்டதில் தனது ஒரு கண்ணை இழந்ததாகக் கூறினார். ‘என் கணவருக்கு 2 கண்ணும் தெரியாது. அவர் வேலைக்குப் போகேலாது. நான் கூலிக்குப் போய்த்தான் எங்கண்ட சீவியம் போகுது. கஸ்ரத்தில ஒரு பிள்ளையின்ர படிப்ப பாதியில நிப்பாட்டிட்டம். மற்றது சின்னது. படிப்பிக்க விருப்பம்தான். என்ன செய்யிறது எங்கண்ட தலை யெழுத்து’ என்று வேதனையுடன் தெரி வித்தார்.

மயிலிட்டி, தையிட்டி பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து வாழ்பவர்களின் மீள்குடியேற்றங்கள் பற்றி இப்போது எவரும் கதைப்பதில்லை. அவர்களை அப்படியே மறந்துவிட்டார்கள். எனினும் அவர்கள் முகாம்களில் வசிக்கும் காலம் வரையிலாவது அவர்களுக்கான அடிப்படை வசதிகளை தொடர்ந்து செய்து கொடுக்கவேண்டியது அவசியமாகின்றது. மிக மோசமான நிலையில் காணப்படும் சுகாதாரப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதே. டெங்கு அரக்கனும் யாழ். குடாநாட்டை அச்சுறுத்தத் தொடங்கியிருக்கும் நிலையில் மழை தொடங்கமுன் அவர்கள் எதிர்பார்க்கும் அடிப்படைச் சுகாதார வசதிக்ளையாவது செய்து கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமே.



# மீட்சிபெறுமா திருகோணமலை

# RB-4 கிராமம்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சேருவில பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ்க் கிராமங்களில் ஒன்றுதான் RB-4. யுத்த காலத்தில் சகல வழிகளிலும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இதுவும் ஒன்று. இன்று திருகோணமலை மாவட்டத்தின் ஓர் மூலையில் அமைதியாகவும் அடிமையாகவும் உள்ளது.

இக்கிராமத்தைச் சுற்றி பல கிராமங்கள் ஓரளவு நல்ல நிலையில் காணப்பட்டாலும் இக்கிராமம் அடிப்படை வசதிகளற்ற நிலையில் காணப்படுகின்றது. இக்கிராமம் தமிழ் சிங்கள எல்லைக் கிராமமாக காணப்படுவதால் ஒவ்வொரு இனக்கலவரத்தின்போதும் முற்றாக சூறையாடப்பட்டது. கடத்தல், கற்பழிப்பு, கொலை இவை எல்லாமே எல்லாக் குடும்பங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. யுத்தம் முடிந்த பின்னராவது அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பார்களா என்று பார்த்தால் அதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

இக்கிராமத்தின் உள்வீதிகளுக்கு மின்சாரம் இல்லை. கல்வியில் பின்தங்கியுள்ள இக்கிராமத்தில் இதுவரை ஒரேயொரு மாணவிதான் பல்கலைக்கழகம் சென்றுள்ளார். மக்களுக்கு தொழில் முயற்சிகள் என்று பெரிதாக ஒன்றுமில்லை. விறகு உடைத்து விற்பதும் காட்டில் உள்ள பழங்களை எடுத்து விற்பனை செய்வதுமாகவே இவர்களது வாழ்க்கை ஓடுகின்றது. தற்போது அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களால் சில தொழில் முயற்சிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

எல்லாவற்றையும்விட இம்மக்களை தற்போது அதிகமாகப் பாதித்துள்ள விடயம் குடிநீர்ப் பிரச்சினை. இக்கிராமத்தை குடியேற்றிய ஆரம்பகாலத்தில் அரசாங்கத்தால் குடிநீருக்கென கட்டித்தந்த இரண்டு கிணறுகள்தான் இங்கு காணப்படுகின்றன. அதிலும் எந்த நேரமும் நீர் கிடைப்பதில்லை. மழை பெய்து கிணறு ஊறியபின், அந்த நீர் தெளியவேண்டும். இல்லையேல் காய்ந்து வறண்டு வெறும் மொட்டைப் பாறைகள்தான் காணப்படும். இம்மக்கள் தொலைதூரம் சென்று தமக்குத் தேவையான நீரை குடங்களிலும் வாளிகளிலும் சுமந்து வருகின்றனர். மக்கள் இப்பிரச்சினை தொடர்பாக பலரிடம் முறையிட்டுள்ளனர்.



பத்மநாதன் நேசமணி

இம்மக்களின் நிலைகருதி ASB என்ற அரசார்பற்ற நிறுவனம், ஒரு குழாய் கிணறொன்றை நிறுவியுள்ளது. இம்மக்களுக்கு அக்கிணறு ஓரளவு குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்கின்றது. 'இந்தக் குழாய்க் கிணறு அமைப்பதற்கு முன்னர் நாங்கள் வாய்க்கால் தண்ணியத்தான் குடிச்சனாங்கள். அதுவும் விடிய நாலு மணிக்கே போய் எடுக்கணும். இல்லாட்டி அதுல சவுக்காரத் தண்ணி கலந்து சவுக்காரம் மணக்கும்' என்றார் அப்பிரதேச மாதர் சங்க பொருளாளரான பத்மநாதன் நேசமணி.

இம்மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை முற்றாகத் தீர்க்குமுகமாக 2009 ஆண்டு உள்ளூராட்சி திணைக்களத்தால் 'சுகாதாரமான குடிநீர்த் திட்டம்' (CWSSP) என்றொரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தினூடாக ஒவ்வொரு கிராமத்திலும் மேல்நிலைத் தண்ணீர் தொட்டிகள் கட்டி குடிநீர் விநியோகிக்கும் திட்டம் ஒன்று ஆரம்பமானது. இதற்கென குடியிருப்பாளர்கள் ஒவ்வொருவரிடமும் தலா 1550 ரூபாய் வரை கட்டம் கட்டமாக அறவிடப்பட்டுள்ளது. பிரதேசத்தில் காணப்படும் கிராமியக் குழுக்களிடமே மக்கள் பணம் செலுத்தியுள்ளர். இருந்தும் இந்தத் திட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படாதது குறித்து அம்மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

> 'குடி தண்ணீருக்கு மழை பெய்து கிணறு ஊறியபின், அந்த நீர் தெளியவேண்டும். இல்லையேல் காய்ந்து வறண்டு வெறும் மொட்டைப் பாறைகள்தான் காணப்படும்'

இத்திட்டத்திற்குப் பொறுப்பான உள்ளூராட்சித் திணைக்களத்தின் திட்ட இணைப்பாளர் பரமசிவத்தை தொலைபேசியில் தொடர்புகொண்டு இதன் தாமதம் பற்றிக் கேட்டோம்.

**திருமலை ராஜ்குமார்**

'இது ஏன் என்றால் Electricity connection இன்னும் கொடுக்கவில்லை. அதனால இந்தத் திட்டத்த நடைமுறைப்படுத்த ஏலாம இருக்கு. நாங்கள் இது தொடர்பாக கதைச்சிருக்கிறம். இம்மாத கடைசிக்கு முதல் தருவதாக கூறியிருக்கின்றார்கள். இந்தத் திட்டத்துக்காக நாங்க காசு எடுக்கல்ல. பைப் லைனை நிலத்துக்கு கீழ பதிக்கவேணும்தானே. அதுக்காக கிராமியக் குழுக்களை அமைத்து அவர்கள்தான் அறவிட்டனர். அதுவும் எல்லோரும் தரல்ல. சிலர்தான் கொடுத்தார்கள். என்றாலும் நாங்கள் அமைச்சர்மார் மற்றும் எங்களுடைய கூட்டங்களிலயும் கதைச்சிருக்கம். அதன்படி அந்தத் திட்டம் இம்மாத கடைசிக்குள் அமுலுக்கு வரும்' என்றார்.



எல்லா வேலைகளும் பூர்த்தியான நிலையில் மின்சாரசபை இந்த திட்டத்தில் இழுத்தடிப்பு செய்கின்றது. எனினும் இக்குடிநீர் திட்டத்தின் பொறுப்பாளர் கூறியதைப் போல் இம்மாத இறுதிக்குள் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.


1. 1957ஆம் ஆண்டு விவசாயத்திற்காக குடியேற்றப்பட்ட இக்கிராமத்தில 50 சிங்கள தமிழ்க் குடும்பங்கள் வசித்தன.
2. தற்போது 84 குடும்பங்களாக விரிவடைந்து 222 மக்கள் வசிக்கின்றனர்.
3. இவர்களில் 21 பெண்கள் யுத்தத்தால் விதவைகளானவர்கள்.
4. ஏழு பெண்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.
5. 20 சிறுவர்கள் தாய் தந்தை இருவரையுமே இழந்துள்ளனர்.





ஊர் சுற்றி...

◄ எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு) ►



# தமிழர்-இஸ்லாமியர் ஒற்றுமையை அவசியமாக்கும் மர்ம மனிதன்

மர்ம மனிதர்கள் என்ற அச்சத்தில் நிம்மதியில்லாமல் நாட்டில் சில பகுதிகளில் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு, மலையகப்பகுதிகளில் உள்ளவர்களுக்கு பாதுகாப்பு வழங்கி அச்சத்தை நீக்கவேண்டிய பாதுகாப்புச் செயலாளரும் பாதுகாப்பு படை அதிகாரிகளும் படையினரின் பொறுமையை சோதிக்கும் வகையில் நடந்தால் விளைவுகள் மோசமாகவே அமையும் என்று பொதுமக்களையே அச்சுறுத்துகின்றனர்.

சட்டத்தையும் ஒழுங்கையும் யாரும் கையிலெடுக்க அனுமதிக்கமாட்டோம் என்கிறார். யாழ்ப்பாணத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலுள்ள யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க,



மர்மமனிதர் என்றோ கிறீஸ் மனிதர் என்றோ எவருமில்லை. இதுவெறும் கட்டுக்கதைஎன்றும்பொறுப்புள்ளவர்கள் கதைவிடுகிறார்கள். சட்டத்தையும் ஒழுங்கையும் கையிலெடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மர்மமனிதர் என்ற பீதியில் அச்சத்துடன் வாழும் மக்களை எச்சரிக்கும் அதிகாரிகளும் அரசாங்கமும் இந்த அச்சமூட்டும் மர்ம மனிதர்களைக் கண்டு பிடிக்கத் தவறினால் அப்பகுதிப்பாதுகாப்புத் தரப்பினர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்காதது ஆச்சரியம்! தமிழர்கள், முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலேயே மர்ம மனிதர்களின் நடமாட்டமும் செயற்பாடுகளும் தொடங்கி நீடித்துக் கொண்டிருக்கின்றன.

மர்ம மனிதர்கள் விவகாரம் பூதாகரமாகிவிட்டது. வதந்திகள் பல் வேறு வடிவங்களில் பரவிவருகின்றன. வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து மக்கள் அச்சம் நீங்கி நிம்மதியாக வாழ்வதற்கு வழிகாணவேண்டிய பொறுப்பும் கடமையும் பாதுகாப்புத் தரப்பினரு க்கும் அரசுக்கும் உள்ளது. மர்ம மனிதர்கள் விவகாரம் தொடர்பில் முஸ்லிம் பிரதேசங்களில் அதிகரித்துள்ள பதற்றநிலை மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஆராயும் பொருட்டு பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மர்ம மனிதன் விவகாரம் பூதாகரமாகியிருப்பதற்குக் காரணம் வதந்திகளே யென்றும் அரசாங்கமோ முப்படையினரோ இந்த அமைதி யின்மைக்குக் காரணம் அல்ல வென்றும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சில், அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலாமா தலைமையில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பள்ளிவாசல் கள் சம்மேளனம் மற்றும் உலமா சபை பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சம்மேளனப் பிரதிநிதிகள் தெரி வித்த கருத்துக்களுக்குப் பதிலளித்த, பாதுகாப்புச் செயலாளர், பள்ளி வாசல் நிர்வாகிகள் மற்றும் புத்திஜீவிகளை உள்ளடக்கிய குழு ஒன்றினை அமைத்து அவர்கள் மூல மாக இவ்வாறான விடயங்களைக் கையாள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கமுடியும் எனவும் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் எதிர்காலத்தில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியும் எனவும் பாதுகாப்புச் செயலர் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சந்திப்பும் கலந்தாலோசனையும் வரவேற்கவேண்டிய முன்மாதிரி பதற்றம் நிறைந்துள்ள மிழ்ப் பகுதிப் பிரமுகர்களையும் மதத்தலைவர்களையும் பாதுகாப்புச் செயலர் அழைத்துக் கலந்துரையாடுவதும் பதற்றம் தணியவும் அமைதி வாழ்க்கைக்கும் வழிவகுக்கலாம்.

தமிழ் மக்களும் இஸ்லாமிய மக்களும் செறிந்து வாழும் பகுதிகளிலேயே மர்மமனிதன் பூதாகரமாகியி ருப்பதாலும் வதந்திகள் பரவுவதாலும் தமிழ் முஸ்லிம் உறவுகளை இச்சமயத்தில் வலுப்படுத்த வேண்டியது மிகமுக்கியமும் அவசியமுமாகும். கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தமிழ் முஸ்லிம் கிராமங்கள் அடுத்தடுத்து அமைந்திருப்பதால் மர்ம மனிதன் விவகாரம் வேறு வழியில் திசை திருப்புவதற்கு சில சக்திகள் முயற்சி செய்ய க்கூடும். இப்படி ஒருகுரல் எழுந்ததும் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது நினைவில் கொள்ளத்தக்கது.



மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட ங்களில் மட்டுமல்ல மற்றும் மர்மமனிதன் பற்றிய பதற்றம் நிலவும் பகுதிகளில் வாழும் தமி ழர்களும் இஸ்லாமியர்களும் சேர்ந்து விழிப்புக்குழுக்களை அமைத்து மர்மமனிதன் பிரச்சினைக்கு மட்டுமல்ல இரு சமூகங்களும் எல்லா விஷயங்களிலும் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்ப தற்கான அமைப்புக்களை ஏற்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

மர்மமனிதன் என்ற பூதத்தை உருவாக்கிய பொறுப்பு யார் தலையிலாவது கட்டிவிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இச்சமயத்தில் சிறுபான்மைச் சமூகங்கள் தமது ஒற்றுமையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசிய மாகும்.

நடந்து முடிந்த தேர்தல்களின் விளைவாகவும் மர்மமனிதன் தோன்றியிருக்கலாம், நடக்கப்போகின்ற தேர்தல்கள் காரணமாகவும் மர்மமனிதர்கள் உருவாகியிருக்கலாம். எதற்கும் சிறுபான்மை மக்கள் விழிப்புடன் ஒற்றுமையை வலுப்படுத்துவது அவசியம்.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் இந்த நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த எடுக்கும் முயற்சியாகவே நாம் இந்த மர்மமனிதன் விவகாரத்தைப் பார்ப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கூறியிருக்கின்றார். மர்மமனிதன் அல்லது கிறீஸ் மனிதன் விவகாரம் தொடங்கியதுமே நடவடிக்கை எடுத்திருந்தால் இது தொடர்ந்திருக்காது.

மர்மமனிதன் சம்பந்தப்பட்டவர்களைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைக்கும் படியும் மக்கள் சட்டத்தைக் கையிலெடுக்கக் கூடாதென்றும் செயலாளர் சொல்லியிருக்கிறார். காவல் துறையினர் மீதே அவநம்பிக்கை தெரிவிக்கப்பட்டதும் ஒரு காவலர் மர்மமனிதன் களேபரத்தில் அநியாயமாகக் கொல்லப்பட்டதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

விழிப்புக் குழுவொன்றின் மீது படையினர் தாக்கியதாகவும் செய்திகள் வெளிவந்தன. மர்மமனிதன் வதந்தியாக இருந்தாலும்கூட அதற்கு யார் மீதாவது பொறுப்பைச் சுமத்தி சமூகங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

பாதுகாப்புத் தரப்பினர் முன்னெச்சரிக்கையாக செயல்படவேண்டியது அவசியமும் அவசரமுமாகும். என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை!



## ◄ நக்கல் நையாண்டிப் போடியார் ►



எப்புடி சொகமா இருக்கீங்களா...?

இப்பதான் பெருநாள் சாப்பாடெல்லாம் சாப்பிட்டு வயிறு வீங்கிப் போச்சுடப்பா. அல்லயல் சனங்கள் நல்ல சாப்பாடுகள் தந்திச்சி. என்ட மருமகளுக்கு வீட்டுச் சாமான் வாங்க அட்டாளச்சேனை மார்க்கெட்டுக்குப் போனன்டப்பா. அங்க லைப்ரரிக்குப் பக்கத்தில மார்க்கட்டு இரிக்கி. லைப்ரரியில் யாரும் சத்தம் போட்டா, 'இது என்ன லைப்ரரியா? இல்ல மீன் மார்க்கெட்டா?' எண்டு கேப்பாங்க. ஆனா, இங்க ரெண்டும் பக்கத்துப் பக்கதுல இரிக்கி. அதுவும் பள்ளிவாசலுக்கு முன்னாளயும் இரிக்கி பாருங்களன்.

நிம்மதியா பேப்பர் வாசிக்கவும் ஏலாமக்கெடக்கு எண்டு அங்க ஒருத்தர் முனங்கிட்டு வந்தாரு. இங்க அரசியல்வாதிகள் பள்ளிவாசலுக்கு எதுக்கே மார்க்கெட்டு கட்டக்கூடாது என்கிறாங்க. சனம் இங்கதான் மார்க்கெட்டு வேணும் எண்டு அடம்பிடிக்குதுகள். இங்க மார்க்கெட் கட்டுறதுக்கு பத்து மில்லியன் பாஸாகி இரிக்கி. இடத்தக் காட்டுங்க, கட்டுவம் என்கிறாங்க. இதால, யாவாரிமார் சரியான இடமும் தொழிலும் இல்லாததால அங்கயும் இங்கயும் அலஞ்சி திரியுறாங்க பாருங்க.

காச வெச்சிக்கிட்டு மார்க்கெட் கட்ட ஏலாம இந்த அட்டாளச்சேன கிராமம் இப்படிக் கெடக்கிறத யாரும் கணக்கெடுக்கிறமாதிரி தெரியல. பிரதேச சபையும் நல்ல தூக்கம். அவங்கதான் பூட்சிட்டியில சாமான் வாங்குறவங்களாச்சே. பேசாம அந்தக்காச உண்டியலில் போடுங்கோ...! புண்ணியமா போகும்.

மறுகாவும் வருவன்...!




எனது மேசை மணிக்கூட்டின் 'டிக் டிக்... ஓசையையும், இதயத்துடிப்பின் 'லப் டப்.... ஓசையையும் விட அனைத்துமே ஊமையாகிப்போன இராப்பொழுது.. எனது கையிலிருந்து விழுந்த டயறியை எடுத்தபோது மடிந்திருந்த பக்கத்தைப் புரட்ட, எனது நண்பன் சிவாவைப் பற்றிய நினைவுக் குறிப்புக்கள் எழுதப்பட்டிருந்தன. மெல்ல மெல்ல கடிகாரத்தின் 'டிக் டிக்' ஓசை மறையத் தொடங்குகின்றது.

'என்னை விட்டிடுங்க நான் தான் மாட்டேனென்று சொல்லிப் போட்டேனே. இது சிவாவின் குரல்.

நிர்வாணப்படுத்தப்பட்டு இருட்டறைக்குள் வைக்கப்பட்டிருந்தான். அவனுக்கு ஆடையாக இருட்டு விளங்கியதால் மகிழ்ந்து கொண்டான். திடீரென்று ஒளி கசிந்தது. ஐந்து பேர் உள்ளே நுழைந்தார்கள்.

'த....தண்ணி...

'...............'

'இது தண்ணி இல்லை'

அதிலே சிறுநீர் நுரைத்திருந்தது. வேலை தேடுவதற்காக வெளியிடம் சென்றவன் இனந்தெரியாத கும்பலால் பிடிபட்டான். வந்ததிலிருந்தே இருட்டறைக்குள் இருப்பதனால் இப்போது இரவோ பகலோ என்று கூடத் தெரியாமல் இருந்தான். அவனது கண்கள் கட்டப்பட்டன.

'உனது முடிவை மாற்றிவிட்டாயா?'

'என்னால முடியாது....'

'நீ எம்மோடு இருந்தால் புதுப் புது வீடுகள் வாங்கலாம், விதம் விதமான மோட்டர்பைக் இறக்கலாம், வேண்டாதவர்களைச் சுடலாம், உனக்கு விருப்பமான பெண்களைக் கடத்தலாம், இன்னும் என்னென்னவோ செய்யலாம்....'

'என் உயிர் போனாலும் உங்களோடு இருக்கமாட்டேன்....'

'அப்படியென்றால் நீ சாக ஆசைப்படுகிறாய்...'

'அதைப்பற்றிக் கவலையில்லை. இன்று சிந்திப்பதற்கே அச்சப்படும் நிலைதான் எமக்குள்ளது. நான் நினைக்கின்றேன் இன்று சிறைச் சாலைகளில் கைதிகளாக டொக்டர்கள், எஞ்சினியர்கள், கலைஞர்கள், மதகுருமார்கள் எல்லோருமே இருப்பார்கள். ஆனால் குற்றவாளி ஒருவர்கூட இருப்பதில்லை...'

'நீ கூடக் கதைக்கிறாய்.... எங்களோட இது வரைக்கும் யாரும் இப்படிக் கதைச்சதில்லை...'

'அது பரம்பரை பரம்பரையாக வந்தது. இடையில மாற்ற முடியாது....'

'உன்னை வெளியால விட்டால் எங்களுக்கு ஆபத்து. அதனால உன்னை இப்ப சுடப்போறம். கடைசி ஆசை ஏதும் இருந்தால் சொல்.....'

'சொன்னால் நிறைவேற்றுவீர்களா?'

'ம்.. பிறகு என்ன யோசிக்கிறாய்....'

'இல்ல, நீங்கள் ஒரு மனுசர், கடைசி ஆசை எல்லாம் நிறைவேற்றக் கேட்கிறியள் அதுதான்....'

'உனக்கு வாய் நல்லாத்தான் கூடிப் போயிற்று' கையை மடக்கி அவனது வயிற்றில் குத்தினான் ஒருவன்.

'என்னை நீங்கள் கொன்றுவிட்டு என் உடலை, ஆற்றிலோ, கடலிலோ போடாமல் புதைக்கவேண்டும். ஏனென்றால் நான் இறந்த விடயம் அம்மாவுக்குத் தெரிந்தால் அவவும் இறந்து விடுவா..... இன்னும் ஒரு உதவி.....'

'கேள்....'

'இப்போ இரவா பகலா, இரவென்றால் அத்தை மகள் தட்ஷாவை ஒரு தடவை பார்த்து விடுகிறேன். அடுத்த மாதம் இருவருக்கும் திருமணம். அவளென்னை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்திருப்பாள்....'

'இரவென்றால் எப்படி அவளைப் பார்ப்பாய்...'

'அவள் நாணம் நிறைந்தவள். எப்போதுமே மண்ணைப் பார்த்தபடியே குனிந்து செல்வாள். மண்ணில் பட்ட அழகான அவள் விம்பம் விண்ணில் தெரியும்'

'தாயை விட உனக்கு அவள்தானா முக்கியம். சாகப்போற நேரத்தில காதல் வேண்டிக்கிடக்குது....'

'இல்லை... இல்லை... இவ்வளவு நாளும் அன்னை முகத்தையே பார்த்தனான். அதனால் என்றும் இதயத்திலிருக்கும். இனித்தான் அவளைப் பார்க்க ஆசைப்படுகிறேன். இனி வாழவேண்டியவளும் அவளே...'

**வவுனியா ஜெயந்தன்**

'நிச்சயமாக நிறைவேற்றுகிறோம்... நாங்கள் தமிழா? சிங்களமா? உனக்கு நாங்க யாரென்று தெரியுமா?'

'ம்..ம்.. இனத்தில என்ன இருக்கு, மனத்திலதான் இருக்கு.. போன கிழமை ஊரில நான் இருக்கும்போது தமிழனுடைய ஆட்டோ ஒன்றில் நாய்க்குட்டி ஒன்று அடிபட்டு வீதியோரத்தில் கத்திக்கொண்டிருந்தது. அதற்கு மோட்டார் சைக்கிளில் வந்த சிங்கள ஆமிக்காரர்கள் மருந்து கட்டி விட்டதை நான் பார்த்தேன்'

'நல்லாக் கதை விடுகிறாய்.. தேவையில்லாமக் கதைக்காத...'

'நீங்கள் எந்தத் தமிழ் ஆயுதக்குழு உறுப்பினர்களோ எனக்குத் தெரியாது. ஆனால் நீங்களும் ஒரு தமிழன்தான். உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு தெருவோரங்களில் ஆங்காங்கே கிடக்கும் போது, உங்கள் தாய் சகோதரங்களுக்கு எப்படி வலிக்குமோ, அதே போன்றுதான், தமிழனாய்ப் பிறந்த எங்கள் ஒவ்வொருவருக்கும் வலிக்கும். காரணம், நாங்கள் எல்லாரும் தமிழ்த் தாயினுடைய பிள்ளைகள். எங்களுக்கு எப்போதும் ஒரே நாடுதான்'

'உண்மையாவா சொல்லுறாய்... எங்களுக்கு ஏதும் என்றால் உங்களுக்கு வலிக்குமா? நீ இதெல்லாம் எங்கட மனச மாற்றச் சொல்லேல்ல தானே..'

'நிச்சயமாக இல்லை...'

'நீங்கள் தமிழ் மக்களுக்காக எவ்வளவு நல்லதுகள் செய்திருப்பீங்கள். கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கள். எங்களுடைய் மாவட்டத்தில், பெரிய நூலகம் ஒன்றைத் திறந்து வைத்தமை, பல மாடிகள் கொண்ட மருத்துவமனையை உருவாக்கித் தந்தமை, அழகிய பூங்கா ஒன்றை அமைத்துத் தந்தமை, அந்நியன் எம் பிரதேசத்தை ஆக்கிரமித்து விடக்கூடாது என்பதற்காக சந்திகளில், பல தமிழ் பெரியார்களுடைய உருவச்சிலைகளை நாட்டி இருந்தமை, பல புடைவைக் கடைகளுக்குள் ட்றெஸ்ஸிங் றூமுக்குள் பெண்கள் உடைமாற்றும் போது திருட்டுத்தனமாக வீடியோ எடுப்பவர்களை கண்டு பிடித்து அவர்களைத் தெருத்தெருவாகக் கொண்டு சென்றது எல்லாம் யார்?'

**சிறுகதை**

'...............'

'நீங்கள் எங்களுக்குச் செய்கிற நல்லதுகள் மட்டும்தான் எங்கட மனசில இருக்குது....'

'லீடர் உன்னைச் சுடும்படி ஓடர் தந்திருக்கிறார். நாமும் சம்மதித்து விட்டோம். அதனால் சுடத்தான் வேணும். எமது கடைசி இலக்கு நீதான். இதன்பின் இப்படியான செயல்களில் ஈடுபடமாட்டோம்'

'அட.. நில்லறால் எனது உள்ளங்கையில் துவாரமிட்ட உங்களுக்கா இந்த இரக்கம், குண்டூசியை நகங்களுக்குள் ஏற்றிய உங்களுக்கா இந்த இரக்க குணம். எனக்குத் திடீரென்று மனம் மாறுபவர்களைப் பிடிக்காது....'

'சொல்வதை நம்பு...'

'உண்மையாகவா....'

'ம் .......'

'இப்படியென்றால் நானுங்களை எப்பவோ சந்தித்திருக்கலாம். முன்பு இறந்தவர்களைக் காப்பாற்றி இருக்கலாம். அப்படித்தானே.. அநியாயமாக எத்தனையோ உயிர்களின் இழப்புக்குக் காரணமாகிவிட்டீர்கள். அவர்கள் தமது வாழ்க்கையிலே எப்படியெல்லாம் இலட்சியம் கொண்டிருந்திருப்பார்கள். அவர்களை நம்பி வீட்டிலே இன்னும் எவ்வளவோ கற்பனைகளோடு இருந்திருப்பார்கள். இனி எமது யுகத்தில் இப்படியெல்லாம் இடம்பெறக்கூடாது. இதற்கு முற்றுப்புள்ளி நானாக இருப்பதை நினைத்து சந்தோஷப்படுறன்'

'லீடருடைய விருப்பப்படி உன்னை இப்ப சுடுறம். இதன்பின் அவர் யாரோ நாங்கள் யாரோ. எம்மை மன்னித்துவிடு' சிறிதுநேர மௌனத்தின் பின் 'டொப்' எனும் சத்தம். சைலன்சர் பூட்டிய கைத்துப்பாக்கியின் ஓசை.

சிறிது நேரத்தில் அவன் மண்ணோடு சாய்ந்தான். அவன் சிரிப்பு மாறாதிருந்தது. ஆனாலும் அவன், அத்தை மகளின் வாழ்க்கையை எண்ணிப் பார்க்கவில்லை என்பது அவனது கண்களில் தெரிந்தது.

இவனை நாங்கள்தான் எப்போதோ சந்தித்திருக்க வேண்டும். எவ்வளவு பேரைச் சுட்டிருக்கின்றோம்? இறுதியில் எமக்குக் கிடைத்தது என்ன? கடவுள் மாதிரி வந்தானே... நாங்கள் செய்த பாவங்களுக்கு பிராயச்சித்தம் காண ஒரே வழிதான் இருக்கிறது. இன்றிரவே எங்கள் லீடரைப் போட்டிட வேண்டியதுதான்.

'வாங்கடா போவம்....'

நண்பனாகவிருந்தும் அக்கூட்டத்துடன் இருந்ததால் அவனைக் காப்பாற்ற முடியாமல் போனதை நினைத்துக் கொண்டிருக்கும்போது கண்ணீர்த்துளி ஒன்று டயறியில் விழுந்து தெறித்தது. மீண்டும் கடிகாரத்தின் 'டிக் டிக்' ஓசை..

## தமிழ்ப் பெண்ணே நீயுமா?



தமிழ்ப் பெண்ணே நீயுமா
இன்று தறிகெட்டுப்போய்
பெற்ற குழந்தையையே
கொழுத்தும் நிலைக்கும்
குப்பை தொட்டியதில்
வீசியெறியவும் துணிந்தாய்?

ஒருபுறம்
தலைமைத்துவங்களால்
பெருமைகொண்டாலும்
உன் செயல்கள்–அதற்காய்
ஆண்கள் மட்டும்
சுத்தவாளி என்றில்லை
பண்பாட்டின்
காவல் தெய்வங்கள்
நீங்களே இப்படியெல்லாம்
சிதையெரியும்
எம் நிலைக்கு நீயும் எதற்காய்
தீ மூட்டுகிறாய்
வேண்டாம் பெண்ணே
வேண்டாம் புதுமை படைத்திடு
தப்பில்லை
ஆனால், கடமை அதையும்
உணர்ந்திடு...

**- புலோலியூர் வேந்தன்**



திலகசிறி காலகே    பியால் நாணயக்கார    சிசிர திசாநாயக்க



# தயாராகிவிட்டது தென்பகுதிக்கான அதிவேக நெடுஞ்சாலை

இலங்கையின் தென்பகுதிக்கான அதிவேக நெடுஞ்சாலை தயாராகிவிட்டது. மக்கள் இதில் பயணிப்பதற்கு ஆவலோடு காத்திருக்கின்றனர். இலங்கையின் பொருளாதாரத்தை சக்திபெறச் செய்வதும் ஏற்கனவே இருக்கின்ற வாகன நெரிசலைக் குறைப்பதுவுமே இவ் அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்பட்டதன் நோக்கமாகும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை பார்வையிடுவதற்கு அண்மையில் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவை நுழைவாயில் தொடக்கம் பின்னதுவ வரை 100 கிலோமீற்றர் தூரத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. ஒரே தடவையில் நான்கு வாகனங்கள் பயணிக்கக்கூடிய ஒழுங்கைகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த அதிவேக நெடுஞ் சாலையுடன் மேலும் இரு ஒழுங்கைகள் இணைக்கப்படவுள்ளன. பதினொரு நுழைவாயில்களினூடாக இந்த நெடுஞ்சாலைக்குள் பிரவேசிக்க முடியும். கொழும்பிலிருந்து மாத்தறை வரையிலான தூரத்தை விட 34 கிலோமீற்றர் குறைவான இந்த அதிவேக நெடுஞ்சாலைக்கு 84 மில்லியன் ரூபா நிதி மதிப்பிடப்பட்டது.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக உருவாக்கப்பட்ட அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் இலங்கைவாழ் மக்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாகும். காலி வீதியின் தற்போதைய வாகன நெரிசலை 40 வீதத்தால் குறைப்பதற்கு இந்த வீதி பயன்படவுள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வதேச தரத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்நெடுஞ் சாலையை பார்வையிடுவதற்காக அண்மையில் சென்றபோது வீதி நிர்மாணப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பின்னதுவ தெற்கு அதிவேக நெடுஞ்சாலை உதவி அத்தியட்சகர் திலகசிறி காலகே வேலைகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்தார்.

அவரிடம் எம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு நெடுஞ்சாலை பற்றிய விபரங்களைக் கேட்டோம். 'காலி பின்னதுவையிலிருந்து கொட்டாவை வரை சுமார் 90 கிலோமீற்றர் தூரம் உள்ளது. இந்தத் தூரத்தை மணித்தியாலத்திற்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் பிரயாணம் செய்தால் ஒரு மணித்தியாலத்திற்கு முன் பயணிக்க முடியும். குறைந்த நேரத்தில் பயணத்தை மேற் கொள்ள முடியும். இந்த வீதியை பயன்படுத்துவதால் வாகனங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள் குறையும். எரிபொருள் குறைவாகச் செலவாகும். வாகனங்களின் ரயர் தேய்வது குறைவாகும். குறைந்த நேரத்தில் குறைந்த செலவில் பயணத்தை மேற்கொள்ள முடியும்' என விளக்கினார்.



◄ த.சிந்துஜா ►

இயற்கையின் பாதுகாப்பிற்கும் அழகிற்கும் இந்நிர்மாணப் பணிகள், ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களை முடி ந்தளவு குறைப்பதற்கான வழிகாட்டல்கள் இத்திட்டத்திற்குவழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சிறிய கால்வாய்கள் மற்றும் நடுத்தர அளவிலான பாலங்களும் சூழல் பாதிப்பினைக் கட்டுப்படுத்த மேற்கொண்ட முயற்சியாகும். அதிவேக நெடுஞ்சாலையினால் ஏற்படுத்தக் கூடிய வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துவதும் விவசாய நிலங்களைப் பாதுகாப்பதுவுமே இதன் நோக்கங்களாகும்.

இந்நெடுஞ்சாலையில் பயணிக்கும்போது கொழும்பிலிருந்து மாத்தறைக்கான தூரம் 34 கிலோமீற்றரால் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் நான்கு மணிநேரக் கொழும்பு மாத்தறைக்கான தூரமும் 1 மணி 20 நிமிடம் வரை குறைவடையும் எனக் கூறப்படுகின்றது. மணிக்கு 30 கிலோமீற்றர் வேகத்தில் பயணித்த வாகனங்கள் இன்று இந்நெடுஞ்சாலையில் மணிக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் காலி வீதியில் வருடாந்தம் இடம்பெறும் சுமார் 300 வாகன விபத்துக்களை பூச்சியமாக மாற்றுவதே இதன் மற்றுமோர் நோக்கமாகும்.

இந்த வீதிக்கு அண்மையில் வசித்து வந்த காலி பிரதேசவாசி சி.சி.சி திஸாநாயக்க 'உண்மையிலே எங்களுக்கு எரிபொருள் செலவு குறையும். நேரம் மீதப்படும். இலகுவாக பயணிக்க தெற்கு அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்தலாம். நாங்கள் காலி மக்கள் என்ற வகையில் இதையிட்டுப் பெருமைப்படுகின்றோம்' என்றார். அவர் மட்டுமல்ல தம் பயணம் விரைவாக முடியப் போவதை நினைத்து அனைத்துப் பிரயாணிகளும் சந்தோசத்தில் இருக்கின்றனர்.

சமாந்தரமாக அழகாக நிர்மாணிக்கப்பட்ட வீதிகளினூடாக வாகனங்கள் எந்தத் தடையும் இன்றிப் பயணிக்கும்போது ஆங்காங்கே புதிய விதத்திலான வீதி சமிக்ஞைகளையும் காணக்கூடியதாக இருந்தது. இவ்வீதியினூடாகப் பயணிக்கையில் இரு மருங்கிலும் மலைக்குன்றுகள் வானளவு உயர்ந்து காற்றோட்டம் மிக்க இயற்கை வளங்களோடு காணப்பட்டது. இவ்நெடுஞ்சாலையில் பயணிக்கும்போது ஒரு புதுத் தெம்பு ஏற்படுவதைக் காணலாம். அவ்வளவு நேர்த்தியாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வீதிகளின் இருமருங்கிலும் பல்வேறு மின்விளக்குகள் பொருத்தப்பட்டு நவீனத்துடன் காட்சியளிக்கின்றது.

'ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது அதிவேக நெடுஞ்சாலைகளை மக்களுக்கு கொடுப்பதனாலும் காலமும் முதலும் மீதப்படும். குனுவத்தை பிரதேசவாசி என்ற வகையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறு வீதிகளை மக்களுக்கு கொடுப்பதனாலும் நான் சந்தோஷப்படுகின்றேன்' என்றார் இவ் நெடுஞ்சாலையால் பயணித்துக் கொண்டிருந்த குனுவத்தை பிரதேசவாசி பியால் நாணயக்கார அக்மீமன்.

இவ்வீதியினூடாகப் பயணிக்க ஆவலுடனும் எதிர்பார்ப்புடனும் மக்கள் காத்திருக்கின்றனர். எனினும் அதிவேக நெடுஞ்சாலையுடன் பயணிக்க வாகன சாரதிகள் தயாரா என்பது எம்முன்னால் உள்ள பாரிய சவால் ஆகும். சாதாரண போக்குவரத்துச்சட்டங்களிலிருந்துஅதிவேக நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து விதிகள் வித்தியா சமானவை என்பதால் இவ்விசேட பிரிவு அவசியமானது என பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கின்றது. வீதி விபத்துக்களைப் பூச்சியமாக மாற்ற வீதிகளை நிர்மாணிப்பது போன்றே அதில்பிரயாணம்செய்யும்சாரதிகளையும் தயார்படுத்த வேண்டும். வீதிசமிஞ்ஞைகளின் பாவனை, சந்திகளை கடந்து செல்லும் போது கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள் போன்றன குறித்து அறிவூட்டும் இத்தகைய வழிகாட்டல்கள் இதுவரை நடைமுறைக்கு வரவில்லை. அவ்விடயங்களும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

எது எப்படியோ நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியமான பங்களிப்பை வழங்குபவை இந்த நெடுஞ்சாலைகள்தான். எனவே தென்பகுதியில் சர்வதேச ரீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இத்தகைய நெடுஞ்சாலை போலவே வடபகு தியிலும் பல நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது. எனவே வடபகுதி மக்களுடைய இலகுவான போக்குவரத்துக்காக வழி செய்து தரப்பட வேண்டியது இன்றைய சூழ்நிலையில் அவசியமாகின்றது. போரால் பாதிக்கப்பட்டிருக்கும் ஏ9 நெடுஞ்சாலை திருத்தியமைக்கப்பட வே ண்டியது இதில் முக்கியமானதொன்றாகும். எனவே நெடுஞ்சாலைகள் அமைச்சு இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து பாரபட்சமின்றி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

**கொழும்பு மாத்தறைக்கான அதிவேக நெடுஞ்சாலையால் எதிர்பார்க்கப்படும் நன்மைகள்**

| தூரம் | பழைய பாதை | புதிய பாதை |
|---|---|---|
| | கி.மீ 160 | கி.மீ 126 |
| மாத்தறை - நேரம் | 4 மணி | 1 மணி20 நிமிடம் |
| காலி - நேரம் | 3 மணி | 1 மணி |
| வேகம் மணிக்கு[கி.மீ] | 30 கி.மீ | 120 கி.மீ |
| விபத்து | வருடம்300 | இல்லை |














# அவசரகாலச் சட்டம் நீக்கம்

# மக்களின் உணர்வலைகள்

(முன்பக்கத் தொடர்ச்சி...)

## உணர்வலைகள்...

'தம்பியவ உங்கண்ட வயசுக்கு நீங்கள் உப்பிடிக் கேட்டுக்கொண்டு திரியுறது அவ்வளவு நல்லதில்ல எண்டுதான் நான் நினைக்கிறன். நாங்களே இந்த வயசிலயும் ஏன் பேசாம இருக்கிறம். உதுகள் வில்லண்டம் தம்பியவை. உவங்கள் சொல்லுறபடியோ செய்யுறவங்கள். நாங்கள் பெரிசா படிக்காட்டிக்கும் எங்களுக்கும் கொஞ்சம் சட்டம் தெரியும். உவங்கள் சொல்லுறபடி செய்யிறேல்ல தம்பியவ. சட்டம் நீக்கிட்டாங்கள் எண்டோண்ண நீங்கள் பேட்டி எடுக்க வந்திட்டியள். கொஞ்சநேரத்தில ஆரடா பேட்டி குடுத்தது எண்டு வந்து நிக்கப்போறாங்கள். சட்ட நீக்கம் எல்லாம் ஒரு சம்பிரதாயத்துக்குத்தான்'

**த. செல்வரத்தினம், வயது 42, கொக்குவில், யாழ்ப்பாணம்.**

'அவசரகாலச் சட்ட நீக்கம் அரசு நீக்க வேண்டிய காலம் கடந்துவிட்டதாக நான் கருதுறன். மீண்டும் இதைப்பற்றி பேசுவது காலவிரயம் செய்வதாகும் அல்லது அரசியல் செய்வதாகும், இப்போது நாடு இருக்கின்ற போக்கிற்கு இச்சட்டம் தேவை அற்றது என்பது என் வாதம்.

**சி.ஜெயக்குமார் (வயது 32), அச்சுவேலி.**

'அவசரகாலச்சட்டம் நீக்கியது வரவேற்கத்தக்கது. ஆனால் அந்தச் சட்டத்தினைப் பயன்படுத்தி மேற்கொண்டுவந்தசெயற்பாடுகளைகைவிடஇராணுவம் தயாராக இருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. ஒரு பின்பற்றுதலை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தவங்கள். திடீரென அதன் செயற்பாடுகளிலிருந்து விலகமாட்டார்கள். அரசு சட்டத்தை நீக்கும். பாதுகாப்புத்துறை தன் வேலையைச் செய்துகொண்டுதான் இருக்கப்போகிறது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கட்டுப்படுத்தும் அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பதை அவதானிக்கவேண்டும்.

**சிறி. சிறிகாந்தன் (வயது 30), யாழ்ப்பாணம்.**

'உதெல்லாம் ஏமாத்துவேலை. உண்மையா நீக்கிறதெண்டா யுத்தம் முடிஞ்ச உடன நீக்கியிருக்க வேணும். இப்ப பாஞ்சடிச்சு நிப்பாட்டுறதப்பாத்தா உள்ளுக்க ஏதும் விசயம் இல்லாமல் இருக்காது. அவசரகாலச் சட்டம் இல்லையெண்டா பயங்கரவாதச்சட்டம். இல்லாட்டி புதுசா ஒண்டு வரும். அதுக்குத்தானே கிறிஸ் காறர ஏவிவிட்டிருக்கிறாங்கள்'

**திருமதி சுப்பிரமணியம் (வயது 40), கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

'உந்தத் தடைச்சட்டத்த நீக்கினதால எந்தப்பிரியோசனமும் இல்ல. முந்தி புலிகள தடைசெய்திட்டம் எண்டேக்க அவங்கள் சொன்னாங்கள், எங்கள தடைசெய்யிறதால எந்தப் பாதிப்பும் இல்லயெண்டு. உப்பிடி சட்டம் போடுறதும் நீக்கிறதும் அவங்களின்ர வேல. இடக்கிட உப்பிடித்தான் ஏதாவது செய்வாங்கள். தடைச்சட்டத்தை நீக்கினாப்போல ஏதும் மாற்றம் நடந்திச்சோ தம்பியவை. உவங்கள் துவக்குகள நீட்டிக்கொண்டு நடுறோட்டில தான் நிக்கிறாங்கள். இண்டைக்கு மத்தியானம் பக்கத்து வீட்டில மர்ம மனிதன் வந்து தாக்கிட்டு போனவன். ஆர் வந்தவை எண்டு ஆருக்குத் தெரியும். உதுகளச் சாட்டி எண்டாலும் புதுசாச் சட்டங்கள் வரும். பொறுத்திருந்து பாருங்கோவன்'

**பெயர் குறிப்பிட விரும்பாதவர் (வயது 40), கோண்டாவில்-கிழக்கு.**

'சர்வதேசத்தின்ட அழுத்தங்களும் எதிர்க்கட்சிகளின்ட விமர்சனங்களின் தாக்கமே இந்த நடவடிக்கை. ஆனா தமிழர் மேல உண்மையான அக்கறையோ அனுதாபமோ இல்லை'

**நடராசா (வயது 56), திருகோணமலை**

'மர்ம மனிதனின் மக்கள் மயப்படுத்தப்பட்ட புரட்சி வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில்தானே கூடுதலாக காணப்படுகின்றது. எதிர்காலத்தில் மக்கள் என்ன செய்வார்கள் என்பது அரசுக்கு வடிவா விளங்கின விடயமாக இருந்தும் இவ்வாறான விடயத்தை அரசு, தான் செய்யவில்லை என்பதை வெளியுலகத்திற்கு காட்டுவதற்கே இப்படியொரு நாடகம்'

**சுதா (வயது 32), திருகோணமலை**

'அவசரகாலச் சட்டம் இல்லாதது தமிழ் மக்களுக்கு நன்மையாகத் தெரிந்தாலும் இதை விலத்தினத்திற்கு காரணம் மக்களை திசை திருப்புறத்துக்குத்தான் என நாங்க அறியிறம். இண்டைக்கு இருக்கிற விலைவாசி உயர்வையும் பெண்கள் மீதான வன்முறையையும் பார்த்து மக்கள் பொங்கிற நேரம் இப்படி ஒரு விசயத்தைக் கொண்டு வந்திருக்காங்க'

**நிர்மலா (வயது 42), திருகோணமலை**

'அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீக்கியது பெயரளவில மட்டும் இருக்கக்கூடாது. மக்கள் தங்கட செயற்பாடுகளை சுயமாகவும் சுதந்திரமாகவும் செயற்படுத்தக் கூடியதாக இருக்கவேணும். இந்தச் சட்டத்தை நீக்கியதை வரவேற்கிறம். ஆனா ஏதும் அசம்பாவிதம் நடந்தால் மீண்டும் இந்தச் சட்டம் வராதெண்டுறத்துக்கு என்ன நிச்சயம்? ஆனா மக்கள் கொஞ்சம் பயப்படாமல் இருக்கலாம் எண்டு மட்டும் தெரியுது'

**எஸ்.சேதுபதி (வயது 56), கிளிநொச்சி**

'வரவேற்கத்தக்க விடயம்தான். இச்சட்டம் நீக்கியது தமிழ் பேசும் மக்களுக்குச் சாதகமானதுதான். ஆனால் இச்சட்டத்தின் மூலம் கைதுசெய்து தடுப்பிலிருப்பவர்களை அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதுதான் மக்களின் கேள்வியாக இருக்கிறது. இதை அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும். அதோட இச்சட்டத்தின் மூலம் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிற தமிழ், முஸ்லிம் உறவுகளை விடுதலை செய்ய வேணும். இதுவே எல்லா மக்களின்ட எதிர்பார்ப்பாகும்'

**என்.தில்லை (வயது 45), கிளிநொச்சி.**

'இனிமேல் கண்டபடி எங்கட பிள்ளையளப் பிடிக்க மாட்டாங்கள். சனங்கள் சுதந்திரமாகத் திரியலாம். தங்கட வேலையளை விரும்பின இடங்களுக்குப் போய் முடிக்கலாம் எண்டு நினைக்குறன். இந்தச் சட்டம் நிப்பாட்டினதால எங்களுக்குக் கொஞ்சச் சுதந்திரம் கிடைக்கும்'

**பெயர் குறிப்பிட விரும்பாதவர் (வயது 48), கோணாவில்.**

'நல்ல விடயம்தான். என்ர சகோதரனும் அவசரகாலச் சட்டத்தில பிடிபட்டு ரெண்டு வருசமா வெலிக்கடைச் சிறையில இருக்கிறார். இதுவரையில் அவரை எந்த விசாரணைக்கும் உட்படுத்தேல்ல. ஆனா இப்ப இந்தச் சட்டம் இல்லாததால அவரை நீதிமன்றத்துக்கு கொண்டு போவாங்களோ தெரியவில்லை. இதுபற்றி முழு விளக்கமும் எங்களுக்குத் தெரியாது. எங்கட அரசியல்வாதிகள் யாரும் இதைத் தெளிவுபடுத்தவேணும்'

**எஸ்.நிரோசன் (வயது 28), கிளிநொச்சி.**

# அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதச் சட்டமும்



## தொடர்ந்து அமுலில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தோன்றியது எப்படி?

✱ 1976ஆம் ஆண்டுக்குப் பின்பு ஜே.ஆர் ஜெயவர்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்த போது வட-கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் சிறிது சிறிதாக அதிகரிக்கத் தொடங்கின.

✱ 1976ஆம் ஆண்டு அப்போதைய யாழ். மேயர் அல்பிரட் துரையப்பாவைக் கொலை செய்தும் வேறு பல வன்முறை நடவடிக்கைகளிலும் புலிகள் இயக்கம் ஈடுபட்டிருந்தனர்.

✱ எனவேதான் 1978ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பையும் அது போன்ற ஏனைய அமைப்புக்களையும் தடை செய்யும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

✱ இதைத்தவிர, நாட்டில் 1947ஆம் ஆண்டின் பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் அவசரகாலச் சட்டமும் இருந்தது.

✱ ஆனால் இவையெல்லாம் போதாதென்று கருதிய அரசாங்கம் 1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தினைக் கொண்டுவர பரிந்துரைத்தது. தற்காலிகமானது என்று சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் இன்று 2011ம் ஆண்டில் இது 30 வருடங்களையும் தாண்டி விட்டது.

இச்சட்டம் பின்பு 1982ஆம் ஆண்டும் பின்பு 1988ம் ஆண்டும் திருத்தப்பட்டது. இதில் கொடுக்கப்பட்டுள்ள ஷரத்துக்கள் போதாதென்று 2006ஆம் ஆண்டு மகிந்த அரசாங்கம் இன்னுமொரு பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் கொண்டுவந்தது.

✱ இது முதலாவதாக, பயங்கரவாத நடவடிக்கை என்றால் என்ன என்பதை வரையறுத்தது. அது, பிரிவினைக்கு ஆதரவாகப் பேசுதல், எழுதுதல், நடவடிக்கைகளைச் செய்தல், அப்படிச் செய்பவர்களுக்கு ஏதேனும் முறைகளில் உதவுதல் என்பனவாகும். 5 பேருக்கு அதிகமாகக் கூட்டம் கூடினாலும் அது குற்றமாகக் கணிக்கப்படுகிறது.

✱ இதன்கீழ், கைதாகின்றவருக்கு ஆதரவாக நீதிமன்றில் ஆஜராகும் சட்டத்தரணிகள்கூட குற்றவாளிகளாகக் காணப்படலாம்.

✱ புலிகளின் ஆதரவாளர்களின் ஆதரவாளர்களும் கைது செய்யப்படுவது மட்டுமல்ல, அவர்களின் சொத்துக்கள்கூட அரசாங்க உடைமையாக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

✱ இலங்கையின் 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பானது, பேச்சு சுதந்திரம், கூட்டம் கூடி இயங்கும் சுதந்திரம், சட்டத்தின் முன்பு சமத்துவமான பாதுகாப்பு, எழுந்தமானமான கைதுகளுக்கும் தடுத்து வைக்கப்படுவதற்கும் எதிரான பாதுகாப்பு, சித்திரவதையினின்றும் விடுதலை, நீதியாக நடத்தப்படும் வழக்குகளுக்கான உரிமை போன்ற அடிப்படை உரிமைகளை மக்களாகிய எங்களுக்கு வழங்கியுள்ளது.

## பயங்கரவாதத் தடைச்சட்டம்

✱ அமைச்சரின் ஆணையின் பேரில், அவர் அதிகாரம் வழங்குகின்ற அலுவலர்களினால் அவர் சந்தேகிக்கின்ற எவரும் கைதாக்கப்படலாம்.

✱ கைது செய்யப்படும்போது கைது செய்யப்படுபவருக்கு காரணம் ஏதும் சொல்லத்தேவையில்லை. அவருடையவீட்டுக்குள் அனுமதியில்லாமல் புகுந்து தேடலாம். எந்தப் பொருளையும் எடுக்கலாம்.

✱ அமைச்சர் தீர்மானித்த முறையிலும் அவர் தீர்மானிக்கின்ற இடத்திலும் கைதானவர் தடுத்து வைக்கப்படலாம். முதல் 72 மணித்தியாலங்களுக்குஅவர்வெளியுலகத் தொடர்புகளின்றி, முக்கியமாக, ஒரு சட்டத்தரணியின் உதவியின்றி தடுத்து வைக்கப்படலாம்.

✱ இவ்வாறு தடுத்து வைக்கப்படும் போது அவர் கொடுக்கின்ற வாக்குமூலங்கள் நீதிமன்றில் செல்லுபடியாகும்

✱ கைது செய்யப்பட்டவரை பொலிஸ் விசாரணைக்காக எப்பொழுதும் எங்கும் கொண்டு செல்லலாம். எனவே, ஒரு நீதிமன்றின் பாதுகாப்பின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எந்தக் கைதியும் பொலிஸாரினால் வேறெந்த இடத்துக்கும் கொண்டு செல்லப்படலாம்.

✱ சந்தேக நபர் 18 மாதங்களுக்கு எதுவித குற்றச்சாட்டுமின்றித் தடுத்து வைக்கப்படலாம். அப்படி அவர் விடுவிக்கப்பட்டாலும்கூட, இந்தக் காலத்துக்கு அவருடைய நடவடிக்கைகள் குறித்து பொலிஸார் மட்டுப்படுத்தலாம்.

✱ அவர் எங்கே குடியிருக்கலாம், எங்கே வேலை செய்யலாம், எங்கே பயணம் செய்யலாம் போன்றவையும் எந்தவொரு அமைப்புக்களை செயற்படுத்துவதற்கும் தடையுமே இந்த மட்டுப்படுத்தலாகும்.

✱ பயங்கரவாத அமைப்புக்களை ஆதரிப்பது, அதற்கு ஆதரவாக பிரசுரங்களை வெளிக்கொணர்வது, வன்முறைகளில் ஈடுபடுவது இவையெல்லாவற்றுக்கும் 5வருடம் தொடங்கி 20 வருடம் வரையிலான கடுங்காவல் சிறைத்தண்டனை உண்டு.

✱ 2008ஆம் ஆண்டில் கைதான ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் அவர்களுக்கு, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இரண்டு கட்டுரைகள் எழுதினார் என்ற பேரில் 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை எங்களது நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்டது.

அதன் பாதுகாப்பின் கீழ் இருக்கும் ஒரு நபரை எங்கும் (உத்தியோகபூர்வ பாதுகாப்பு இல்லாத எந்த இடமும்) அழைத்துச் செல்லலாம்.

✱ அவரை என்னவும் செய்யலாம் (ஏனெனில் எப்படிச் செய்தாலும் அவருடைய வாக்குமூலம் நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமல்லவா?)

✱ வழமையாக எமது சட்டங்கள், செய்யப்படும் நடவடிக்கைகளுக்கான தண்டனைதான் தரும். செய்யாத நடவடிக்கைக்காக தண்டனை தருவது கிடையாது. எமது பயங்கரவாதத் தடைச்சட்டத்திலேயோ, ஒருவர் படையினருக்கு தமக்குத் தெரிந்த தகவலை தெரிவிக்காத குற்றத்துக்காகத் தண்டிக்கப்படலாம்.

✱ இதன்மூலம் எங்கள் நாட்டு மக்களை ஒட்டுமொத்தமாக ஒரு வேவு பார்க்கும் சமூகமாக இந்தச் சட்டம் மாற்றியது.




✱ எவரேனும் பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து தமக்குத் தெரிந்த தகவல்களை பொலிஸாரிடம் தெரிவிக்காமல் விட்டால் அதற்கு ஏழு வருடங்கள் வரை கடுங்காவல் சிறைத் தண்டனை உண்டு.

✱ ஒரு அரசியல்வாதி எங்களை கைது செய்வது பற்றித் தீர்மானிக்கலாம் (உண்மையில் நீதித்துறையே அதற்கான அதிகாரம் கொண்டது)

✱ பாதிக்கப்பட்டவருக்கு சட்ட உதவி இல்லாமல் பண்ணலாம்.

✱ நீதிமன்றின் அனுமதியில்லாமலேயே

✱ இந்தக் காரணத்தினால் கொழும்பு மற்றும் சுற்றுப்புறச் சூழலில் வாழ்ந்த எத்தனை தமிழர்கள் பொலிஸாரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டார்கள். இப்படி ஒரு பேனா வீச்சிலேயே இந்நாட்டிலுள்ள தமிழ் சிங்கள மக்களிடையே இருந்த ஒற்றுமையை இது குலைத்தது.

✱ இதைவிட முக்கியமாக, எமது நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள், ஒருவித சாட்சியங்களுமின்றி கைது செய்யப்பட்டவர் தடுப்புக் காவலில் இருந்த போது கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே மட்டும் தீர்ப்பாகின.

✱ தடுப்புக்காவலில் நடத்தப்படும் சித்திரவதைகளின் அளவும் தன்மையும் முன்னெப்போதும் கண்டிராதவகையில் பெருகின. அந்த சித்திரவதைகளை இங்கு விவரிக்கவே அங்கம் கூசும்.

## அவசரகாலச் சட்டம்

✱ எங்கள் நாட்டில் 30 வருடங்களுக்கு மேலாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தோடு அவசரகாலச் சட்டமும் அமுலில் இருந்து வந்திருக்கின்றது. கடந்த 25ஆம் திகதி இச் சட்டம் நீக்கப்பட்டாலும் இதைப்பற்றியும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

✱ அவசரகாலச்சட்டமானது, 1947ஆம் ஆண்டின் பொதுசன பாதுகாப்புச் சட்டம், மற்றும் அரசியல் யாப்பின் 76, 155 ஆகிய பிரிவுகள், ஆகியவற்றின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வந்தது.

(21ஆம் பக்கம் பார்க்க..)



மலரவன்

# மல்டிமீடியா உதவியுடன் அனிமேசன்




நமக்குத் தோன்றும் விதவிதமான எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்து நம் ஐடியாவை மல்டிமீடியா உதவியுடன் ஒன்லைன் மூலம் அனிமேசன் படமாக உருவாக்கலாம். நமக்கு உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது. இதற்கு எந்தவொரு மென்பொருளின் உதவியோ அனிமேசன் பயிற்சியோ தேவையில்லை.

இணையத்தள முகவரி : http://www.creazaeducation.com

இத்தளத்திற்குச் சென்று Register என்பதை சொடுக்கி புதிதாக ஒரு பயனாளர் கணக்கு உருவாக்கி உள்நுழையலாம். ஐடியாக்களை Map ஆக உருவாக்குவதில் தொடங்கி கார்ட்டூன் உருவாக்குவது, Audio எடிட் செய்வது மற்றும் வீடியோ எடிட் செய்வது என அத்தனையையும் நாம் ஒன்லைன் மூலம் செய்யலாம். இதனை எப்படி பயன்படுத்துவது என்பதை வீடியோவுடன் காட்டி அசத்துகின்றனர். வீடியோ அல்லது Audio எடிட் செய்வதில் எவ்வளவு புதுமையான டூல்கள் உள்ளன என்பதையும், அழகான கார்ட்டூன்களை ஒரு திறமையான கார்ட்டூன் வடிவமைப்பாளர் உருவாக்குவது போல் எப்படி உருவாக்கலாம் என்பதையும் அழகுடன் காட்டுகின்றனர். புதுமை விரும்பிகளுக்கும், பொழுது போக்கிற்காக நேரத்தை வீணடிக்காமல் இது போன்ற பயனுள்ள சேவைகளை ஒன்லைன் மூலம் எங்கிருந்தும் கற்க விரும்புபவர்களுக்கும் இத்தளம் பயனுள்ளதாக இருக்கும்.





# மின்னல் வேகத்தில் தட்டச்சு செய்யலாம்

கணனி பயன்படுத்தும் அனைவருக்குமே இருக்கும் ஒரு ஆசை என்னவென்றால் அதிகவேகமாக தட்டச்சு செய்ய வேண்டும் என்பதுதான். இதற்காக நாம் தட்டச்சு வகுப்பிற்கு செல்ல நேரம் இல்லை என்று சொல்ல வேண்டாம், அனைவருக்கும் தட்டச்சு வேகத்தை அதிகப்படுத்த நமக்கு ஒரு இலவச மென்பொருள் உதவுகிறது.


தரவிறக்க முகவரி : õhttp://download.cnet.com/Rapid-Typing-Tutor/3000-2051_4-10666000.html

இத்தளத்திற்குச் சென்று மென்பொருளை இலவசமாக தரவிறக்கிக் கொள்ளலாம். பின் மென்பொருளை இயக்கி தட்டச்சு செய்யத் தொடங்க வேண்டியதுதான். ஆரம்பத்தில் வேகம் அதிகம் இல்லாமல் இருந்தாலும் தினமும் நமக்கு நேரம் கிடைக்கும் போது பயன்படுத்தினால் போதும். விசைப்பலகையில் இருக்கும் எல்லாவகையான பொத்தான்களையும் அழுத்தும் வண்ணம் பயிற்சி அமையப் பெற்றிருக்கிறது.



# உலகப் பிரபலங்களின் தகவல்களைத் தேடித்தரும் தளம்

முன்பெல்லாம் முக்கியமான நபர்களின் தகவல்களைத் தெரிந்து கொள்ள நாம் நாடுவது வாசிகசாலைகளைத்தான். இப்போதுதான் வந்துவிட்டதே இணையம்.




அதிலும் தகவல் களஞ்சியமான விக்கிப்பீடியாவைத்தான் நாடுவோம். அதில் கிடைக்கும் தகவல்கள் சிலநேரம் எம் தேடலுக்குப் போதாமல் இருக்கலாம். இதற்கு உதவ ஒரு தளம் உள்ளது.

இணையத்தள முகவரி : http://www.yatedo.com


உலக அளவில் முக்கிய நபர்களை எளிதாகத் தேடி கொடுப்பதற்காக இத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலே கொடுக்கப்பட்டுள்ள தளத்திற்குச் சென்று படம் 1-ல் காட்டியபடி யாரை பற்றிய விபரங்கள் வேண்டுமோ அவரின் பெயரைக் கொடுத்து Enter பொத்தானை சொடுக்கி தேட வேண்டியது தான். வரும் தேடல் முடிவில் யாரைப்பற்றிய தகவல் வேண்டுமோ See profile என்பதை சொடுக்கி அவரின் முழுவிபரங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

# 2012 இல் என்ன நடக்கலாம்

2012 இல் என்ன நடக்கலாம் என்று பல்வேறு தரப்புகளில் பலவிதமான தகவல்கள் பரவி வருகின்றன. குறிப்பாக 2012 டிசம்பரில் உலகம் அழியும் என்று மாயன் கலண்டர் கணிப்பின்படி கூறப்படுகின்றது. அறிவியல் ரீதியாகவும் பூமிக்கு ஆபத்து இருக்கிறது என்று பலபேர் கூறிக் கொண்டிருக்கும் நிலையில் உண்மையான தகவல்களை அறிவியல் ரீதியாக சொல்ல ஒரு தளம் உள்ளது.

இணையத்தள முகவரி : http://www.2012predictions.net

2012ஐ மக்கள், விஞ்ஞானிகள் எப்படி எல்லாம் கணித்திருக்கின்றனர் என்பதை ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிய வரும் அல்லது தெரிந்த தகவல்களை இத்தளத்தில் பகிர்ந்து கொள்ளலாம். பூமியின் வயது என்ன என்பதில் தொடங்கி மாயன் கலண்டர் வரை அனைத்தையும் விரிவாகவும் அறிவியல் ரீதியாகவும் விளக்குகிறது. சித்திரம் மற்றும் சில விநோத கூறியீடுகள் சில சமயங்களில் அதிகார பூர்வமாக மாயன் கலண்டரில் இப்படித்தான் இருக்கிறது என்று யாரும் துல்லியமாக கூறியதில்லை. ஆனால் ஒரு நிகழ்ச்சி நடந்தவுடன் அதை மாயன் கலண்டருடன் ஒப்பீடு செய்து ஏற்கனவே இது மாயனில் சொல்லி இருக்கிறது என்பதை தெரிவிக்கின்றனர். சில நிகழ்ச்சிகள் மாயன் கலண்டரில் உள்ளதைப் பார்க்கும்போது உண்மையான நிகழ்ச்சி தான் என்பதை மறுக்க முடியாத அளவிற்கு ஆதாரமும் உள்ளது. இதைத்தவிர வானவியல் சம்பந்தமான பிரச்சினைகள், 2012இல் என்னவெல்லாம் இருக்கிறது என்பதை தெளிவாக அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கப்பட்டுள்ளது. கண்டிப்பாக 2012 இல் என்னவெல்லாம் நடக்கலாம் என்று கணிப்பவர்களுக்கு இந்தத்தளம் பதிலாக இருக்கும்.





# காட்டுயிர்களும் மூடநம்பிக்கைகளும்

தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே 5 வகை திணைகளை உருவாக்கி அதற்குரிய தாவரங்கள், தொழில்கள் என அந்த மண்ணுக்குரிய வேலைகளை செய்து வந்தனர். நாகரிகத்திலும், விவசாயத்திலும் உலகத்திற்கே முன்னோடியாக விளங்கினார்கள். சங்க இலக்கியங்களில், காட்டுயிர்கள் பற்றிய பல பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தாவரங்கள், காட்டுயிர்கள் பற்றிய புரிதலுடனும், ஒத்திகையுடனும் இருந்துள்ளார்கள் என்பது புலனாகிறது.

Elephant என்று யானையே இல்லாத நாட்டின் ஒரு மொழியில் இன்று படிக்கும் நாம்தான், அக்காலத்தில் மா, கரி, ஆச்சல், இபப், இம்மபு என 50 பெயர்களில் யானைகளை அழைத்திருக்கிறோம். நாராய் நாராய்.... செங்கால் நாராய்.. எனத் தொடங்கும் நாரை பற்றிய பாடலில், பறவையின் உடலமைப்பு, பழக்க வழக்கங்கள் எனக் கூர்மையாகப் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோல எண்ணற்ற உதாரண ங்களை சங்க இலக்கியத்தில் சுட்டிக் காட்ட முடியும். காட்டுயிர்கள் மேல் புரிதலுடன் இணக்கமான உறவைப் பேணி வந்த தமிழர்களுக்கு இன்று என்ன நேர்ந்தது? காக்கை, குருவி தவிர்த்து மற்ற பறவைகளைப் பற்றியோ விலங்குகள் பற்றியோ தெரியாமல் விழிப்புணர்வு அற்ற நிலையில் இருப்பது எதனால்?

சாக்குருவி, ஆந்தையின் அலறல், ஆந்தையை கண்டால் அபசகுனம், அதிசயப் பறவை என பற்பல சொல்லாடல்களால் எதிர்மறையாய் அழைக்கப் பெறும் ஆந்தைகள்தான், வேளாண்மைக்கு தீங்கு செய்யும் எலிகளை உட்கொண்டு விவசாயிகளுக்கு நண்பனாக திகழ்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் சாதாரணமாகக் காணும் ஆந்தைகள் கூகை என்ற வெண்ணாந்தை, புள்ளி ஆந்தை, கொம்பன் ஆந்தை என்ற மூன்று வகையாகும். அதிசயப் பறவை அவுஸ்திரேலிய பறவை என அடிக்கடி செய்தித்தாள்களில் இடம்பெறும் கூகை என்ற வெண்ணாந்தை உட்பட ஆந்தைகள் யாவும் இடம்பெயர்பவை அல்ல என்பதை பத்திரிகை மற்றும் காட்சிஊடகங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இரவாடிகளான ஆந்தைகள் யாவும் ஓர் இரவில் சராசரியாக 8 எலிகளை வேட்டையாடி விவசாயிகளுக்கு நன்மை புரிகிறது. ஓணான் சிறு பாம்புகள், பல்லிகள் போன்றவற்றையும் பிடித்துண்ணுகின்றன. தனக்கென ஓர் இடத்தை தேர்ந்தெடுத்து வாழும் இயல்பு கொண்ட ஆந்தைகள் மரப் பொந்துகள், பாழடைந்த கட்டடங்கள், பாறை இடுக்குகள் போன்ற பகுதிகளைத் தேர்ந்தெடுத்து நான்கு வரையிலான முட்டைகளை இட்டு இனப்பெருக்கம் செய்கின்றன.

நகரத்தின் துப்புரவாளனாக விளங்கும் காக்கைகள் ஒற்றுமைக்கு உதாரணமாக பற்பல சொல்லாடல்கள் மூலம் கூறப்படுகின்றன. இவையாவும் உண்மையா? அறிவியல் என்ன சொல்கிறது பார்ப்போம். பொதுவாக விலங்குகள், பறவைகள் கூட்டமாக கூடுவது தனியே இருக்கும்போது உள்ள ஆபத்தின் அளவை குறைக்கத்தான். அதாவது சுயதைரியம் பெறத்தான் கரைவதும், கத்துவதும் என்கிறார் உயிரியல் அறிஞர் டபிள்யூ. டி. ஹேமில்டன். அவரது இந்தக் கோட்பாடு சுயநலக் கூட்டம் அல்லது மந்தை என்று உலகின் அனைத்து உயிரிய லாளர்களிடமும் பழக்கத்தில் உள்ளது. காக்கைகள் தங்கள் நேரடி உறவினர்களிடம் மட்டுமே உணவை பகிர்ந்து கொண்டு, மற்றவற்றை விலக்கி விடும் என்று அவரது மற்றொரு கோட்பாடான kin selectibn என்ற விதிப்படி கூறுகிறார். இம்முறை எறும்பு, தேனீ, கறையான் போன்ற உயிரினங்களிடமும் பழக்கத்தில் உள்ளது.



◄ ஏ.சண்முகானந்தம் ►

காட்டுயிர்களில் பேருயிரான யானைகள் பற்றிய கீழ்க்கண்ட சொல்லாடல் நீண்ட காலமாக நிலவி வருகிறது. யானை இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன். யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே. யானையின் செவியில் புகுந்த எறும்பு. காடுகளின் வளமைக்கு குறியீடாக விளங்கும்யானைகள்அதன்உணவுத்தேவையான 300 கிலோ, பசுந் தாவரங்களுக்காக ஓரிடத்தில் தங்காமல் தனக்கென வழித்தடத்தை ஏற்படுத்தி காடுகள் முழுவதும் சுற்றியலைந்து பலதரப்பட்ட தாவரங்களின் விதைகளை வீரிய மிக்க விதைகளாக பரப்பி வருவதுடன் பல பறவை இனங்களுக்கும், விலங்குகளுக்கும் மறைமுக உதவி புரிகிறது.

அந்த வகையில் முதல் சொல்லாடலின், முதல் வாக்கியத்தின் அர்த்தமாக மேற்குறிப்பிட்டவற்றை கொள்ளலாம். யானைகள் இறந்தபின் அவற்றின் தந்தங்கள் கலைப் பொருட்கள் செய்யப்பயன்படுவதால் இரண்டாவது வரி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த நூறு ஆண்டுகளில் தந்தங்க ளுக்காகவே பெரும்பாலான யானைகள் கொல்லப்பட்டு இன்று சில ஆயிரங்களாக குறைக்கப்பட்டுள்ளன நமது நாட்டில்.

இரண்டாவது சொல்லாடல் வளர்ப்பு யானைகள் குறித்து சொல்லப்படும் வார்த்தை. காடுகளின் செழுமைக்கும் சுற்றுச் சூழலுக்கும் முக்கிய பங்களிக்கும் பேருயிர்களான யானை களை சிறு கூடாரங் களில் அடைத்து பட்டையும், நாமமும் போடுவதில் என்ன சுகம் கண்டதோ மனித சமூகம்! சாலைகளில் பிச்சை எடுப்பதற்கும், பக்தியின் சின்னமாக வணங்குவதற்காகவும் யானைகள் படும் வேதனைகள் சொல்லி மாளாது.

உண்மையாகவே காட்டின் இராஜாவாக சிங்கம் இருக்குமா? இல்லை என்பதுதான் அறிவியலாளர்களின் பதில். பெண் சிங்கங்கள் வேட்டையாடியதை பகிர்ந்து உண்ணும் இயல்பு கொண்ட ஆண் சிங்கங்கள் காட்டின் ஓர் அங்கமே. அதனதன் இயல்பிலேயே அனைத்து காட்டுயிர்களும் ஒழுங்குற வாழ்கின்றன. தனியே சுற்றியலைந்து வேட்டையாடி உண்ணும் புலிகளைக் காட்டின் இராஜாவாகக் கூறலாம். அதனுடைய மஞ்சள் நிற உடம்பில் கறுப்பு பட்டைகளும், கம்பீரமான உடலமைப்பும் ஆண்டொன்றுக்கு 50 முதல் 60 வரையிலான இரை விலங்குகளை உண்ணும் புலிகள் உணவு சங்கிலியின் உச்சத்தில் உள்ளன. புலிகளின் அழிவு காடுகளின் அழிவுக்கு காரணமாகும் எனலாம். ஒரு காட்டில் புலிகளின் எண்ணிக்கை குறைந்தால் இரை விலங்குகளான மான், காட்டு மாடுகள் எண்ணிக்கை அதிகரித்து மேய்ச்சல் பரப்பு குறைந்து காடுகளின் வளம் சீர்குலையும். புலிகளை சார்ந்து வாழும் கொரி விலங்குகளும், பறவைகளும் அழியும்.

பாம்புகள் என்றால், அச்சத்தின் குறியீடாகவும் பற்பல சொல்லாடல்களும் மூட நம்பிக்கைகளும் எமது சமூகத்தில் ஆழமாக பதிந்துள்ளன. இதன் காரணமாகவே ஆண்டுதோறும் பல்லாயி ரக்கணக்கான பாம்புகள் அடித்துக் கொல்லப்படுகின்றன. பாம்புக் கடிக்கு ஆளானோரில் 70 வீதமானோர் பயத்தின் காரணமாகவும், உரிய சிகிச்சை இன்றியுமே உயிரிழக்கிறார்கள் என்கிறது ஓர் ஆய்வு. விவசாயத்துக்கு உற்ற தோழனாக விளங்கும் பாம்புகள், எலிகள், ஓணான், பல்லி, மீன்கள் போன்றவற்றை உணவாகக் கொள்கின்றன. பாம்பு நடனம், பாம்பு பழிவாங்கும் பண்பு கொண்டது, பால், முட்டை குடிக்கும் போன்ற பற்பல மூட நம்பிக்கைகள் பாம்புகள் பற்றி உள்ளன. இவையாவும் அறவே ஒழிக்கப்பட வேண்டியவை. மனிதர்களுக்கு எவ்விதத்திலும் தீங்கிழைக்காத உயிரினம்பாம்புகள்.ஆனால் பாம்புகள் யாவும் அழியும் நிலையில் உள்ளன.


பன்றிகளை பற்றிய சொல்லாடல் புகழ் பெற்றது. பன்றி மாதிரி சேற்றில் புரளாதே? இந்த வாக்கியத்தில் உள்ள பன்றி என்ற காட்டுயிர் சேற்றில் மட்டுமே வாழும் என்ற மனநிலையை மக்கள் மனதில் நிறுத்தி வைத்துள்ளனர். பன்றி தான் இருக்கும் இடத்தை தூய்மையாகவும், மலம் கழிக்க ஓரிடத்தை மட்டுமே தொடர்ந்து பயன்படுத்தும் என்கிறது ஆய்வு. ஆறு, ஏரி, குளங்களை சேறுகளாகவும், குட்டைகளாகவும் வைத்திருப்பது மனிதர்களாகிய நாம்தான். நீர்நிலைகள் பறிபோவதில் அரசியல் பின்னணி இருக்க நமது தவறுகளுக்கு காட்டுயிர்கள்மேல் பழி சுமத்துவது நமது விழிப்புணர்வு அற்ற தன்மையே.

ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும் உருப்படாது என்ற சொல்லாடல் நீண்ட காலமாகவே பழக்கத்தில் உள்ளது. கடன்பட்ட மனிதரின் நிலங்கள் பறிமுதல் செய்வதில் தொடர்புபடுத்தி வரும் இந்த வாக்கியத்தில் நீர்நில வாழ்வியான ஆமை ஏன் வந்தது என்பதை சிந்திக்க வேண்டும். நீர் நிலைகளை சுத்தப்படுத்தும் பணிகளை பல வகை மீன்களோடு ஆமைகளும் செய்கின்றன. நன்னீர் ஆதாரத்திற்கு ஆமைகள் வாழ்வதும் ஓர் குறியீடு. ஆமைகள் இறைச்சிக்காக அதிகளவில் கொல்லப்படுகின்றன. மேலை நாடுகளில் ஆமைகளைப் பாதுகாப்பது, வளர்ப்பது என்பது அறிவியல் பூர்வமாக அணுகும் போக்கு தொடங்கி நீண்ட காலமாகி விட்டது. அறிவியல்பூர்வமற்ற இவ்வாக்கியங்களை பயன்படுத்துவதை, வரும் தலைமுறைக்கு பரவாமல் தடுத்திட வேண்டும்.

மழை வராமல் இருக்க, மரங்கள் தொடர்ந்து வெட்டப்படுதல், காடுகள் அழிப்பு, நீர் நிலைகள் வீட்டுமனைகளாகவும், கழிவு நீர் குட்டைகளாகவும், மருத்துவக் கழிவு



களாகவும் மாறுவதற்கு அதிகார வர்க்கமும், பலமான அரசியல் பின்னணி இருக்கும் சூழலில், விழிப்புணர்வு படிப்பறிவற்ற மக்கள் கூட்டம் மீண்டும் மீண்டும் மூடநம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் பின்பற்றுவது கடும் பின்விளைவுகளையே ஏற்படுத்தும். பாடசாலைகள், கல்லூரிகளில் சுற்றுச் சூழல், காட்டுயிர்கள் பற்றிய பாடங்களை தாய்மொழிக் கல்வியில் கற்பிக்கும் போது மட்டுமே வருங்கால தலைமுறைக்கு நாம் அனுபவித்த இயற்கைச்சூழலை அதன் அழகு குறையாமல் கொடுக்க இயலும். மனிதனின் பொதுப் புத்தியில் பதிந்துள்ள கடவுள் பற்றிய மாயைகளையும் அச்சத்தை யும் உடைத்தெறிந்தால் மட்டுமே, காட்டுயிர்கள் மேல் நெருக்கத்தை ஏற்படுத்த இயலும் என்பது மறுக்க இயலா உண்மையாகும்.





◄ சிலோன் சின்னத்தம்பி ►

*வணக்கம் பாருங்கோ!!! எப்பிடிச் சுகமா இருக்கிறியளே...?*

*மோன என்னால நிம்மதியா இருக்கேலாமக் கிடக்குது பாருங்கோ. எங்கட சீரழிவுகளுக்கு நாங்களே காரணமாயிருக்கேக்க எப்படி பாருங்கோ எங்கட ஆக்களுக்கு விடிவு வரப்போகுது? மோன விசயமொண்டு கேட்டியளே. என்ர பக்கத்து வீட்டுப் பிள்ளைக்கு அண்டைக்கு கோணாவில்ல ஊத்துப்புலம் பகுதியில நடந்ததக் கேட்டா உங்களுக்கு விசர்தான் வரும் பாருங்கோ. அந்தப்பிள்ளை உந்த மிதிவெடி தோண்டியெடுக்கிற நிறுவனம் ஒண்டில வேல பாக்குது. அண்டைக்கு உப்பிடித்தான் இந்தப் பிள்ள வேலையில நிக்கேக்க அவைக்குப் பெரியவனா இருக்கிற எங்கட தமிழ் சனிப்பொடியன் கையை வச்சு குழப்படிவிட றை பண்ணியிருக்குறானடாப்பா. அந்தப்பிள்ளயும் கத்திப்போட்டுது. உடன அங்க நிண்ட வெள்ளக்காரன் என்ன ஏதெண்டு கேக்க உந்த விசர்ப் பொடியன் அது ஒண்டுமில்ல சேர் கிறீஸ் மனுசனெண்டு சொல்லிப் போட்டான் பாருங்கோ. ஆனா அதை பாத்துக் கொண்டிருந்த வேற பொடியள் இல்லயெண்டு சொல்ல வெள்ளக்காரனுக்கு தலை சுத்தத் தொடங்கிட்டுதடாமப்பா? இந்தப் பிள்ளைக்கு இங்கிலீசு வடிவாத் தெரியாததால அந்தப் பெரியவன் தன்னைக் காட்டிக் குடுத்த அந்தப் பொடியனையும் பெட்டையையும் சேத்து கதையை மாத்தி வெள்ளக்காரனிட்ட போட்டுக் குடுத்திட்டானடாப்பா. சிவ சிவா பாத்தியளே மோன அநியாயத்த. இப்ப பாவம் அதுகள் ரெண்டும் வேலையில்லாம றோட்டில நிக்குதுகள். எங்களுக்கு நாங்கள்தானே மோன ஆப்பு வைக்கிறம் பாருங்கோ..*

*அப்ப நான் போட்டு வரட்டே!!!!*



# தத்துவ விசாரம்



**‘தமது மாணவர்களுக்குப் பதில்களைக் கொடுப்பதற்குத்தான் இன்றைய பாடசாலைகள் செயற்படுகின்றன.. மாணவர்கள் தாங்களே கேள்விகளைக் கேட்டுக் கற்றுக்கொள்வதற்கு அவை விடுவதில்லை..’**

எங்களது பாலர் பாடசாலைகளிலிருந்தே இதனை அவதானிக்கலாம். ஆனா ஆவன்னா தெரியும் பிள்ளைக்கு, ஆனால் தனது தம்பி மீது பொறாமை கொள்ளாமல் அணைத்திருக்கத் தெரியாது. ஒன்றிலிருந்து பன்னிரண்டு வரையுமான வாய்ப்பாடுகள் அத்தனையும் பாடம் அவளுக்கு, ஆனால் தன்னுடைய உடம்பை ஷேம் என்று நினைக்கும் தாழ்வுச் சிக்கல் உண்டு. யாராவது நண்பர்களின் பிள்ளைகளைப் பார்த்தவுடனேயே கிளாசில் முதலாவது பிள்ளையா என்றுதான் நாங்கள் கேட்கின்றோம். வாய்ப்பாடு முழுக்கப் பாடமாக்கியிருந்தால் கெட்டிக்காரி என்கின்றோம். இதற்கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்கும் நாங்கள், மனிதாபிமானத்துடன் நடக்கும் பண்புக்கு, ஒற்றுமை பேணும் இயல்புக்கெல்லாம் எங்களது பாராட்டுக்களை எப்பொழுதேனும் ஒரு பிள்ளைக்காவது தெரிவித்திருப்போமா? இதிலிருந்தே என்னவிதமான தலைகீழான மதிப்பீடுகளுடன் நாம் வாழ்வது மட்டுமன்றி அதன்படி எங்களது பிள்ளைகளையும் வளர்க்கின்றோம் என்பது புரியும். அதாவது, எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ, அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. எதற்குக் கொடுக்கக் கூடாதோ, அதற்குக் கொடுக்கின்றோம்.

அது மட்டுமா? அப்படி ஏதாவது போதிக்க வேண்டுமென்று எத்தனித்தாலும்கூட, நீ கேளு நான் சொல்கின்றேன் என்கின்ற பாணியில்தான் கற்றுக் கொடுக்கின்றோம். உதாரணமாக, எப்பொழுதும் நேர்மையாய் நடக்க வேண்டும் என்று வெறுமனே சொல்லிக் கொடுக்கின்றோம். பிள்ளை ஆமாம் என்று பேசாமல் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் நேர்மையாய் நடப்பதன் தாற்பரியம் என்ன? எந்தெந்த சந்தர்ப்பங்களில் நேர்மையாய் நடக்க முடியும், எந்த சந்தர்ப்பங்களில் பொய் கூறவும் தேவையாக இருக்கின்றது என பிள்ளைகளைத் தாங்களே ஆராய்ந்து விளங்குவதற்கு அனுமதிப்பதில்லை. ஏனெனில், நேர்மை வாய்மை போன்ற இந்த மதிப்பீடுகள் எல்லாமே சிக்கலான கருத்துக்கள், எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரே மாதிரி பிரயோகிக்கப்பட முடியாதுதானே. அதே போன்றுதான் நீதி, நியாயம் போன்ற விடயங்கள் தொடர்பான கருத்துக்களாகும். நியாயம் என்று எதைக் கொண்டு வரையறுப்பது? சிபிச் சக்கரவர்த்தியின்



கதையைப் பாருங்கள். அதில், புறாவைப் பிடித்துத் தின்னுவதற்கு வரும் பருந்தின் பக்கம் நியாயமா, அதைத் தடுத்து புறாவைக் காப்பாற்றிய அரசன் பக்கம் நியாயமா? இந்த வேறுபாடுகளைத் தர்க்கரீதியாக உணர்ந்துகொள்கின்ற பிள்ளைகள்தான் பிற்காலத்தில் முதிர்ச்சியும் பொறுப்பும் நாணயமும் மிக்கவர்களாய் வளருகிறார்கள்.

இவற்றைத் தவிர, எங்களது பிள்ளைகள் கணிதம், தமிழ், சமூகக்கல்வி என்று ஒவ்வொரு பீரியடும் படிக்கும் பாடங்கள் போல வேறு பல பாடங்களும் அவர்களுக்குத் தொடர்ந்து நடத்தப்படவேண்டும். ‘அதிகாரத்தினை விளங்கிக் கொள்ளுதல்’, ‘முரண்பாடுகளை அமைதியாகத் தீர்த்துக் கொள்ளுதல்’, ‘ஒழுக்கம் மிகு பொருளாதாரக் கொள்கைகளைக் கைக்கொள்ளுதல்’, ‘தம்மை ஏற்றுதலும் பிறரைப் போற்றுதலும்’, ‘நியாயத்துடன் நடந்து கொள்ளுதல்’, ‘மனிதர்கள் மத்தியில் காணப்படும் ஒற்றுமைகளும் வேறுபாடுகளும்’, ‘நேர்மையுடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ளும் வகைகள்’, ‘அன்பு சார்ந்த உறவுகளின் அடையாளங்கள்’, ‘சுயமான புத்தாக்கத்தின் அடிப்படையிலான வாழ்வு’, ‘சுதந்திரத்துடனும் மகிழ்ச்சியுடனுமான பாலியல் உணர்வுகளின் வெளிப்பாடுகள்’, ‘எந்நேரமும் விழிப்பாயிருத்தல்’ என இவை பலவகையினவாகும். தினமும் ஒரு பீரியட் இதற்கு ஒதுக்கி வைத்து, மதிப்பீட்டுக் கல்வி என்கின்ற ஒரு பாடத்தின் கீழேயே மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயத்தையும் எடுத்துக் கொள்ளலாம்.

கற்றுக்கொடுக்கும் முறைமையோ விவாதங்களாகவும் கலந்துரையாடல்களாகவும் இருக்க வேண்டும். ஆசிரியர்களுக்கே சவால் விடுகின்ற அளவுக்கு தன்னம்பிக்கை கொண்டதொரு மாணவர் சமூகம் உருவாவதற்கு ஆசிரியர்கள் தாம் துணை நிற்க வேண்டும். அடுத்த இதழின் தத்துவ விசாரத்தில், இவ்விடயங்கள் ஏன் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கப்படவேண்டும் என்பதைப் பார்ப்போம்.

**◄ ரிஷி பத்தினி ►**




**நூல் : அருள் இறங்கும் அற்புதம் ஸ்தலம்**
**ஆசிரியர் : ஏ. ஆர். ஏ. பிஷ்ர் - அல் - ஹாபி**
**வெளியீடு : மஜ்லிஸ் ஹுப்பூர் றசூல், கொழும்பு**
**விலை : ரூபா 200**

பல்வேறு துறைகளில் பாண்டித்தியம் பெற்று விளங்கும் முன்னாள் முஸ்லிம் சமயக் கலாசார அமைச்சின் பணிப்பாளரான ஏ. ஆர். ஏ. பிஷ்ர் - அல் - ஹாபி அவர்களின் ஒரு வரலாற்று சிற்புமிக்க நூலே அருள் இறங்கும் அற்புதம் ஸ்தலம். கிழக்கு மாகாணத்தின் குறிப்பாக தென்கிழக்கு மையத்தில் அமைந்துள்ள அக்கரைப்பற்று எனும் ஊரினதும், அதன் அயற்கிராமங்களினதும் பண்டைய வரலாறுகளை எடுத்தியம்புகிறார்.

இப்பிரதேசத்தில் முஸ்லிம்கள் எப்போது குடியேறினார்கள், அவர்களால் பாவிக்கப்பட்ட இடங்கள் போன்றவற்றுடன் அப்பிரதேசத்தில் காணப்படுகின்ற பள்ளிவாசல்கள் குறிப்பாக அக்கரைப் பற்று ஜும்ஆ பள்ளிவாசலின் வரலாற்றுச் சிறப்புக்களையும் அங்கு நடைபெறுகின்ற வருடாந்த சமய நிகழ்வுகளையும் முதன்மைப்படுத்தியுள்ளார். அத்துடன் அராபியரின் வழித்தோன்றல்கள்தான் இப்பிரதேச வாழ் முஸ்லிம் மக்கள் என்பதையும் ஆதாரபூர்வமாக நிரூபித்திருக்கிறார்.

‘கிழக்கிழங்கையில் அராபியரின் பிரவேசம்’ எனும் சிறுதலைப்பில் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இலங்கையுடனான வர்த்தகம் முற்றாக அராபியரின் கைகளிலேயே இருந்தது. கி.பி. 8ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நாட்டின் துறைமுகப் பகுதிகளில் கணிசமானளவு ஆராபியர்கள் குடியிருந்தனர் (Thomas Arnold – Preaching of Islam) என்பதற்கான ஆதாரங்களையும் இன்னும் பல நூல்களையும் குறிப்பிட்டுள்ளார்.

10ஆம் நூற்றாண்டில் சோழரது கட்டுப்பாட்டில் இலங்கை வந்தபோது ராஜேந்திர சோழனுடைய படையினரால் கிழக்கிலங்கையை வசப்படுத்தியபோது ‘ஆதம்முனை’ என்று அழைக்கப்பட்ட ‘திருக்கோவிலிலிருந்த சேகுஹசனார் பள்ளி, கரைவாகு முகையதீன் பள்ளி’ போன்றவைகள் அழிக்கப்பட்டன. ஹிஜ்ரி 470 இன் பின்னர் இறை நேசர்கள் திருக்கோவில் வழியாக சம்மாந்துறைக்கு வந்துள்ளனர் (ஈழத்தில் இன்னொரு மூலை) - 1992) அதில் ஒருவரின் உடல் (சமாதி) திருக்கோவிலிலில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது எனவும், அராபியர்களின் பாய்மரக்கப்பல்கள் திருக்கோவில் சின்ன முகத்துவார துறைமுகத்தின் ஊடாக தில்லை ஆற்றைக்கடந்து சோதையன் குளத்தில் நங்கூரமிட்டனர் எனவும் அவ்விடத்தை ‘கர்இயத்துஸ்ஸஃப - தேவைப்படும் பொருட்களை எப்போதும் பெறக்கூடிய கிராமம்’ எனவும் அழைத்தனர். இன்றுகூட இக்குளக் கட்டை மக்கள் ‘சோதையன் கட்டு’ என்றே அழைக்கின்றனர் எனவும் இந்நூலில் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.



2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்டதாக அக்கரைப் பற்றுக்கும் அராபியர்களுக்கும் உள்ள தொடர்பை ஆசிரியர் ஆதாரங்களுடன் விரிவாக விளக்கியுள்ளார். கி.பி. 1017ஆம் ஆண்டிற்கு முன்பே ‘அகமது திஸ்ஸ’ என்ற மன்னன் ஆதமுனையை ஆட்சி செய்தான் என்றும் அப்பிரதேசத்தில் செய்யது ஹசன் அவுலியா அவர்களின் அடக்கஸ்தலம் இருந்தது என்றும் உதுமான் கண்டு எனும் புலவரால் பல ஆண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்ட சிந்து கும்மி ரகப் பாடல்கள் மூலமாக விளக்கியுள்ளதையும் ஆசிரியர் தனது நூலில் ஆதாரங்களாகக் காட்டுகிறார்.

இவ்வாறு கிழக்குவாழ் மக்களின் ஆரம்பக் குடியேற்றத்தையும் முஸ்லிம்களின் வரலாற்றுப் பின்னணியையும் சிறப்பாக ஆய்வு செய்கின்ற இந்நூலானது இங்கு வாழ்ந்த மக்களின் கலை, கலாச்சார செயற்பாட்டியல்புகளையும் இயற்கை வளம் பற்றியும் விலாவாரியாக தொட்டுச் சென்றுள்ளது.

வரலாற்று ஆவணங்களைக் கோர்வை செய்து இப்பிரதேசவாழ் அக்கால மக்களின் சமூக ஒற்றுமைகளும், முஸ்லிம்கள் சக இன மக்களுடன் எவ்வாறு பின்னிப் பிணைந்து வாழ்ந்துள்ளார்கள் என்பதுடன் நாளைய சந்ததிக்காய் ஞாபகமூட்டப்படல் வேண்டும் என்பதையும் சுவைபடத் தந்துள்ளார். நேற்றைய தனது வரலாற்றுச் சான்றுகளை சுவைபடவே தந்துள்ளமையானது ஆத்மீக பார்வையில் நேற்றைய வரலாற்றை நேரில் சென்று பார்த்ததைப் போல உணர்வை ஏற்படுத்துகின்றது. இந்நூலை நீங்களும் ஒருமுறை படித்துத்தான் பாருங்களேன்.

**- செங்கதிரான்**

*ஆசிரியர் : பாரமானிய வைத்து எப்படி உயரமான கட்டடத்தை அளப்பது?*

*மாணவன் : இதுக்கு பல வழி இருக்கு சேர்.*

*ஆசிரியர் : கெட்டிக்காரன்! சொல்லு....*

*மாணவன் :*

*1] கட்டடத்தின் உயரத்தில் நின்று இப்பாரமானியில் கயிற்றைக் கட்டி கீழே இறக்கி அக்கயிற்றை அளப்பதன் மூலம் அறியலாம்.*

*2] அப் பரமானியை சுவரில வைத்து படிப்படியாக அளப்பதன் மூலம் அறியலாம்.*

*3] கட்டடத்தைக் கட்டியவரிடம்போய் அந்த பரமானியை அன்பளிப்பாக கொடுத்து அதன் உயரத்தை சொல்லுங்கள் என்று கேட்கலாம்.*

*ஆசிரியர் : ????*



# கிறீஸ் மனிதன் வெறும் பொய்!

## அடித்துக் கூறுகிறார்

## அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி

இன்று தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் புகுந்து பீதியை உண்டுபண்ணி மக்களை ஆட்டிப்படைக்கும் விவகாரம்தான் கிறீஸ் மனிதன் விவகாரம். மலையகத்தில் தொடங்கிய இந்த கிறீஸ் மனிதன் விவகாரம் இன்று மெதுவாக ஊடுருவி கிழக்கிற்குச் சென்று வடக்கையும் பிடித்துவிட்டது. வேறு பிரதேசங்களைவிட வடக்கு,கிழக்கு மக்களை அதிகளவில் குறி வைப்பது நன்றாகவே தெரிகின்றது. அதுவும் குறிப்பாக பெண்களைத்தான் குறிவைக்கின்றது. இந்த மர்மப் பேர்வழிகள் பற்றி இன்னும் தெளிவாக்கப்படாமல் அதனை மூடிமறைக்கும் செயற்பாடுகள்தான் நடக்கின்றன. ஆனால், மக்களோ அவர்களை இனங்கண்டு கொண்டதென்னவோ உண்மைதான்.

◄ எஸ்.எல்.மன்சூர் ►

கிழக்கில் மர்ம மனிதர் விவகாரத்தில் மக்கள் பொங்கியெழுந்தனர். இவ்விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி (OIC) யான எம்.ஜி. றஸீன் முஹம்மட் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்தோம். அவரைச் சந்திப்பதற்கான உதவிகளை அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பரிசோதகர் எம். நஜீப் செய்து தந்தார். நாம் சென்ற வேளையில் பொலிஸ்நிலையத்திலும் கிறீஸ் மனிதன் பற்றிய கதைதான் அடிபட்டுக்கொண்டிருந்தது. எனவே, அதைப் பற்றியே கதைப்போம் என்று முடிவெடுத்தோம்.

**அண்மைக்காலமாக கிறீஸ்மேன் எனப்படும் மர்ம மனிதன் பற்றி உங்களது பார்வையில் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

'கிறீஸ்மேன் என்று ஒன்றில்ல. அம்பாறை மாவட்டத்தில பிடிச்ச அஞ்சாறுபேர பார்த்தா அவங்களில இறக்காமத்தில பிடிக்கப்பட்ட இருவர் யானை கணக்கெடுக்க வந்தாக்கள். அக்கரைப்பற்றில ஒருவரைப் பிடிச்சி கோட்டில போட்டோம். அங்கபார்த்தா அவர் ஒரு மென்டல்கேஸ். அவர் நோன்புகாலம் பிச்ச எடுக்க வந்தவர். அவர நாங்க வைத்தியம் பார்க்க அனுப்பியிருக்கம். அடுத்தது கல்முனையில ஒருத்தர கிறீஸ்மேன் என்றாங்க. அவர விசாரித்தபோது நேவியில இருந்து லீவில போகப்போனவர். முழு இலங்கையிலும் இப்படித்தான். ஹப்புத்தளயில இரண்டுபேர அடிச்சிக்கொண்டாங்க. அங்கபார்த்தா அவங்க காபட் விக்கப்போனவங்க. மாத்தளையில ஒருவருக்கு மக்கள் அடிச்சாங்க. அவர் வாய்பேசாத ஒருத்தர். பேப்பரில வார மாதிரி இப்படியான ஒரு கிறீஸ்மேன் இன்னும் இல்ல என்றுதான் நான் கூறுவேன். குற்றங்கள் செய்த பலர் இப்படியான செயற்பாடுகள செஞ்சிட்டு கிறீஸ்மேன்ட எக்கவுண்டுல போடுறாங்க' என்றார்.

கிறீஸ் மனிதன் என்ற பெயரை வைத்துக்கொண்டு நாடளாவியரீதியில் குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும் இணையத்தில் பரப்பப்படும் போலியான படங்களைப் பார்த்து மக்கள் மிரளுவதாகவும் இவர் கூறுகின்றார். அதுமட்டுமன்றி கிறீஸ் மனிதனைப் பற்றிய பொய் வதந்திகளைப் பரப்புவோருக்கு இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 485க்கு கீழே தண்டனை வழங்கமுடியும் என்றும் கூறினார்.

**மக்கள் நேரில் கண்டதாக கூறுகிறார்களே?**

'அது சுத்தப் பொய் என்றுதான் நான் கூறுவேன். இதப் பின்னோக்கிப் பார்த்தா குறிப்பாக கிழக்கில சில அரசியல்வாதிகள் அதாவது அரசியல் செய்வோர் அவர்களது இலாபத்திற்காக மக்களுக்கிடையில பீதியை உண்டாக்கி அதில குளிர்காயிற வேலையில ஈடுபடுகிறார்கள். இது அவர்களது அரசியல் இலாபத்திற்காக இந்த வேலையைச் செய்யிறதாக தகவல்கள் கிடைச்சிருக்கு. அடுத்தது முன்பு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்தவர்களும் இதனைச் செய்யிறாங்க. அவர்களைத்தான் மக்கள் கண்டிருக்கின்றார்கள்' என்று மறுத்துவிட்டார்.

**பொய் என்று கூறுகிறீர்கள். ஆனால், மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனரே?**

'இதுவரைக்கும் அந்தமாதிரி பெரியளவிலான பாதிப்புகள் மக்களுக்கு ஏற்பட்டதாக எங்களுக்குத் தகவல் கிடைக்கல்ல. ஒரேயொரு விடயம் மட்டும் கிடைச்சிருக்கு. அத இப்ப விசாரிச்சிக்கிட்டுப்போறம். அது கோளாவில் என்கிற இடத்தில நடந்தது. இன்னொரு பாதிப்பு வந்ததாக கிடைச்ச தகவல் அது பொய். அதச் செய்தவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்துக்கிட்டிருக்கம். வேற ஒருத்தருக்கும் ஒன்றுமே நடக்கவே இல்ல. அங்கவாறான் இங்கவாறான், பூனை வேலில பாஞ்சாலும் கிறீஸ்மேன் என்கிற பயத்த உண்டாக்கிட்டாங்க மக்கள். மற்றும்படி எல்லாமே பொய். இப்படித்தான் கிறீஸ்மேன் வந்திட்டான் என்று ஒருத்தர் கோல் எடுத்திருக்கிறார். அங்க தாயும் மகளும் பள்ளிக்குப் போய்விட்டாங்க. வீட்டில இருந்த குமர்பிள்ளைகள் பயந்துபோய் விட்டாங்க. இதப்பத்தி விசாரித்துப்பார்த்தா பக்கத்து வீட்டுக்காரன் வேண்டுமென்று கிறீஸ்மேன் வாறான் என்று சொல்ல அவங்க பயந்து போனாங்க. அப்படிச் சொன்னவர நாங்க கைது செய்யிறத்துக்கு நடவடிக்கை எடுத்துவாறம்'




**இனி இவ்வாறு நடக்காமல் இருக்க நீங்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் என்ன?**

'பொதுமக்களைக் கொண்ட சிவில் பாதுகாப்புக் குழுக்கள் எங்கள் பிரதேசத்தில் எண்பது அமைக்கப் பட்டிருக்கு. இவர்களின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைத்தாலும் அதிகமான குழுக்கள் செயலிழந்து போயிருக்கு. அடையாள அட்டை எடுக்கும் வரைக்கும்தான் இந்த சிவில் பாதுகாப்புக் குழு இருந்து செயற்பட்டுச்சு. இப்போ அது போதியளவு நடவடிக்கை எடுக்கல்ல. நாங்க அவங்களயும், கிராமசேவையாளர்களையும் கொண்டு இது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுத்துக்கிட்டு வாறம். அது மட்டுமல்ல சிவில் பாதுகாப்புக் குழுக்கள் குற்றம் நடப்பது சம்பந்தமாக எங்களுக்கு அறிவிச்சால் நாங்க நடவடிக்கை எடுக்க இருக்கிறம். அவங்களுக்கும் அதிகாரம் இருக்கு. கிராமத்தில கிறீஸ்மேனைப் பிடிக்கிறத்துக்கும் இதனைக் கவனிச்சு இரகசியமாக தகவல் தந்தால் நாங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கிறதுக்கும் ஆயத்தமாக இருக்கம்'

**பொலிஸாரின் அல்லது இராணுவத்தின் துணையுடன் அல்லது அரசின் ஆதரவுடன்தான் இச்சம்பவங்கள் நடைபெறுவதாக பொதுமக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகின்றன. உதாரணமாக சம்மாந்துறையில் ஒரு பெண் இரவு 8 மணியளவில் குளித்துக் கொண்டிருந்தபோது ஒருவர் பார்த்ததாகவும் அவர் பின்னர் பொலிஸ் நிலையத்திற்குள் போனதாகவும் பிரச்சினைகள் எழுந்தன. இதுபற்றிய உங்கள் கருத்து என்ன?**

'பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவினரில் கொண்டுள்ள சந்தேகம்தான் இதற்குக் காரணம். இந்தச் சந்தேகத்தை இல்லாமலாக்கிறத்துக்குத்தான் நாங்க நடவடிக்கை எடுத்துக்கிட்டு வாறம். அப்படித்தான் சிலரை இதுசம்பந்தமாக கைது செஞ்சதிற்குப் பிறகு ஆளும் அரசியல்வாதிகள் மட்டுமன்றி இன்னும் கிராம மட்டத்திலுள்ள அரசியல்வாதிகள், பள்ளிவாசல் தலைவர்கள், ஊர்பெரியவர்கள், தவிசாளர்கள் போன்றவர்களை அழைத்து அவர்கள் முன்னிலையில விசாரித்து எது உண்மை எது பொய் என்பதை பார்க்க இருக்கம். விரைவில் உண்மையான சம்பவங்கள் வெளியாகும். மக்களிடமும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பலாம்'


**பத்திரிகைகள் கிறீஸ் மனிதனை மிகைப்படுத்தி மக்களின் மனதில் பயப்பீதியை உண்டு பண்ணுகின்றன என்கிற பரவலான கருத்தும் நிலவுகின்றதே...?**

'ஒவ்வொரு சம்பவத்தையும் படத்தோடு போடுறாங்க. விசாரணையின் பின்னர் அது சம்பந்தமான பூரண விளக்கத்தை அதே பத்திரிகைகள் அதே படத்தோடு போடுவதில்லை. அவ்வாறு பிரசுரிக்குமாக இருந்தால் மக்களுக்கும் உண்மைத் தன்மை விளங்கும். படத்த மட்டும் போடுறாங்க. விசயம் என்னவென்று மக்களுக்குத் தெரியாது. அப்படியே விட்டுவிடுறதுதான் நடக்குது. உண்மையிலே பத்திரிகைத் தர்மம் அல்லது உண்மையான பத்திரிகையாளன் இந்த உண்மைகளை படம்பிடித்துக் காட்டுவதுடன் நின்றுவிடாது விசாரணையின் பின்னர் உண்மைத் தன்மையையும் வெளியிடுகின்ற பத்திரிகைகளாக இருக்கவேண்டும்' என்று சற்றே ஆதங்கப்பட்டார்.

மொத்தத்தில் கிறீஸ் மனிதன் என்பவன் இல்லை என்பதுதான் அக்கரைப்பற்று பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியின் கருத்தாக இருந்தது. கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளையில் தெரியும் என்பார்கள். எட்டு மாதங்கள் கடந்தாவது உண்மை வெளிவரத்தானே போகின்றது. பொறுத்திருந்துதான் பார்ப்போமே!



படங்கள்: எம்.ஐ.எம். பைஷல்




# சமரசங்கள் செய்துகொள்ள முடியாத உலைப் போர்

அண்மையில் நேத்ரா தொலைக்காட்சியில் பிலிம் சிட்டி என்ற ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கக் கிடைத்தது. திரைப்படத்துறையில் சாதிக்கும், சாதிக்கத் துடிக்கும் நம்மவர்களுக்கான ஒரு அற்புத படைப்பாக அந்த நிகழ்ச்சியை அவதானிக்க முடிந்தது. அதைத் தயாரித்தளித்தவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆனாலும், அந்த நிகழ்ச்சியில் எமது சினிமாத்துறை சார்ந்த பலரது மனதை நோகடிக்கும் வகையிலான



ஒரு சொல்லாடலும் இடம்பெற்றது. நமது நாட்டைச் சேர்ந்தவரும் தற்போது தென்னிந்தியாவில் பல திரைப்படங்களுக்கு உதவி இயக்குநராக பணியாற்றி வருபவருமான ஒருவரை அழைத்து வந்து அவருடன் கலந்துரையாடினார்கள். வந்திருந்தவரோ'எமது ஆளுங்களுக்கு

**◀ எஸ். ஜனூஸ் ▶**

ஒரு கெமரா கிடைத்தால் போதும். உடனே இரண்டு நண்பர்களுடன் சேர்ந்து படம் எடுக்க கிளம்பிடுவாங்க' என்றார். வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடித்த ஆடுகளம் திரைப்படத்திற்கு உதவி இயக்குநராக பணியாற்றிய குறித்த அந்த நண்பரின் கருத்து என்னை மாத்திரமல்ல ஈழத்து சினிமாவில் நாட்டம் கொண்டிருக்கும் பலரையும் புண்படுத்தியிருந்தது. இலங்கை மண்ணில் பிறந்து தன் மண் சார்ந்த படைப்புகளை மலினப்படுத்தும் அவரது உரையாடலைப் பார்க்கும்போது முழுக்க தென்னிந்திய சினிமாவை தலையில் தூக்கிப் பிடிப்பதாகவே இருந்தது. மொத்தத்தில் நம்மவர் களுக்கு ஒன்றும் தெரியாது என்பதே அவரது பேச்சின் சாராம்சம்.

தென்னிந்திய சினிமா அபார வளர்ச்சியடைந்திருப்பது உண்மைதான். ஆனால் இன்று இலங்கை படைப்புகளும் நல்ல நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அவரை நான் நேரில் சந்தித்து உரையாடினேன். அப்போதுகூட அவர் எமது நாட்டு படைப்புகளையும் படைப்பாளிகளையும் குறைத்துதான் மதிப்பிட்டார். தென்னிந்திய சினிமாவின் நுணுக்கங்கங்களைக் கற்றுத் தேர்ந்த இவர் அவற்றைக் கொண்டு பிறந்த மண்ணுக்காக சிறந்த படைப்புகளைத் தரலாமே. அல்லது எம்மவர்களுக்குஅவற்றைச்சொல்லிக் கொடுத்தால் நாம் என்ன வேண்டாம் என்றாசொல்லப் போகின்றோம்.

அதைவிடுத்து நமது சினிமாவை நமது ஊடகத்திலேயே அடிமாட்டு விலைக்கு விற்கும் வேலை கவலைக்குரியது. ஒன்றில், தூக்கி நிறுத்த வேண்டும். இல்லையெனில் தூர நின்று வேடிக்கைப் பார்க்கவேண்டும். எமது நாட்டு படைப்பாளிகளுக்கும் சரி கலைஞர்களுக்கும் சரி இந்த 30 வருட காலம் எவ்வாறு இருந்தது என்று உலக நாடுகளே அறியும். இந்த மண்ணில் பிறந்தவருக்கு தெரியாதா என்ன? யுத்தம் மற்றும் நடைமுறைச் சிக்கல்களுக்கு மத்தியில் ஆங்காங்கே மிகவும் பிரயத்தனப்பட்டு இலங்கையின் திரைப்படைத்துறையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் படைப்பாளிகளின் படைப்புகளை குறைத்து மதிப்படுவது ஒரு சக படைப்பாளிக்கு ஆரோக்கியமான விடயமல்ல.

கடந்த காலங்களில் எமது நாட்டு படைப்பாளிகளால் சிருஷ்டிக்கப்பட்ட பல குறும்படங்கள் மற்றும் ஏனைய படைப்புகள் உலகளாவிய ரீதியில் பேசப்படுகின்றன. விருதுகளுக்காகவும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன. இலங்கையில் யுத்தம் கோரத்தாண்டவமாடிய தருணங்களிலும் வன்னிப் பெருநிலப் பகுதியைச் சேர்ந்த ஒரு தமிழ் வாலிபனின் எண்ணத்தில் உருவான 'வன்னி மவுஸ்' எனும் குறும்படம் பல்வேறு விருதுகளைப் பெற்றிருக்கிறது. சர்வதேச ரீதியில் சினிமாத்துறை சார்ந்த அனுபவசாலிகளினால் இவ்வாறான விருதுகள் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன. இதுபோலவே இலங்கையின் சிங்கள சினிமாவும் சர்வதேச மட்டத்தில் பல்வேறு சாதனைகளையும் விருதுகளையும் தனதாக்கி இருக்கிறது. இவையெல்லாம் எமக்கான சினிமாவுக்கான சிறந்த அங்கீகாரம்.

தென்னிந்திய சினிமாவின் யதார்த்தமற்ற நிலையை இன்று எம்மக்களும் உணரத் தொடங்கி விட்டனர். ஒரு கதாநாயகன் நூறுபேரை புரட்டிப் புரட்டி அடிப்பதும், மலையில் இருந்து குதிப்பது, சுறாக்களைப் போல கடலுக்குள்ளிருந்து பாய்ந்து வருவது போன்ற அறவே சாத்தியமற்ற விடயங்களைக் கொடுத்து சினிமாவின் உண்மைத் தன்மையை விழுங்கிக்கொண்டிருக்கின்றது. கதைகள் அற்று வெறுமனே 'சதைகளின் தயவில்' வாழும் தென்னிந்திய சினிமா உலகம் சமூகம் சார்ந்த எம் மக்களின் துயரம் சார்ந்த ஈரமானபடைப்புகளைஏற்றுக்கொள்ள மாட்டார்கள்தான். தென்னிந்திய சினிமாவிலும் கோடம்பாக்கத்தில் ஒரு சில நல்ல படைப்புக்களை உள்வாங்கும் படைப்பாளிகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.

சினிமா எனும் ஊடகம் அடிப்படையில் யதார்த்தங்களால் பின்னப்பட்டது. உள்ளதை உள்ளபடி காட்சிப்படுத்துவதாகும். இப்படி யான ஒரு ஆரோக்கியமான வழித்தடத்தில்தான் எமக்கான சினிமா பயணித்துக் கொண்டிருக்கிறது. நேர்த்தியான பதிவுகளும் நேர்மையான பார்வைகளும் உள்வாங்கப்பட்டதுதான் ஒரு யதார்த்த சினிமாவுக்கான அடையாளம். அந்த அடித்தளத்தை மையமாக வைத்து புறப்படும் ஈரானிய சினிமாக்கள் இன்று உலகளாவிய ரீதியில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. ஈரானின் நல்ல சினிமாவை விழிகளால் நுகரும் ஒரு பார்வையாளன் அந்த சினிமாவின் ஆரோக்கியமான பாதிப்புகளிலிருந்து மீள பல நாட்கள் தேவைப்படுகின்றன. இதுதான் ஒரு நல்ல சினிமாவுக்கான அடையாளம்.

தென்னிந்திய சினிமாவைப் போல் எமது நாட்டுப் படைப்புக்களில் அடிப்படை 'மசாலா தத்துவங்கள்' இல்லைதான். ஆனால் எமது படைப்பாளிகள் சகுனம் பார்க்காமல் பூஜை போடாமல் நல்ல கருவோடு கமராவைத் தூக்கிக் கொண்டு சினிமாவைப் புனிதமாக்க புறப்படுகிறார்கள். இதனூடாக எந்தப் பாதிப்பும் இல்லாத எமக்கான சினிமா பதிவு செய்யப்படுகிறது.

ஒரு பார்வையாளனின் மகிழ்ச்சியைத் தாண்டி அவனைத் தனது சினிமாவால் நெகிழ்ச்சி அடைய வைத்தவர் பாலுமகேந்திரா. உண்மைகளுக்கு விலங்கிடாமல் உணர்வுகளுடன் பேசி சினிமாவுக்கு உரித்தான சிலிர்ப்பை காட்சிப்படுத்த எத்தனித்தவர். எவரேனும் இதய சுத்தியோடு பாலு மகேந்திராவின் 'மூன்றாம் பிறை' திரைப்படம் பார்த்தால் அந்தத் திரைப்படத்தின் மீதான சிலிர்ப்பு அவர்களை மூன்று நாட்களுக்கு மேல் ஆட்படுத்தும். இதயத்தில் கலக்கும் அந்த நெகிழ்ச்சியான பாதிப்புத்தான் பாலுமகேந்திரா எனும் படைப்பாளியின் வெற்றி. இந்தப் படைப்பாளனும் ஈழமாதாவின் மடியில் தவழ்ந்தவன்தான் என்பது 'உதவி இயக்குநருக்கு' ஏன் தெரியாமல் போனது? எது எப்படியாயினும், ஆரோக்கியமற்ற விமர்சனங்கள், துவண்டு போய் இருக்கும் எமது நாட்டின் தமிழ்ப் படைப்பாளிகளை தூக்கிநிறுத்தப்போவதில்லை. மாறாக, அவர்களது படைப்பாக்க முயற்சிகளில் பாரிய பின்னடைவையே ஏற்படுத்தும். பிழைகள் சுட்டிக்காட்டப்படவேண்டும். மட்டம் தட்டி படைப்புலகத்திலிருந்து படைப்பாளியை விரட்டும் செயலாக இருக்கக் கூடாது. எமது நாட்டு கலைஞர்களின் நிலையறிந்து அவர்களது உள்ளம் அறிந்து அவர்களது படைப்புகளுக்கு நல்வழி காட்ட வேண்டும்.



★ இலங்கை முதலீட்டுச் சபையினர் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களில் பெரிய ஆடைத் தொழிற்சாலைகளை அமைக்கவுள்ளனர்.

★ யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்படவுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் அந்தந்தப் பகுதி இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும் நோக்குடன் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ இத்துறையில் பயிற்சிபெற்ற அல்லது பயிற்சி பெறாதவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளர்,
இலங்கை முதலீட்டுச் சபை,
வீடமைப்புச் செயலகக் கட்டடம்,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளர் ஆர்.செல்வமனோன் அறிவித்துள்ளார்.

★ இது தொடர்பான விபரங்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களின் விளம்பரப் பலகைகளில் போடப்பட்டுள்ளன.



# வடக்கில் அதிகரிக்கும் ஆடைத் தொழிற்சாலைகள்

## யாழ்ப்பாணம் NEWS FEED

### 20 ஜூன் 2010

இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ள விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களாகிய 400 பெண்களுக்கு ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில் வாய்ப்பு வழங்கியுள்ளதாக இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது. ஆறுமாத காலம் தையல் பயிற்சி வழங்கப்பட்டு, அவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றார்கள். வவுனியா, பம்பைமடுவில் உள்ள சரணடைந்த பெண் உறுப்பினர்கள் 300 பேரும், பூந்தோட்டத்திலுள்ள பெண்கள் 100 பேருமாக 400 பேர் இவ்வாறு இந்த வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் இவர்களுக்கு உணவுடன் கூடிய தங்குமிட வசதிகளும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 07 ஜூலை 2010

கிளிநொச்சியில் அமைக்கப்படும் ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகள் மூலம் 10,000 இளைஞர் யுவதிகளுக்கு டிசம்பர் மாதமளவில் வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் என பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். இத்தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதன் மூலம் 6000 பேருக்கு நேரடியாகவும், 4000 பேருக்கு மறைமுகமான வேலை வாய்ப்புகளும் கிடைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### 03 ஒகஸ்ட் 2010



யாழ்ப்பாணம் அச்சுவேலியில் 12 மில்லியன் டொலர் செலவில் நான்கு ஆடைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் அவற்றை அமைப்பதற்கு முதலீட்டாளர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர். இதன்மூலம் வடக்கில் 4000 பேருக்குத் தொழில் வாய்ப்புகளை வழங்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பிட்ட தொழிற்சாலைகளை அமைக்க ஒமேகா லைன், ஓரிட், எப்பிரல்ஸ், டைலெக்ஸ் உட்பட 4 நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

### 26 ஒகஸ்ட் 2010

தென்னிலங்கையிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை வழங்குவதாகக் கூறி மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இளம் பெண்களை தென்பகுதிக்கு அழைத்துச் செல்லும் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. பா.அரியநேந்திரனின் ஏற்பாட்டில் அது தடுக்கப்பட்டது. முன்னர் கிளிநொச்சியிலிருந்தும் ஆடைத்தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கென இளம் பெண்களை அழைத்துச் செல்லும் முயற்சி கூட்டமைப்பு எம்.பி.க்கள் சி.சிறிதரன், ஈ. சரவணபவன் ஆகியோரின் தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது.

### 11 நவம்பர் 2010

வட பகுதியில் ஓமந்தை, நெலுங்குளம், செட்டிக்குளம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன வட மாகாணத்தில் உள்ளவர்களுக்கு தொழில்வாய்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே இந்த ஆடைத் தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடமாகாண ஆளுநர் சந்திரசிறியின் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

### 12 ஜனவரி 2011

தென்பகுதி ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளில் வடபகுதி யுவதிகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுத் தரப்படும் என்றும் அதற்காக யுவதிகள் தேவைப்படுவதாகவும் நாட்டின் வடபகுதியில் இராணுவத்தினர் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய பிரசாரங்கள் எத்தகைய உத்தரவாதமும் ஒப்பந்தமும், வெளிப்படைத்தன்மையும் இன்றி மேற்கொள்ளப்படுவதாகவும் மக்களை இது குறித்து விழிப்பாக இருக்குமாறும் வடபகுதியில் அமைந்துள்ள சிவில் அமைப்புக்கள் கேட்டுள்ளன.

### 17 ஜூன் 2011

வவுனியாவில் இராசேந்திரன்குளம் பகுதியில் இத்தாலியினால் 'ஒமேகா லைன்' என்ற ஆடைத் தொழிற்சாலையும் செட்டிகுளம் பகுதியில் அமெரிக்காவினால் ஓரிட் என்ற ஆடைத் தொழிற்சாலையும் அமைக்கப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ் தெரிவித்தார். இவ்விரு ஆடைத் தொழிற்சாலைகள் மூலமாக 2000 பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். இவற்றில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### 29 ஜூலை 2011

வவுனியா, இராசேந்திர குளத்தில் இத்தாலியின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படுவதன் மூலம் வவுனியா மாவட்டத்தைச்சேர்ந்த ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவுள்ளது. இதுபோன்றதொரு ஆடைத் தொழிற்சாலையை ஓமந்தையில் நிர்மாணிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



### 02 ஒகஸ்ட் 2011

வவுனியாவில் முதல்முறையாக அமைக்கப்படும் ஆடைத் தொழிற்சாலைக்கான நிர்மாணப்பணிகள் அடுத்த மாதத்திற்குள் பூர்த்தியடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான நடவடிக்கைகளை இத்தாலியின் ஆடைத்தொழிற்சாலை நிறுவன மொன்று ஆரம்பித்துள்ளது.

ஆடைத்தொழிற்சாலைக்கான அடிக்கல் அண்மையில் நாட்டப்பட்டது. தொழிற்சாலை நிர்மாணிக்கப்படுவதன் மூலம் சுமார் 2000 இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என வவுனியா மாவட்ட அரச அதிபர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்தார்.

14

# திகிலோடு மர்மம் நிறைந்த தொடர்!



மரகதத் தீவின் இரகசிய ஒற்றன் 'நெடுமாறன் 999' உளவறியும்

# கறுப்பு செப்டெம்பர் அழகி



## யார் இந்த நிம்மி இவளிடம் நம்பிக்கை கொஞ்சம் கம்மி

ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன்

'இந்த ஹோட்டலுக்கு வரும் வழியில் உள்ள திருப்பத்தில் சப்பாத்து தைக்கும் ஒருவன் அமர்ந்திருக்கிறான். கிழிந்து போன ஒரு காலணியை அவனிடம் தைக்கக் கொடுத்திருக்கின்றேன். இரண்டு ரூபாய் கொடுத்து அதைப் பெற்றுக் கொள்ளவும்'

இவ்வளவுதான் அந்தச் சிறிய கடிதத் துண்டில் கிறுக்கி இருந்தது.

லைட்டரை எடுத்து,

அதைத்தட்டி விட்டு,

கடிதத் துண்டை அதில் பிடித்தார்.

கடிதம்,

சாம்பலாகியது.

மீண்டும்,

காரைத் திருப்பி ஹோட்டலை நோக்கிவிட்டார். அந்தத் திருப்பத்திற்கு சற்றுத் தொலைவில் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கிய நெடுமாறன், அந்தத் திருப்பத்தில் இருந்து சப்பாத்துத் தைத்துக் கொண்டிருந்தவனை நோக்கி நடந்தார்.

அவன் அருகில் வந்ததும்,

சுற்றிலும் ஒருமுறை பார்த்துக் கொண்டார்.

"இந்தாப்பா, கொஞ்ச நேரத்துக்கு முன்னால அந்த அம்மா கொடுத்து விட்டுப் போன சப்பாத்தை தச்சுட்டியா? தச்சுட்டா இப்படிக்கொடு. இந்தா உன் கூலி!" என்று சொல்லியபடியே இரண்டு ரூபாயை எடுத்து நீட்டினார் நெடுமாறன்.

அவரை நிமிர்ந்து ஒருமுறை பார்த்துவிட்டு, பக்கத்தில் கிடந்த ஒரு காலணி யை எடுத்து நெடுமாறனிடம் கொடுத்துவிட்டு,

அவர் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டான் அவன்.

அவன் கொடுத்த காலணியை வாங்கிக் கொண்டு விரைந்து நடந்த நெடுமாறன் காரினுள் ஏறி அமர்ந்து கொண்டார்.

காரை ஓட்டிச் சென்று பாழடைந்த ஒரு பகுதியில் நிறுத்தினார். காலணியை எடுத்து,


அதன் பின்பக்கத்தைத் திருகி னார். அது கழன்று வந்தது.

நடுவில்,

ஒரு கடிதம் பதுங்கிக் கொண்டிருந்தது. அவசர அவசரமாகக் கடிதத்தைப் பிரித்த நெடுமாறன்,

விழிகளை அதில் விளையாட விட்டார்.

'பம்பாயில் இருந்து புற்றுநோய்க்கு மருந்து கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி சம்பந்தமாக இங்கே வந்திருந்த டொக்டர் சுதாராஜ் என்பவரை கறுப்பு செப்டெம்பர் இயக்கத்தினர் கடத்திச் சென்று விட்டார்கள். அவரை இப்போது ஒரு பிணைக் கைதியாக வைத்திருக்கின்றார்கள். நீங்கள் இருக் கும் அறைக்கு பக்கத்து அறையில்தான் அவர் தனதுமகளுடன்தங்கிஇருந்தார். அவருடைய மகளுக்கு எந்த விதமான ஆபத்தும் வராமல் நீங்கள் பாதுகாக்க வேண்டும். டாக்டர் சுதாராஜுக்கு ஏதாவது நடந்து விட்டால் நாம் இந்திய அரசிற்கு பதில் சொல்லியாக வேண்டும். இந்த வழக்கை விரையில் முடித்துவிட வேண்டும். இந்த வழக்கு முடியும் வரையில் நீங்கள் தலைவரைப் பார்க்கக் கூடாது. இது தலைவர் எமகாதகனின் உத்தரவு"



கடிதத்தைப் படித்து முடிந்ததும்,

எதிரிகள் மிக விரைவில் செயற்பட ஆரம்பித்துவிட்டார்கள் என்பதை புரிந்துகொண்டார். டாக்டர் சுதாராஜைக் கடத்திச் சென்றவர்கள் அடுத்ததாக அவர் மகள் நிம்மியையும் கடத்திச் செல்ல வருவார்கள் என்று எதிர்பார்த்த நெடுமாறன்,

காரைத் திருப்பி ஹோட்டலை நோக்கி ஓட்டினார்.

ஹோட்டலின் பின் பக்கத்தில்,

அவர் காரை நிறுத்தி விட்டு கீழே இறங்கி ஹோட்டலினுள் நுழைந்து விரைந்து நடந்தார்.

அப்போது,

அவர் மேலில் மோதுவதைப் போல் நடந்து சென்ற ஒரு பெண் மெல்ல அவருக்கு மட்டும் கேட்கும் விதத்தில்,

"பத்தாம் நம்பர் அறைக்கு வந்தால் டொக்டர் சுதாராஜைப் பற்றி முக்கியமான ஒரு தகவல் கிடைக்கும்" என்று முணுமுணுத்தபடியே நடந்து சென்றாள்.

சிறிது தூரம் நடந்து சென்ற அந்தப் பெண்,

கொஞ்சம் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பெண்ணின் முகத்தை,

தன் இதயத்தால் படம் பிடித்துக் கொண்டார் நெடுமாறன்.

அமைதியாக நடந்து சென்ற நெடுமாறன் நிம்மி தங்கியிருந்த அறைக் கதவைத் தட்டினார்.

"யாரது?" உள்ளே இருந்து நிம்மியின் குரல் கேட்டதும்,

நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்ட நெடுமாறன், "நான் தான் சுதர்ஸன்" என்று மெதுவாகச் சொன்னார்.

கதவு திறந்து கொண் டது.

கதவைத் திறந்து வி ட்டு,

கவர்ச்சியாக சிரித்துக் கொண்டு வாசலில் நின்றிருந்தாள் நிம்மி

கவர்ச்சியான அந்தச் சிரிப்பு,

நெடுமாறனின் உள்ளத்து உணர்ச்சிகளுக்கு ஓர் அழைப்பு விடுவதைப் போலிருந்தது.

"என்ன நிம்மி உங்களுக்கு ஆபத்தொன்றும் இல்லையே? என்று கேட்டபடியே அறைக்குள் நுழைந்தார், நெடுமாறன்.

அந்த அறைக்குள் மல்லிகை சென்ட்டின் மணம் மிதந்து கொண்டி ருந்தது.

"இல்லை சுதர்ஸன். நீங்கள் சொன்னதைப் போல் நான் இப்போது மிகவும் விழிப்போடு நடந்து கொள்கிறேன்!" என்று சொல்லிவிட்டு,

விழிகளை பாதி மூடி,

மோகனமான ஒரு பார்வையால் நெடுமாறனின் உள்ளத்திற்குள் ஒரு கிளுகிளுப்பை உண்டாக்கினாள்.

டாக்டர் கடத்தப்பட்ட செய்தியை நிம்மியிடம் சொல்லக் கூடாது என்று நெடுமாறன் முடிவு செய்து கொண்டார்.

"உங்களுக்கு இந்த அறையில் இருப்பதற்கு அச்சமாக இருந்தால் சொல்லுங்கள் வேறு ஓர் இடத்தில் ஏற்பாடு செய்கிறேன்!"

"இல்லை வேண்டாம். உங்களுக்கு ஏன் வீண் சிரமம். நீங்கள் தான் பக்கத்து அறையிலேயே இருக்கிறீர்களே! ம்... சுதர்ஸன் எனக்கு ஓர் உதவி செய்வீர்களா?" என்று மெல்லிய குரலில் கேட்டாள் நிம்மி.

"சொல்லுங்கள்!"

"மாலையில் ஏதாவது சினிமாவிற்கு போகலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். என்னுடன் கம்பெனி பண்ண முடியுமா?" கீழ்க்குரலில் கிசுகிசுத்தாள் நிம்மி.

"ஓ" அதற்கென்ன. பேகலாமே!' என்று தலையை ஆட்டினார் நெடும ாறன்.

"நன்றி சுதர்ஸன்!"

"சரி, எனக்கு இப்போது கொஞ்சம் வேலை இருக்கிறது. நான் மாலை வந்து உங்களைச் சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டு நிம்மியின் அறையை விட்டு வெளியே வந்த நெடுமாறன்,

தனது அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டார்.

சில வினாடிகள் அறைக்குள் இருந்து என்னவோ செய்த நெடுமாறன்,

அறைக் கதவை திறந்து கொண்டு வெளியே வந்தார்.

அறைக் கதவைச் சாத்திக் கொண்டே எல்லா பக்கங்களையும் பார்த்துக் கொண்டார்.

நிம்மியின்அறை சாத்திக் கிடந்தது. அக்கம் பக்கத்தில் நடமாட்டமே இல்லை.

புலியைப் போல் மெல்ல நகர்ந்த நெடுமாறன்,

பத்தாம் நம்பர் அறையை நோக்கி நடந்தார்.

பத்தாம் நம்பர் அறையின் முன்னால் வந்து நின்றார்.

அறைக் கதவு உள் பக்கத்தில் சாத்தப்பட்டிருந்தது.

கொஞ்ச நேரம் அமைதியாக நின்ற நெடுமாறன்,

ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டு கதவில் மெல்லத் தட்டினார்.

கொஞ்ச நேரம் சென்றது.

கதவு திறந்து கொண்டது.

அவரை வரச்சொன்ன அதே பெண்தான் வாசலில் நின்று கொண்டிருந்தாள்.


"விரைந்து உள்ளே வாருங்கள்!" என்று பரபரப்புடன் சொன்னாள் அந்தப் பெண்.

நெடுமாறன் உள்ளே நுழைந்ததும்,

உடனே,

கதவைச் சாத்தி விட்டாள் அந்தப் பெண்.

(மர்மம் தொடரும்....)




# பின்லேடனைப் பிடித்த உளவாளி ஜோனின் புகைப்படம் சிக்கியது

பின்லேடன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து, அவர் கொல்லப்படக் காரணமாக இருந்தவர் பற்றிய சில விபரங்கள் வெளியிடப்படுவதை, சி.ஐ.ஏ. அனுமதித்திருக்கிறது. இவர், அசோசியேட்டட் பிரஸ் செய்தியாளருடன் ஒரு சந்திப்பை நடாத்தியிருக்கிறார் என்பது பற்றிய செய்தி இணையத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

இவரை அடையாளப்படுத்த, 'ஜோன்' என்ற ஒற்றைப் பெயரை மாத்திரம் வெளியிட அசோசியேட்டட் பிரஸ் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எழுதியிருந்தோம். அதைத்தவிர, இவரது வேறு அடையாளங்களையோ, உருவ அமைப்பைப் பற்றியோ வெளியே சொல்வதில்லை என உறுதிமொழி வாங்கப்பட்டுள்ளது' என்று அசோசியேட்டட் பிரஸ் தெரிவித்திருந்தது.




இவரது அடையாளம் வெளியானால், பின்லேடனின் மரணத்துக்குக் காரணமாக இருந்த இவர், அல்-கைதாவினரால் இலக்கு வைக்கப்படலாம் என்ற முன்னெச்சரிக்கையே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டிருந்தது.

சி.ஐ.ஏ.யில் பின்லேடன் வேட்டை புறொஜெக்டில் ஜோன் ஈடுபட்டிருந்த 10 வருடங்களில் அவர், தனக்குக் கொடுக்கப்பட்ட பதவி உயர்வை வேண்டாம் என்று மறுத்திருக்கிறார். பின்லேடனைப் பிடித்த பின்னர்தான் பதவி உயர்வு என்று பிடிவாதமாக, அதே பதவியில் தொடர்ந்திருக்கிறார்.

பின்லேடனின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து, அங்கு இருப்பவர் அவர்தான் என்பதை உறுதிப்படுத்திய நபரும் இந்த ஜோன்தான்.

இவரது உறுதிப்படுத்தல் கிடைத்த பின்னரே, பின்லேடன் வேட்டைக்கான நாள் குறிக்கப்பட்டது. அமெரிக்க அதிரடிப் படையினர் ஹெலிகொப்டர்களில் சென்று அந்த ஒப்பரேஷனை நடாத்துவதை வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ஒபாமாவும் மற்றையவர்களும் பார்ப்பதற்கு வசதியாக நேரடி ஒளிபரப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

ஜனாதிபதியுடன் அதே அறையில் இருந்து அந்தக் காட்சிகளைப் பார்ப்பதற்கு 'இந்த' ஜோனும் அழைக்கப்பட்டிருந்தார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களில் ஒரு புகைப்படம் மாத்திரம் வெள்ளை மாளிகை அதிகாரிகளால் வெளியே ஊடகங்களுக்கு கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட புகைப்படத்தில் ஜோனின் முகம் தெரியாதபடி பார்த்துக் கொள்ளப்பட்டது. இந்தக் கட்டம் வரை எல்லாமே சிறப்பாக நடந்தன.

'கொடுக்கப்பட்டுள்ள போட்டோவில் பிரேமுக்கு வெளியே நிற்பவர்தான் ஜோன்' என்று கூறியிருந்தார்கள். அந்த போட்டோவின் பிரேமுக்கு வெளியே நின்றிருந்த அவரது உடல் பகுதி மாத்திரம் போட்டோவில் தெரிந்தது.

அது மாத்திரமா? அவர் அணிந்திருந்த மஞ்சள் நிற கழுத்துப்பட்டி தெளிவாகத் தெரிந்தது. புகைப்படத்தில் தெரிந்த அவரது ஒரு பகுதி உடலமைப்பிலிருந்து சராசரியைவிட அதிக உயரமுடைய நபர் என்பதும் தெரிந்தது.

முதலாவது புகைப்படம் வெளியிடப்பட்ட இரு தினங்களின்பின், வெள்ளை மாளிகை வேறு சில புகைப்படங்களையும் வெளியிட்டது. அந்தப் புகைப்படங்கள் ஒன்றில், மஞ்சள்நிற கழுத்துப்பட்டி அணிந்த, சராசரியைவிட அதிக உயரம் உடைய நபர் ஒருவர் நின்றிருந்தார்.

ஜோன் யங் என்ற புலனாய்வு எழுத்தாளர், இந்த விபரங்களை வைத்துக் கொண்டு, மர்ம மனிதராக சி.ஐ.ஏ.யால் உருவகப்படுத்தப்பட்ட நிஜமான ஜோன் யார் என்பதைக் கண்டுபிடித்ததாக 'நியூயோர்க் ஒப்சேர்வர்' பத்திரிகை இவ்விடயத்தை வெளியே கொண்டு வந்திருக்கின்றது.

போட்டோ பிரேமுக்கு வெளியே அவர் நிற்கும்போது அணிந்திருந்த மஞ்சள்நிற கழுத்துப்பட்டியும் அவரது முகம் தெரியும் போட்டோவிலுள்ள மஞ்சள்நிற கழுத்துப்பட்டியும் ஒன்றுதான் என்பது ஆய்வில் நிருபிக்கப்பட்ட பின்னரே, இந்த விபரங்கள் அடங்கிய கட்டுரையைப் பிரசுரிக்க நியூயோர்க் ஒப்சேர்வர் பத்திரிகை தயாரானது.

கட்டுரையைப் பிரசுரிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டவுடன் சி.ஐ.ஏ.யின் லோங்க்லி தலைமைச் செயலகத்தைத் தொடர்புகொண்ட நியூயோர்க் ஒப்சேர்வர் பத்திரிகை, 'நீங்கள் மர்ம மனிதராக வைத்திருக்கும் ஜோன் யார் என்பதை நாம் கண்டுபிடித்து விட்டோம். அதுபற்றி ஏதாவது கூற விரும்புகிறீர்களா?' என்றும் கேட்டிருக்கின்றது.

இந்தக் கட்டுரை வெளியாகாமல் இருக்க சி.ஐ.ஏ. கடும் முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், கட்டுரை வெளியாகிவிட்டது.

சி.ஐ.ஏ.யின் துணை இயக்குநர் ஜோன் மெக்லோகிளின், 'உங்களை எச்சரிக்கிறேன். அந்த மனிதரின் பெயரை வெளியிடாதீர்கள்' என்று கூறியது மாத்திரம், பத்திரிகையால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கட்டுரையையும் போட்டோவையும் வெளியிட்டுள்ள பத்திரிகை, அவரது பெயரை மாத்திரம் வெளியிடவில்லை.

அமெரிக்கர்களால், 'சூப்பர் ஸ்பை' என்று கொண்டாடப்பட்டும், மர்ம மனிதராக வைக்கப்பட்டிருந்த ஜோனின் முகம், இப்போது வெளியே தெரிந்துவிட்டது.

(13ஆம் பக்கத் தொடர்ச்சி..)

## அவசரகாலச் சட்டமும்...

✸ ஜனாதிபதி அரசாங்கத்தின் வர்த்தமானியில் (அரசாங்கத்தின் கொள்கைகளையும் சட்டங்களையும் வெளியிடும் பிரசுரம்) பிரகடனம் செய்த அந்தக் கணமே அவசரகாலச் சட்டம் நடைமுறைக்கு வருகின்றது.

✸ இந்தச் சட்டம் யாப்பில் காணப்படுகின்ற சட்டங்களைத் தவிர வேறெந்தச் சட்டங்களையும் மீற வல்லது.

✸ பிரகடனத்தை ஏற்படுத்திய ஜனாதிபதி, அதனை உடனடியாகவே பாராளுமன்றத்துக்குத் தெரிவிக்கவேண்டும். இப்பிரகடனம் ஒரு மாதத்துக்குத்தான் செல்லுபடியாகும். அதற்குப் பிறகு பாராளுமன்றம் அதனை அங்கீகரித்தால்தான் அடுத்த மாதத்துக்கு அதனை நீட்டலாம். இப்படி மாதாமாதம் பாராளுமன்றம் கூடி அவசரகாலச் சட்டத்தினை அங்கீகரித்ததனால்தான் 1971ஆம் ஆண்டு தொடக்கம் (முதலாவது ஜே.வி.பி. கிளர்ச்சி) இன்று வரை ஒரு சில மாதங்களைத் தவிர இச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்து வந்திருக்கின்றது.

✸ இதைக்கொண்டு ஜனாதிபதி தொழிற்சங்க நடவடிக்கையை ஒடுக்குவது தொடங்கி பாராளுமன்றத்தைக் கலைப்பது வரை எதையும் செய்யலாம்.

✸ அவசரகாலச் சட்டத்தின்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எவரையும் கைதுசெய்து காலவரையறையின்றி, அதாவது அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும் வரையும் தடுத்து வைக்க ஆணையிடலாம்.



✸ ஆனால், எங்கள் நாட்டிலோ தொடர்ந்து அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்த தன்மையினால் யதார்த்தமாகப் பார்க்கப்போனால் ஒருவர் தனது வாழ்நாள் முழுக்கவே விசாரணையின்றி கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படலாம் என்ற நிலைமையே காணப்படுகிறது.

✸ கைதாகி 15 நாட்களுக்குப் பிறகு கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் தருவிக்கப்படவேண்டும் ஆயினும், அவர் நீதிபதியினால் விடுவிக்கப்பட முடியாது. அவரை மீண்டும் ரிமாண்டில் போடுவது தான் ஒரு நீதிபதி செய்யக்கூடிய உதவியாகும். அவரை விடுவிக்க வேண்டுமென்றால் நீதியமைச்சின் நிரந்தர செயலாளரின் அனுமதி பெறவேண்டும்.


✸ சுருங்கக்கூறின், ஒருவரை நிரந்தரமாகக் கைதியாக வைத்திருக்கும் யுக்தியே நமது அவசரகாலச் சட்டம் என்றால் மிகையாகாது. இந்தச் சட்டத்தின் கீழ்தான் நாம் முன்பு கூறிய பயங்கரவாதத்துக்கு எதிரான 2006ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

✸ அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதத் தடைச்சட்டமும் ஒன்றாகச் செயற்படுத்தப்பட்டால் என்ன நடக்கும்? நாங்கள் கடந்த பல ஆண்டுகளாக அனுபவித்து வந்த நரக துன்பம்தான் எஞ்சும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுபவர்கள் 72 மணித்தியாலங்களில் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும் என்பதனால், 72 மணித்தியாலங்களில் அவர்களை அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஏதோவொரு குற்றச்சாட்டை எழுதிப் போட்டுவிடுவார்கள்.

✸ இங்கு 15 நாட்களின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்படவேண்டும் என்பதனால் உடனே திரும்பப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றச்சாட்டைப் போட்டு 18 மாதங்கள் சிறை வைத்து விடுவார்கள். இப்படியே போக வேண்டியதுதான்.

✸ இவற்றுடன் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டமும் ஒருங்கே ஒருசேர அமுலில் இருந்தால் என்ன நடக்கும்? 2007,2008,2009ஆம் ஆண்டுகளில் நாம் அனுபவித்த பயங்கரங்கள்தான் கூடும்.

✸ இவற்றை இல்லா தொழிப்பதற்கு பல மனிதஉரிமைகள் அமைப்புகள் பணி புரிகின்றன. மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், மனித உரிமைகள் இல்லம் போன்றவை அவையாகும். ஆனால் நாங்கள் மக்கள் உறுதியுடன் அவர்களுக்குப் பின்னால் நிற்காவிட்டால் சிறிய நிறுவனங்களாகிய அவை ஒன்றும் செய்ய முடியாது. இச்சட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வுகளை தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் மத்தியிலே ஏற்படுத்தி இந்த நாடே சூழ்ந்து இந்த அநீதிகளை ஒழிக்கப் பாடுபடச் செய்ய வேண்டும்.



## இப்படியும் நடக்கிறது

### சமுதாயத்தின் மறுபக்கம்



# வேலியே பயிரை மேய்ந்தால்

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு கிழமைகளுக்குள் பதினைந்து சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியிருப்பதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்.டி. தளுவத்த தகவல் வெளியிட்டு இருக்கிறார். இவ்வாறான சம்பவங்களுக்கு அவர்களின் உறவினர்களே காரணமாயிருப் பதாக தெரிவிக்கப்படுகின்றது. சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வைச் சிறுவர்களிடமே அதிகம் ஏற்படுத்த வேண்டும் என்றும் இதிலிருந்து தப்புவதற்கு சிறுவர் களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார். இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கு பெற்றோர்களே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# ‘கவனிச்சால்’ சரி

கிளிநொச்சி, விவேகானந்த நகரில் மின் இணைப்பிற்காக விண்ணப்பித்து ஒரு வருடமாகப் போகிறது இன்னமும் கிடைக்கவில்லை என அப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கூறினார். மின்சார சபையில் சென்று கேட்டால் குழியை வெட்டுங்கள், இடத்தைத் துப்பரவு செய்யுங்கள் என ஒவ்வொரு தடவையும் சாட்டுக்கூறித் தட்டிக்கழித்து வருகின்றனராம். ஆனால் மின்சார சபை ஊழியர் ஒருவரை வடிவாகக் ‘கவனித்ததில்’ மறுநாளே தனக்கு மின் இணைப்புக் கிடைத்ததைக் கூறிப் பெருமையடித்தார் இன்னொருவர். இதையறிந்த முதலாமவர் மின்சார சபைக்கு ஓடிச்சென்று, பக்கத்து வீட்டுக்கு உடனே இணைப்புக் குடுத்தது பற்றிக் கேட்டபோது அது றோட்டுக்கு அங்கால இருக்கு என்றாராம் மின்சார சபை ஊழியர். ஆனால் அவரது வீடும் றோட்டுக்கு அங்காலதான் என்பதும், இணைப்புக் கொடுத்த வீட்டிற்கு பக்கத்து வீடுதான் விண்ணப்பித்தவரின் வீடு என்று கூடத் தெரியாத மின்சார சபை ஊழியர்கள் (?) கிளிநொச்சியில் இருக்கின்றார்களாம்.

# ஏமாற்று மோசடி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர், தொடர்மாடிக் குடியிருப்பொன்றில் வீடொன்றைக் கொள்வனவு செய்ய ஒரு தரகர் மூலம் முப்பது இலட்சம் ரூபா கொடுத்துப் பதிவு செய்திருந்தார். மூன்று மாதங்களின் பின்னர் அவர் அந்த வீட்டிற்குச் சென்றபோது அந்த வீட்டின் உறவினரெனக் கூறிய நபரொருவர் அங்கிருந்தார். உரிமையாளர் வெளிநாட்டில் இருக்கிறார் எனவும் அந்த வீட்டை விற்கவில்லை எனவும் கூறியுள்ளார். இதன்போது போலி ஆவணங்களைப் பயன்படுத்தி தான் ஏமாற்றப்பட்டது தெரியவந்தது. இவ்வாறு பல புலம்பெயர்ந்து வாழ்கின்றவர்களின் வீடுகள் மோசடி செய்யப்படுவதாக தெரியவருகின்றது. இந்த மோசடிகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதால் மக்கள் இதுவும் எங்கே போய்முடியுமோ எனக் கலக்கத்தில் இருக்கின்றனர்.

# அரசியலில் சகஜம்

பெருமெடுப்பில் பல அரசியல்வாதிகள் புடைசூழ முன்னெடுக்கப்பட்ட இரணைமடுக்குள நன்னீர் மீன்பிடித்திட்டத்திற்காக குளத்துநீர் திறந்துவிடப்படாததால் பன்னங்கண்டி, திருவையாறு, 3ஆம் வாய்க்கால் போன்ற கிராமத்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுவரை காலமும் குளத்து நீரையே நம்பியிருந்த இவர்களுக்கு மாற்று வழியெதுவும் அற்றநிலையில் வானம் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் விவசாயிகள். தேர்தலுக்காகப் படமெடுத்தவர்கள் இந்த விவசாய நிலங்களைக் கருத்திற் கொள்ளாதது ஏன்?

# அன்பான கட்டளை

அண்மையில் கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களை பாதுகாப்புத் தரப்பினர் அழைத்து வீட்டுக்கு வாக்களித்தவர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாகப் பதவி வகிக்கக் கூடாது என ‘அன்பாக’ எச்சரித்துள்ளார்களாம். அன்பாகக் கூறிய பின்னரும் பதவி வகித்தால் ஏதும் வில்லங்கம் வரும் என்பதால் திரிசங்கு நிலையிலிருக்கிறார் ஒரு பொறுப்பான உறுப்பினர்.

# வாழ்க மக்கள் சேவை

கிளிநொச்சிப் பிரதேசத்திற்கு வந்த 2500 தகரங்கள் அரசியல்வாதி ஒருவரின் தலையீட்டால் கண்டிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலேசாகத் தகவல் கசிந்துள்ளது. மீள்குடியேற்றப்(?)பட்டதாகக் கூறப்படும் மக்கள் இன்னமும் கிழிந்த தறப்பாள் கூடாரங்களில் இருப்பது தெரியாதா? ஒருவேளை எல்லா மக்களுக்கும் கொடுத்து மிஞ்சிய தகரங்கள்தான் கண்டிக்கு அனுப்பப்பட்டதா தெரியவில்லை.

ஒருவேளை கிளிநொச்சி மக்கள் கண்டியில் மீள்குடியேற்றப்படப் போகின்றார்களோ தெரியவில்லை.

# கிறீஸ் பூதமாகிய ஊழியர்

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் மின்மானி வாசிக்க வந்த ஊழியரை அந்த வீட்டிலிருந்த வயதான மூதாட்டி ஒருவர் கிறீஸ் பூதமெனக் கத்தி ஊரைக்கூட்டிய சம்பவம் அண்மையில் நடந்திருக்கிறது. பதறியடித்து தடிகள், பொல்லுகளுடன் வந்த அந்த ஊர் மக்கள் அந்த ஊழியரைப் பார்த்ததும் அதிர்ச்சியடைந்து விட்டனராம்.

ஏனெனில் அவர் அந்த ஊருக்கு நல்ல பரீட்சயமானவர். வந்த சனமெல்லாம் சிரித்துக்கொண்டு திரும்பிவிட்டனர். யாழில் இப்போது கிறீஸ் பூதப்பிரச்சினையும் அதன் மீதான பயப்பீதியும் இவ்வாறு இருக்கிறது. உறவினர்களே சற்று வித்தியாசமாகச் சென்றால் அவர்களுக்கும் ஆப்புத்தான் கவனம்.

இன்னும் சில இளைஞர்கள் இரவில் பொழுதுபோக்குக்காகவும் தங்களை அடையாளப்படுத்தவும் இரவுநேரங்களில் தண்ணியடித்துக்கொண்டு வீடுகளைத் தட்டுவதுடன் பெண்களிடம் சேட்டை விடுவதாகவும், இவ்வாறான சிலர் நையப்புடைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.




# சினிமாத்தனம் வேண்டாமே!

எமது பிரதேசங்களில் தொலைக்காட்சிகள் குறைவென்பதால் நாம் அதிகமாக வானொலிகளையே பொழுதுபோக்கிற்காகக் கேட்கின்றோம். ஆனால், வானொலிகளோ துன்பப்பட்டுப்போயிருக்கும் எமக்கு ஆறுதலாக ஏதாவது நிகழ்ச்சிகளை நடாத்தினால் நன்றாக இருக்கும். வெறும் சினிமாவை நம்பி நிகழ்ச்சிகளை ஒலிபரப்பாமல் மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்பும் புதிய நிகழ்ச்சிகளைப் படைக்க முன்வர வேண்டும்.

**- வதனி, தொண்டமான் நகர், கிளிநொச்சி.**

# இன்னும் முயற்சிக்கலாம்

வெற்றி எப்.எம். இல் ஒலிபரப்பாகும் ‘நண்பனிடம் கேளுங்கள்’ நிகழ்ச்சி எனக்குப் பிடித்த ஒன்று. மிகவும் சுவாரஸ்யமாக நடாத்திச் செல்லும் விதம் நேயர்களை கட்டிவைத்திருக்கிறது. நிகழ்ச்சிக்கான பாடல் தெரிவுகளும் சூப்பர். ஆனாலும் இவ்வாறான நிகழ்ச்சியில் பங்குகொள்பவர்களுக்கு மேலும் துன்பத்தைத் தருவதாக அமையாமல் நிகழ்ச்சி அமையவேண்டும்.

**- எஸ்.சபீக்கா, கிருலப்பனை.**

‘ஊடக மயக்கம்’ என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட, பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

‘ஊடக மயக்கம்’, ‘இருக்கிறம்’
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07,
மின்னஞ்சல்: irukiram@gmail.com

*நான் முதல்வன், நீ முதல்வன் என்று சண்டைபிடிக்கும் தமிழ் வானொலிகள் முதலில் இதை நிறுத்தவேண்டும். தரமான நிகழ்ச்சிகளை விடுத்து முதல்வன் என்ற நிலையைக் குறியிசைகளை ஒலிபரப்புவதை நிறுத்துங்கள்.*

**- பிலிப் சவக்கீன், பள்ளிமுனை.**




# தெளிவில்லா வசந்தம்

எமது பகுதிகளில் கடந்த சில நாட்களாக வசந்தம் எப்.எம். தெளிவில்லாமல் இருக்கிறது. பல சிறந்த நிகழ்ச்சிகளை சிறப்பாகப் படைக்கும் வசந்தத்தின் அலைவரிசையைச் சீராக்கி மீண்டும் தெளிவாக்கித் தருமாறு கேட்கின்றோம்.

**- தி.நவநீதன், முல்லைத்தீவு.**

# வாசகர் கடிதம்

எனது நண்பனின் கைகளில் இருந்த 21ஆவது 'இருக்கிறம்' இதழழை தற்செயலாக வாங்கிப் பார்த்தேன். இப்படியொரு துணிச்சலான பத்திரிகை இலங்கையில் வெளி வருகிறதா என ஆச்சரியப்பட்டுப் போனேன். அன்றிலிருந்து நானும் இருக்கிறமின் வாசக னாகிவிட்டேன். தெளிவான தரவுகளுடன் கூடிய NEWS FEED பகுதி சிறப்பாக இருக் கின்றது.

– த.வாகீசன், தெகிவளை.



ஒவ்வொரு இதழும் புதுப்பொலிவுடன் வெளிவந்து கொண்டிருக்கும் இருக்கிறமிற்கு வாழ்த்துக்கள். நான் அதிகமாய் விரும்பிப் படிப்பதுஇப்படியும்நடக்கிறதுபகுதியைத்தான். சமுதாயத்தின் சீரழிவுகளை வெளிக்கொண்டு வரும் பொறுப்புள்ள வேலை நல்லதுதான். அத்துடன் நேரடி ரிப்போர்ட் பகுதி மூலம் பிரச்சி னைகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ளமுடி கிறது.

– பாலசிங்கம், கொழும்பு-10.

நடுநிலையுடனும், உண்மையான தன்மையுடனும் வெளி வரும் 'இருக்கிறம்' பத்திரிகையை வார்த்தைகளால் சிறைப்பிடிக்க முடியாது. இதழில் எந்தக்குறையையும் சுட்டிக்காட்ட முடிய வில்லை. இருக்கிறமின் வாசகன் என்ற ரீதியில் எனது வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பத்திரிகையில் நானும் இணைந்து பணிபுரிய ஆவலாக உள்ளேன்.

– ந.வினோதன், வேலன்குளம், வவுனியா.




மாற்றங்களுக்கு குறைவில்லாமல் ஒவ்வொரு வாரமும் புதுமை படைத்துவரும் 'இருக்கிறம்' ஆசிரி யர் குழாமிற்கு முதற்கண் நன்றிகள். கடந்த வாரம் 29.08.2011'இருக்கிறம்'அட்டைப்படத்தில்அசத்திவிட் டீர்கள்.

வாசகர்கள் எதிர்பார்க்காமலிருக்கும் பொழுது அதிர்ச்சி வைத்தியம் தருவதில் இருக்கிறமிற்கு நிகர் எதுவுமில்லை. உங்கள் துணிச்சலான முயற்சி வாசக கர்களான எங்களை திகைப்படைய வைக்கிறது.

தன்னம்பிக்கையும் துணிச்சலும் உள்ள உங்கள் ஆசிரியர் குழாமுக்கு மீண்டும் நன்றிகள். துணிச்சல் மிக்க உங்கள் அர்ப்பணிப்பு தமிழ் இனம் உள்ளவரை வாழும்.

கமலினி விக்னராஜா, வைமன் வீதி, யாழ்ப்பாணம்

எப்போதும் புதுமைகளை வெளிக்கொணருவதில் இருக் கிறமுக்கு நிகர் இருக்கிறமேதான். கடந்தவாரம் அட்டைப் படம் பார்த்தேன். மிகவும் வித்தியாசமாகவும் அழகாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது. அட்டைப்படத்திலேயே அதிகள வான உள்ளடக்கங்களை சுட்டிக்காட்டியிருப்பதை பாராட்டத் தான் வேண்டும்.

களத்திற்குச் சென்று நேரடியாக மக்களிடமிருந்து எடுக்கின்ற நேரடி ரிப்போர்ட்கள் அருமை. மருதமுனை நெசவுத்தொழில், நல்லூரில் தென்பகுதி வர்த்தகர்களின் ஆக்கிரமிப்பு போன்ற நேரடி ரிப்போர்ட்கள் பாராட்டுக்குரியன. ஆனாலும், 'இருக்கிறம்' எல்லாப் பகுதிகளிலும் கிடைக்கக்கூடியதாக ஏற்பாடு செய்யு மாறு விநியோகப்பிரிவிடம் வேண்டுகிறேன்.

– பாத்திமா ஷப்னா, காத்தான்குடி.

கடந்த இதழ் ஒன்றில் கிறீஸ் மனிதன் பற்றிய முழுத்தொகுப்பையும் காணநேர்ந்தது. மிகவும் நேர்த்தியான வடிவமைப்புடன் முழுத்தகவலை யும் வழங்கியிருந்தீர்கள். அத்துடன் காலத்தின் தேவை கருதியதாக நீங் கள் பிரசுரித்த கிறீஸ் மனிதன் பற்றிய கட்டுரையும் சிறப்பாக இருந்தது. மொத் தத்தில் நிறைவான படைப்புக்களு டன் இருக்கிறது 'இருக்கிறம்'

– செ.தீபா, சாவகச்சேரி.



(24ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பட்டாணி ராசிக்...

அருகில் வைத்து கடத்தப்பட்டார். தன் வாகன ஓட்டுநருடன் சென்று கொண்டிருந்த பட்டாணி ராசிக்கை வெள்ளைவான் ஒன்று ஏற்றிக்கொண்டு வாழைச்சேனை நோக்கி மின்னல் வேகத்தில் பறந்தது. பட்டாணி ராசிக் புறப்பட்டு ஒரு மணித்தியாலத்திற்கு பின் அவரது தொடர்பு துண்டிக்கப்பட்டது. காணாமல் போனது தொடர்பாக 2010.02.13 ஆம் திகதி முந்தல் பொலிஸ் நிலையத்தில் C.I.B (II) 33L175 எனும் இலக்கத்திலும் 2010.02.14 ஆம் திகதி பொலநறுவை பொலிஸில் M.O.I.B. 113L110 எனும் இலக்கத்திலும் மற்றும் 2010.02.15 ஆம் திகதி C.I.B.1. 389L187 எனும் இலக்கத்திலும் முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன.


நீண்ட நேரமாகியும் பொலநறுவைக்கு பட்டாணி ராசிக் வராமையால் அங்குள்ள அரச சார்பற்ற நிறுவன உறுப்பினர்கள் வீட்டுக்கு அழைப்பெடுத்துப் பார்த்தனர். அங்கும் இல்லை. கலவரமடைந்த குடும்பத்தினர் இது தொடர்பாக அநுராத புரம் மற்றும் புத்தளம் பொலிஸ் நிலையங் களில் முறைப்பாடு செய்தனர். நாட்களும் வாரங்களும் கடந்ததே தவிர அது தொடர் பான எவ்வித தடயமும் கிடைக்கவில்லை. இது தொடர்பாக கருத்து தெரிவித்த பட்டாணி ராசிக்கின் மகன் ராசிக் ரிஸ் வான் (30) 'நானும் அப்பாவுடன்தான் பணிபுரிந்தேன். அவர் யாருக்கும் எவ்வித தொல்லையும் கொடுக்கவில்லை. அப்பா 2010 பெப்ரவரி 11ஆம் திகதி கடத்தப்பட்டார். இது திட்டமிட்ட ஒன்று என்பது இப்போது தெளிவாகியுள்ளது.

15ஆம் திகதி அப்பாவின் தொலை பேசியிலிருந்து 'சீக்கிரம் வருவேன்' என குறுந்தகவல் ஒன்று வந்தது. அதன்பின் எனது தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தி அப்பாவை விடுவிக்க 2 கோடி ரூபாய் கேட்டனர். எனினும் அவருடன் பேச அனுமதிக்கவில்லை. நான் அவர்கள் கேட்கும் அளவு பணம் தருகிறேன். ஆனால், அப்பாவுடன் பேசவேண்டும் என்றே கூறினேன். பின்னர் ஏப்ரல் 3ஆம் திகதி தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தி 'குணசிங்கபுர பள்ளியில் கார்பட்டின் அடியில் பார்சல் ஒன்று உள்ளது அதனை எடு' என்று கூறினார்கள். அதில் அப்பா வின் கடிகாரம், சில சாவிகள், அலுவலக அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன இருந்தன.

இன்னொருநாள் அழைப்பை ஏற்ப டுத்தி புறக்கோட்டைக்கு அழைத்தனர். அன்று நாம் புத்தளம் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுடனேயே சென்றோம். நாம் சென்ற சில நிமிடங்களில் அழைப்பை ஏற்படுத்தி வத்தளை பள்ளியில் ஒரு பார்சல் உள்ளதாகக் கூறி அதை எடுக்கச் சொன்னார்கள். அதில் 2 சிம்கள் இருந்தன. ஒன்றை என்னை எடுக்குமாறும் மற்றை யதை தவிசாளரிடம் கொடுக்குமாறும் கூறினர்' என்று கூறினார்.

அவர்களுக்கு கிடைத்த சிம்களைப் பற்றி புலனாய்வு பிரிவு தொடர்ந்து விசாரணைகளை நடாத்தி வந்தது. இதற் கிடையே இவ்வமைப்பின் 'சிடிசன் கொமிடியின்' ரம்ஸான் என்பவரின் தொலைபேசியில் இந்த சிம்மை உபயோ கித்து அழைப்புக்களை ஏற்படுத்தியமை தெரியவந்தது. அதனடிப்படையில் கடந்த மாதம் 7ஆம் திகதி ரம்ஸான் கிளிநொச்சியில் வைத்துக் கைதுசெய் யப்பட்டார். ஒரு வருடத்திற்கு மேலாக மறைத்து வைக்கப்பட்ட கொலையின் ரகசியங்கள் வெளிவரத்தொடங்கியிருக் கின்றன.

'குணசிங்கபுர பள்ளியில் கார்பட்டின் அடியில் பார்சல் ஒன்று உள்ளது அதனை எடு' என்று கூறினார்கள். அதில் அப்பா வின் கடிகாரம், சில சாவிகள், அலுவலக அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன இருந்தன'



2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி காணாமல்போன பட்டாணி ராசிக்கின் பிரேதம் கடந்த மாதம் 28ஆம் திகதி வாழைச்சேனை, காவத்தமுனை பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண் டிருக்கும் ஒரு வீட்டிலிருந்து அகழ்ந் தெடுக்கப்பட்டது. கை, கால், வாய் என்பன கட்டப்பட்ட நிலையில் துணிகளால் சுற்றி 7 அடி ஆழமான குழியில் புதைக்கப் பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதிலிருந்து இவ்விசாரணைகள் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன. தற்போது புத்தளத்தைச் சேர்ந்த முஹம்மட் நௌசாத், வாழைச்சேனை, காவத்தமுனை யைச் சேர்ந்த முஸ்தீன் ஆகியோர் சந்தே கத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இக்கொலைக்கு பிரதான காரணமாக இருப்பது பணமே. வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் பெயரைச் சொல்லி வெளிநாடுகளிலிருந்து பணம் பெற்று இங்கு என்னவெல்லாமோ நடக்கின்றது. இக்கொலையுடன் பெரும் புள்ளிகள் எல்லாம் தொடர்புபட்டிருப்பதாக தக வல்கள் சிக்கியுள்ளன. அதுவும் மக்கள் கொதித்தெழுந்தமையாலேயே. விரைவில் அவை தகுந்த ஆதாரங்களுடன் வெளிவரும்.

(பட்டாணி ராசிக்கின் பெயர் தவிர்ந்த பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன)



# பட்டாணி ராசிக் படுகொலை

# ஒரு வருடத்தின் பின்னர் வெளிப்பட்ட மர்மம்

கடந்த சில தசாப்தங்களாக இடம் பெற்ற யுத்தத்தில் பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) தோற்றம் பெற்றன. சேவை மனப்பான்மையுடன் சில நிறுவனங்கள் இயங்கினாலும் பலர் பணத்தை தமக்கேற்ற விதத்தில் கையாளும் குறுகிய நோக்கத்துடன் அரசசார்பற்ற நிறுவனங்களை அமைத்து சமூக சேவைகள் செய்வதாகக் காட்டிக் கொள்ள முனைந்தனர். அத்தகைய அரச சார்பற்ற நிறுவனங்களினுள் பல பிரச்சினைகள் ஏற்பட்டன.

அவ்வாறான பிரச்சினைகளில் சிக்கியவர்தான் புத்தளம் மதுரங்குளியில் வசித்து வந்த அரச சார்பற்ற நிறுவன அதிகாரியான பட்டாணி ராசிக். 1958ஆம் ஆண்டு பிறந்த பட்டாணி ராசிக் குடும்பத்தில் மூத்த மகன். தனது சாதாரணதரக் கல்வியை கட்டகடுவ ரோமன் கத்தோலிக்க கல்லூரியில் கற்ற இவர் உயர்கல்வியை புளிச்சங்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கற்றார். 1975 ஆம் ஆண்டு மதுரங்குளி தபால் மா அதிபராக முதன்முதலில் பதவியேற்றார். மதுரங்குளியைச் சேர்ந்த புரம்பார ராசிக் உம்மாவை தன் துணைவியாக ஏற்றுக்கொண்டார்.

இவர்களது வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாக கழிந்தது. தனது 55ஆவது வயதில் ஓய்வுபெறும்போது கிராம உத்தியோகத்தராகவும் பணியாற்றினார். பின் புத்தளம் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் பரிபாலன அதிகாரியாக சேவையாற்றினார். ஏதாவது புதிய தொழில் முயற்சியில் ஈடுபட சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருந்தவருக்கு 2010ஆம் ஆண்டு அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும் நவாஸ் என்பரின் அறிமுகம் கிடைத்தது. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் மற்றும் அவற்றை வெற்றிகரமாக நடத்துவது பற்றி பாரிய அனுபவமுள்ள நவாஸின் சந்திப்புடன் பட்டாணி ராசிக்கின் கனவில் புதிய எதிர்பார்ப்புக்கள் உருவாகத் தொடங்கின.



பட்டாணி ராசிக்

நண்பர்களாக அறிமுகமான இருவரிடமும் பாரிய நம்பிக்கை பிணைப்பு உருவாக அதிகளவு காலம் தேவைப்படவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள், அவற்றின் செயற்பாடுகள் பற்றி இடைவிடாது பேசிக் கொண்டிருந்த அவர்கள் மனதில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான எண்ணம் குடிகொண்டது. இதனடிப்படையில் 'மக்கள் சேவை நம்பிக்கை நிதியம்' என்ற பெயரில் பட்டாணி ராசிக் மற்றும் நவாஸ் உட்பட 5 உறுப்பினர்களுடன் அரச சார்பற்ற அமைப்பொன்று தோற்றம் பெற்றது.

வடக்கு, கிழக்கிலிருந்து புலம்பெயர்ந்து அகதிகளான மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தருவதுமே இந்த அமைப்பின் பிரதான குறிக்கோள். அமைப்பின் சேவையைக் கண்ட பொதுமக்கள் அதில் உறுப்பினராக விருப்பம் கொண்டனர்.





நாளுக்கு நாள் தமது அமைப்பின் உறுப்பினர் தொகையை அதிகரித்துக் கொண்டு மக்கள் சேவை செயற்பாடுகளை முன்னெடுத்தனர். எவ்வித தடையும் இன்றி வெளிநாடுகளில் இருந்து பணம் வந்துகொண்டிருந்தது. அமைப்பின் அனைத்து தீர்மானங்களும் ஸ்தாபக உறுப்பினர்களாலேயே எடுக்கப்பட்டதுடன் நவாஸ் தவிசாளராக இருந்தார். அமைப்பின் தலைமைத்துவம் தவிசாளரிடம் உத்தியோகபூர்வமாக இருந்தது. 2004ஆம் ஆண்டு முதலாவது அதிகாரி கள் சபைக் கூட்டத்தில் புதிய முகாமைத்துவ அமைப்பு முன்மொழியப்பட்டது. அதில் தலைமைத்துவம் மாற வேண்டும் என்றும் அடுத்த தவிசாளராக பழைய உறுப்பினர்களில் வயது கூடியவரே இருக்கவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது. அதன்படி அடுத்த தவிசாளராக பட்டாணி ராசிக் தெரிவுசெய்யப்பட்டார்.

காலங்கள் கடக்கும்போது முகாமைத்துவ அமைப்பில் மாற்றங்கள் தேவை என தவிசாளரால் தீர்மானிக்கப்பட்டு தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டன. அதற்கு பட்டாணி ராசிக்கின் அனுமதியும் தேவைப்பட்டது. அதற்காக அவரைத்தேடி அவர் வீட்டிற்குச் சென்ற அமைப்பின் உறுப்பினர்கள் அமைப்பு மாற்றத்தை அமுல்படுத்த கையெழுத்தை வேண்டி நின்றனர். வேலைப்பழுவில் இருந்த பட்டாணி ராசிக் முன்மொழிவுகளை வாசிக்காமல் அதை கையெழுத்திட்டு அங்கீகரித்தார்.

பட்டாணி ராசிக்கும் நவாஸும் பல விடயங்களில் முரண்பட்டனர். சிற்சில தீர்மானங்கள் காரணமாக இவர்களது நட்பு பாதிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இத்தனை தடைகளுக்கு மத்தியிலும் அமைப்பை தொடர்ந்து நடத்தினர்.

◄ கே.அர்விந்த் ►

இது இவ்வாறிருக்க 2010 ஜனவரி 18 திகதி பட்டாணி ராசிக்கின் கையடக்கத் தொலைபேசிக்கு பரீட்சயமற்ற இலக்கத்திலிருந்து குறுந்தகவல் ஒன்று வந்தது. 'மிஸ்டர் பட்டாணி ராசிக், நாம் புதிய அரச சார்பற்ற அமைப்பொன்றை ஆரம்பிக்க உள்ளோம். அதற்கு உங்கள் ஆலோசனை தேவை. உங்கள் செயற்பாடுகள் மிகவும் பயனுடையவை என நாம் கேள்விப்பட்டுள்ளோம். எங்களுக்கு உதவி செய்ய முடியுமா?' என அச்செய்தி காணப்பட்டது. பல சந்தர்ப்பங்களில் அழைப்பெடுத்து தொலைபேசியினூடாக அறிவுரைகளையும் பெற்றுக்கொண்டனர். அவர்களை சந்திப்பதற்கான நாளொன்றையும் ஒதுக்கிக்கொண்டார்.

CRIME REPORT

அவர் கடைசியாக வீட்டிலிருந்து வெளியேறுமுன் தனக்கு அழைப்பெடுக்கும் அந்த நபர்களிடம் தனக்கு பொலநறுவையில் ஒரு வேலை இருப்பதாகவும் அது முடிந்தபின் சந்திப்பதாகவும் கூறிச் சென்றார். 2010.02.11 ஆம் திகதி காலை 5 மணிக்கு சமீரகமை (முந்தல் பிரதேச செயலக பிரிவு) தனது வீட்டிலிருந்து வெளியேறியிருக்கின்றார். அதேநாள் மாலை 3.30 அளவில் கதுருவெல ஜும்மா பள்ளியின்

(23ஆம் பக்கம் பார்க்க..)

இச்சஞ்சிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிரைவேற் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.